# வாழ விரும்பியவன்

வல்லிக் கண்ணன்

மக்கள் வெளியீடு

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

மக்கள் வெளியீடு

# வாழ விரும்பியவன்

வல்லிக்கண்ணன்

மக்கள் வெளியீடு - இலக்கியம்

எண் - 4 ஏப்ரல் - 1975

லட்சியம் பேசி, சுயநலம் வளர்த்துக் கொள்கிற அலட்சியவாதிகளை வைத்து ஒரு குறுநாவல் எழுத வேண்டும் என்ற என் நினைப்பின் விளைவுதான் இந்த "வாழ விரும்பியவன்"!

வல்லிக்கண்ணன்

தோழன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, மக்கள் வெளியீட்டுக்காக மே. து. ராசுகுமாரால் 28, கச்சாலீசுவரர் தோட்டத் தெரு, சென்னை-600001லிருந்து வெளியிடப்படுகிறது.

பதிப்பாசிரியர்: மே. து. ராசுகுமார்

# வாழ விரும்பியவன்

'மனிதன் மனிதனாக வாழவேயில்லை. வாழ வழியில்லை இந்த நாட்டிலே. நாம் எல்லாம் வாழ்வது ஒரு வாழ்க்கையா? சீ, வாழ்க்கை என்பது இதுதானா? இந்த நாகரிகப் பெருநகரத்தில் எப்படி எப்படியோ நாளோட்டிக் கொண்டு கஷ்டப்படுகிறார்களே பெரும்பாலான மக்கள், அவர்கள் எல்லோரும் 'வாழ்கிறார்கள்' என்று எப்படிச் சொல்வது? இது வாழ்க்கையே இல்லை என்றுதான் நான் சொல்லுவேன்,'

உணர்ச்சிச் சூட்டோடு பேசினான் பாஸ்கரன். அவன் நண்பன் கணேசன் 'ஆமா... நீ சொல்றது சரிதான்.. ஊம்ங்' போன்ற சொற்களை உதிர்த்து, அவன் பேச்சுக்கு உந்துதல் கொடுத்தவாறிருந்தான்.

பாஸ்கரன் உள்ளத்தில் கொல்லுலைச் சூடு கனன்று கொண்டிருந்தது. அவன் தன் வயிற்றெரிச்சலையும் மன எரிச்சலையும் சொற்களாகக் கொட்டுவதில் ஓரளவு திருப்தி காண்பதுபோல் தோன்றியது. சில சமயங்களில் அவன் வெறுமனே பேசுவதுகூட உணர்ச்சிமயமாகப் பிரசங்கம் பண்ணுவதுபோல்தான் தொனிக்கும்.

இப்பவும் அப்படித்தான்.

'ஏய், எதுவுமே சரியாக இல்லை இன்று, மனித வாழ்க்கை என்று சொல்லப்படுகிற ஒன்றிலே. நீ வயிறாறச் சாப்பிட முடிகிறதா தினந்தோறும்? இஷ்டம்போல் இஷ்டப்பட்டவைகளை வாங்கித் தின்னமுடிகிறதா உன்னால்? படாடோபமாக வேண்டாம் ஐயா, ஸிம்ப்ளா, நீட்டா, டீஸன்டா உடைகள் அணிய முடிகிறதா? இதோ நான் போட்டிருக்கிறேனே இந்தச் சட்டை, இதை நான் அணிந்து ஐந்து நாட்களாகின்றன. வேர்வை நாற்றம் எனக்கே அருவருப்புத் தருகிறது. வேண்டுமானால் நானே சோப்புப் போட்டு, உலரவைத்து, அணியலாம்

தான். அது எனக்குப் பிடிக்கவில்லை. சும்மா சோப்புப் போட்டுத் துவைத்தால்மட்டும் போதுமா? அது பளிச்சென விளங்க, நீலத்தில் முக்கி எடுக்கவேண்டும். பிறகு, இஸ்திரி போடவேணும். இதுக்கெல்லாம் காசு வேண்டாமா? காசு-பணம்-ரூபாய்! இதில்தான் இயங்குகிறது இன்றைய உலகம். எதுக்கெடுத்தாலும் ரூபாய் தேவை. காசுகளை கணக்குப் பண்ணிப் பண்ணி ஒவ்வொரு செலவையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிற என்னையும் உன்னையும் போன்றவர்களுக்கு, இந்த வாழ்க்கை என்பதே ஒரு தண்டனையாகத்தான் அமைந்து கிடக்கிறது. நமக்கு நுண்மையான உணர்வுகளும், எண்ணுகிற-சிந்திக்கிற-உள்ளமும் கூர்மையாக இருப்பதனாலே, ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு அனுபவமும் நம்மை வேதனைப் படுத்துகின்றன; நீங்கா உளைச்சல் தரும் கொடுமைகளாக இருக்கின்றன. இப்போ உன்னைச் சந்திப்பதற்கு முன்பு தான் ஒரு ஓட்டலுக்குப் போயிருந்தேன். ஏதாவது சாப்பிடலாம் என்று நினைப்பு. சாப்பிட வேண்டும் என்ற பசித்தேவை, ஆனால் பையில் பணம் இல்லை. வெறும் காப்பிக்கு ஆர்டர் பண்ணி விட்டுக் காத்திருந்தேன். எதிரே ஒருவன் இருந்தான். பூரிகிழங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மசால் தோசை வந்திருந்தது. அதை முடித்துவிட்டு அவன் ஒரு ஸ்பெஷல் வடைக்குச் சொன்னான். முடிவில் காப்பி. எனக்கும் அவனுக்கும் ஒரே சமயத்தில்தான் பில் வந்தது. அவன் ஒரு ரூபாய் தொண்ணூற்றஞ்சு பைசாவுக்குச் சாப்பிட்டிருந்தான். என்னிடம் ரெண்டு இட்டிலி, ஒரு வடை, காப்பிக்குக் கூடச் செலவு செய்ய வக்கு இல்லை. என்னைவிட மோசமான நிலைமையில் உள்ளவர்கள் எத்தனை எத்தனை பேரோ இருக்கிறார்கள், இந்தப் பெரும் நகரிலே. அதுவும் எனக்குத் தெரியும். ஸிங்கின் சாயாவை ஊற்றி வயிற்றுத் தீயை அணைக்க முயல்கிறவர்களும், பீடியைப் புகைத்துப் பசியை மந்தவைக்க முயல்கிறவர்களும் எவ்வளவோ பேர்......'

கணேசன் குறுக்கிட்டான்: 'எவனோ ஒருவன் ஒருவேளைக்கு ஒண்ணு தொண்ணூத்தஞ்சு செலவளித்துச் சாப்பிட்டான் என்று கொதிப்படைகிறாயே! ஒருவேளைக்கு பத்தும் பதினஞ்சுமாக—ரூபாய்கள்தான் — அலட்சியமாக வீசி, ஜம்பமாகச் சாப்பிட்டோம் என்று பேர் பண்ணி, ஹாயாக வெளியேறுகிறவர்களும் இந்த ஸிட்டியில் இருக்கிறார்கள். அப்படிச் செலவு பண்ண வசதி செய்துதருகிற பெரிய, நாகரிக ஓட்டல்களும் இங்கே இருக்கின்றன.'

'அது முறையல்ல, சரியல்ல என்பதைத்தான் நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பணம், சதிராடு தேவடியாள் போல் சிலர் பக்கமே அருள்புரிந்து கொண்டிருக்கிறது. மிகப்

பலர் அன்றாட அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூட வாய்ப்பும் வசதியும் பெறாமல் — பெற முடியாமல் வேதனைப் படுகிறார்கள்.'

பாஸ்கரன் பெருமூச்செறிந்தான்.

அவர்கள் இருவரும், போக்குவரத்து மிகுதியாக இருந்த ஒரு பெரிய ரஸ்தாவில் சாவகாசமாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு 'வேலை' என்றுஎதுவுமில்லை. தேடிவந்து சேராத — எங்கே எப்படிக் கிடைக்கும் என்றே தெரியாத — ஏதாவது ஒரு வேலையைத் தேடிக்கொண்டிருப்பதாகத்தான் பாஸ்கரனும், அவனைப்போன்ற நண்பர்களும் சொல்லித் திரிந்தார்கள்.

பாஸ்கரனுக்கு இருபத்து நான்கு — இருபத்தைந்து வயசிருக்கலாம். அவன் நண்பர்களும் 'அவனோடு ஒட்டை' என்று சொல்லவேண்டிய, சமவயசினராகவே இருந்தனர். 'கொஞ்சம் முன்னேப் பின்னே' ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷம் வித்தியாசம்தான் இருக்கும்.

பாஸ்கரன் கல்லூரியில் இரண்டு வருஷங்களைப் போக்கி விட்டு, பிறகு படிப்புக்கும் தனக்கும் ஒத்துவராது என்று சொல்லி, வேலை வேட்டையில் ஈடுபட்டு, பலவித அனுபவங்களைப் பெற்றிருந்தான்.

கணேசன் சும்மா ஜாலியாகப் படித்துக் கொண்டிருந்தான். தன் வாழ்வில் எவ்வளவு காலத்தைப் பள்ளிப்படிப்பில் கழிக்க இயல்வது சாத்தியமோ, அத்தனை காலமும் கல்லூரி மாணவனாகவே வாழ்ந்துவிடுவது என்கிற ஒரு நோக்கம் அவனுக்கு இருந்தது போலவே தோன்றியது! எந்த வருஷத்தில் பார்த்தாலும், அவன் 'காலேஜ் ஸ்டூடன்ட்' ஆகவே இருந்து ஏதோ படிப்புப் படித்துக்கொண்டிருந்தான்.

'படித்த பிறகு என்ன செய்வது என்று அவன் இன்னும் தீர்மானிக்கவில்லை. அதனால்தான் சும்மா ஜாலியாப் படித்துக் கொண்டே இருக்கிறான்' என்று பாஸ்கரன் அவனைப் பற்றிக் குறிப்பிடுவது உண்டு. அது சரியான கணிப்பாகவே இருக்கவும் கூடும்.

அவசரமும் பரபரப்பும் புரளுகிற நாகரிகப் பெரும் ரஸ்தாவில் வேண்டாத்தகாத சேர்மானங்களும் இடம் பெற்றுக் கிடந்தன. பாதசாரிகள் நடைமேடை மீதுதான் நடந்துபோக வேண்டும் என்று சட்டம் கட்டாயப்படுத்தினாலும்கூட, நடப்பதற்கு என்று ஏற்பட்ட 'பேவ்மென்டு'கள், பெரும்பாலும் மனிதர்கள் நடந்து செல்வதற்கு அருகதையற்றனவாகவே இருந்தன. அசிங்கப் பரப்பாக மாறிக்காணப்படும் 'பிளாட்

பாரங்கள்' மீது நடக்காமல், ரஷ்தாவின் ஓரங்களில் நடப்பதும் சிரமமான காரியமாகத்தான் இருந்தது.

இரண்டு தினங்களுக்கு முன் பெய்த மழை ரோடை அசிங்க விரிப்பாக மாற்றியிருந்தது. அங்கங்கே பள்ளங்களில் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. கார்களும் பஸ்களும் வேகமாக ஓடுகிறபோது அந்நீர் அள்ளிச் சிதறித் தெறிக்கப்படுவதும் சகஜமாயிற்று.

பாஸ்கரனும் கணேசனும் எச்சரிக்கையாகத்தான் நடந்தார்கள். தண்ணீர்தேங்கிக் கிடக்கும் இடங்களில் நின்று, கவனித்து, விலகி, வேகமாகச் சென்றார்கள். என்றாலும், ஒரு இடத்தில், வெகு வேகமாக வந்த கார் ஒன்று, அவர்கள் விலகி ஒதுங்குவதற்குள், அவர்களுக்குச் சேற்றுநீர் அபிஷேகம் செய்துவிட்டு அவசரமாக முன்னேறி ஓடியது.

பாஸ்கரன் சட்டைதான் அதிகம் பாதிக்கப்பட்டது. அவன் மழைநீர் பட்டுக் களங்கமுற்ற சட்டையைப் பார்த்தான்; வேகமாக ஓடும் காரை முறைத்தான். கோபம் கொப்புளிக்க, 'டாய், காரிலே பறக்கும் காசுக்கார வீணனே! என்னத்தை வெட்டி முறிக்க இவ்வளவு வேகமாய் ஓடுறே?' என்று கத்தினன்.

அவன் ஆத்திரம் தணியவில்லை. மேலும் கூவினன்: 'காரில் போனல் தான் என்ன? ரோட்டில் நடப்பவர்களும் மனிதர்களே என்ற உணர்வு அந்த வீணன்களுக்கு இல்லாமலா போகவேண்டும்? காரில் ஏறி உட்கார்ந்ததும் தாங்கள் உயர்த்த பிறவிகள் என்ற திமிர் நினைப்பு இவன்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. ஸ்டீயரிங்கைப் பிடித்துவிட்டாலோ, வேறு எந்த உலகத்திலிருந்தோ வந்துவிட்டதைப்போல நடந்துகொள்கிருங்க. வரவர, கார்கள் பெருத்துப்போச்சு. எவ்வளவு கார்கள்! எத்தனை தினுசுகள்! பகட்டி மினுக்கும் சிங்காரியின் பாலிஷ் பளபளப்போடு கார்கள் மிதக்கின்றன; நீந்துகின்றன; பறக்கின்றன! ரோடுகளில் அவை நிதானமாகப் போகவில்லை. அவற்றினுள் இருப்பவர்களும் நிதானத்தோடு இருப்பதில்லை...'

அருகில் ஒரு ஓட்டல் தென்படவும், 'வாரும் பிரதர், ஏதாவது சாப்பிட்டு விட்டுப் போகலாம்!' என்று கணேசன் அழைத்தான். 'சூடாக ஸம்திங் உள்ளே தள்ளவேண்டியது அவசியம் தான். வெறும் காப்பியையாவது ஊற்றிவைக்கணும். இல்லேன்னு கபகபன்னு கொதிப்பு ஏறிக்கிட்டேதான் போகும்!' என்று கூறியவாறே பாஸ்கரன் அவனோடு போனன்.

# 2

'எனக்கு ஒரு வேலை வேண்டும். திட்டமான மாத வருமானத்துக்கு வகை செய்கிற கௌரவமான ஒரு வேலை. அது எங்கே இருந்தாலும் பரவாயில்லை. தனியார் நிறுவனமா, பொதுப் பணித் துறையா, அரசின் சிறப்பு வாரியம் எதிலாவதா என்று நான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கவில்லை. எனது கவலை எல்லாம்—எனக்கு ஒரு வேலை! நல்ல சம்பளத்தில் உடனடியாக ஒரு வேலை!'

சபாபதி தன் எண்ணத்தைத் திடமாக அறிவித்தான். பாஸ்கரன், கணேசன், கைலாசம், நடராஜன் என்று 'ஒரு இனப் பறவை'களாகக் கூடியிருந்தபோது தான் சொன்னான்.

'உமக்கு மட்டும்தான் வேலை உடனடியாக வேணுமாக்கும்? எனக்கும், இவனுக்கும், இன்னும் எத்தனையோ பேருக்கும் வேலை கட்டாயம் கிடைத்தாக வேண்டும் என்ற நிலைமைதான்' என்று நடராஜன், கைலாசத்தையும் சுட்டிக் காட்டிப் பேசினான்.

'என்னைப் பொறுத்தவரை வேலை என்பது முக்கியமான விஷயமாகத் தோணலே. எம். ஏ. ஐ. கம்ப்ளீட் பண்ணிவிட்டு, பிஎச்டிக்கு ட்ரை பண்ணலாம்னு இருக்கிறேன். ஆராய்ச்சி பண்ணி, தீஸிஸ் தயாரிக்கிறதிலே மூணு வருஷம் போயிடும். அதுக்கப்புறம் அல்லவா வேலையைப் பற்றி யோசிக்கணும்!' என்று கணேசன் தெரிவித்தான்,

'வேலை இல்லாமல் சும்மா இருக்கிறவனுக்கு வீட்டிலும் உரிய கவனிப்புக் கிடைப்பதில்லை. வெளி இடங்களிலும் மதிப்பு இல்லை. அவனை யாருமே மதிப்பது கிடையாது. மேலும், வேலை என்று ஒன்று இருந்து, சம்பளம் என்று ஒரு தொகை மாதாமாதம் வந்து கொண்டிருந்தால், அதன் மௌசே தனி. அப்போ நாம் இப்படி டல்லடிச்சுப்போய் இருக்கமாட்டோம். சுரத் இல்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கமாட்டோம்.

இஷ்டம்போல் செலவு செய்து, ஜம்னு டிரஸ் பண்ணிக்கொண்டு சினிமா—டிராமா—டான்ஸ் பெர்ஃபார்மன்சுன்னு ஜாலியாத் திரிந்து கொண்டு ஆகா!'' என்று தன் மன ஓட்டத்திலேயே சொக்கிப் போனன் சபாபதி.

'அப்போ காதல் சிட்டுகளும் நம்மைத் தேடிவரக்கூடும். அல்லது நாமே வலைவீசிக் காதல் பறவைகளைப் பிடித்து வசப் படுத்தி ஜாலி பண்ண வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளலாம்' என்று கைலாசம் கூறினன். அவனுக்கு ஒரு காதலி இல்லாதது நிரந்தர மனக்குறையாக அமைந்திருந்தது.

'நான் வாழ ஆசைப்படுகிறேன். ஒரு இனிய பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு இல்லற இன்பங்களை அனுபவிக்க விரும்புகிறேன். அதற்கு முதல்படியாக வேலை கிடைத்தாக வேண்டும்' என்ருன் நடராஜன்.

'யார் தான் வாழவிரும்பவில்லை? யார்தான் வாழ்க்கைத் துணை நலம் ஆக ஒரு இனிய பெண்ணை சேர்த்துக்கொள்ள ஆசைப்படவில்லை? ஆனல், அப்படிச் சேர்ந்து வாழ்க்கை நடத்துகிறவர்கள் எல்லோரும், எப்போதும், சந்தோஷமாக வாழ்கிருர்களா? வாழ முடிகிறதா—இன்றைய சமுதாயத்திலே? அதுதான் என் கேள்வி!' சவாலிடுவதுபோல் கேட்டுவிட்டு, ஒவ்வொருவர் முகத்தையும் கூர்ந்து நோக்கினன் பாஸ்கரன்.

'ஆரம்பிச்சிட்டாரய்யா தோழரு! இனிமேல் ஒரே அறுவை தான்' என்று கைலாசம், பக்கத்தில் இருந்த நடராஜன் காதில் முணமுணத்தான்.

'ஒருசமயம் ஒரு நண்பர் சொன்னர், எல்லோரும் வெள்ளை யும் சள்ளையுமாக, சலவை மடிப்புக் கலையாமல், டிரஸ் செய்து கொள்ளவே ஆசைப்படுகிருேம்; ஆனல், நம்மில் யாருமே சலவைத் தொழிலைச் செய்யத் தயாராக இல்லை என்று. அது உண்மையேயாகும். நாம் சுகமாக, வசதியாக, இன்பங் களோடு வாழ ஆசைப்படுகிருேம். அதற்கு உதவக்கூடிய கௌரவமான வேலை நமக்கு வேண்டும் என்று விரும்புகிருேம். இது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனல், நண்பர் களே, அதேவேளையில் மற்றவர்கள்- சாதாரண மனிதர்களில் பலப்பலர் எப்படி வாழ்க்கை நடத்துகிருர்கள்; அவர்கள் வாழ்வதும் வாழ்கைதான என்று நீங்கள் சிறிதேனும் எண்ணிப் பார்த்தது உண்டா என்றுதான் கேட்கிறேன். கடைகளில் 'எடுத்துக் கை நீட்டி'களாக, ஆபீஸ்களில் ஏவல் புரியும் பையன்களாக, இன்னும் எப்படி எப்படி எல்லாமோ வேலை பார்க்கிற எண்ணற்ற பேர்கள், அவர்கள் பெறுகிற சம்பளத் திலே, எப்படிச் சாப்பிட்டு எவ்வாறு ஜீவிக்க முடிகிறது என்று

நான் சிந்திப்பது உண்டு. இவர்கள் போக, ரோடு ஓரங்களில் செருப்புத் தைத்தும், பூட் பாலிஷ் செய்தும், கைக் குட்டைகள் விற்றும், கறுப்புக் கயிறு 'பாட்சா உருண்டை' போன்ற சிறு சிறு பொருள்களை வியாபாரம் செய்தும், அதில் கிடைப்பதைக் கொண்டு வாழ்க்கை நடத்திவிடலாம் என்ற நம்பிக்கையோடு உலாவுகிறார்களே, அவர்களுக்குத் தினசரி என்ன கிடைத்து விடும்? அதைக்கொண்டு அவர்கள் என்னத்தைத் தின்று எப்படி உயிரோடு இருக்க முடிகிறது என நான் எண்ணி வியப்பதுண்டு. இதனால் என் உள்ளத்தில் கனலும் வேதனை மேலும் அதிகரிக்கத்தான் செய்கிறது. இவர்களும் மனிதர்கள் தானே? அவர்களுக்கும் சகலவிதமான ஆசைகளும் உணர்ச்சித் தவிப்புகளும் துடிப்புகளும் இருக்கும்தானே? ஏய், உயர்ந்த வகுப்பில் அமர்ந்து சினிமாப் பார்க்க வேண்டும் என்ற சாதாரண எண்ணம் இவர்களுக்கும் உண்டாகாதா என்ன? ஜம்மென்று டிரெஸ் செய்து கொண்டு ஜாலியாகத் திரியவேண்டும் என்று நம் மனசில் எழுகின்ற ஆசைகள் இவர்கள் மனசிலே குமிழியிடாதா என்ன? இன்பத் துணையோடு சந்தோஷமாகக் காலம்கழிக்க வேண்டும் என்ற இயல்பான மனித விருப்பம் இவர்களுக்கும் உண்டாகாதா என்ன? ஏ ஏய், பகட்டான சுந்தரியின் பவுடர் தடவிய கன்னங்கள் போல மினு மினுத்துக் கவர்ச்சிக்கிற ஆப்பிள்களையும் ஆரஞ்சுகளையும், ஸீசனல் பழங்களையும் தின்று ருசித்து மகிழ வேண்டும் என்ற ஏக்கம் இவர்களுக்கு எழவே எழாதா? இப்படி இயல்பாக எழுகின்ற இயல்பான விருப்பங்களையும் ஆசைகளையும் நிறை வேற்றிக்கொள்ள முடியாத நிலையிலேதான் இருக்கின்றார்கள் ஏகப்பட்ட பேர். அவர்கள் உழைக்காமல் இல்லை. உடல் ஓய உழைக்கின்றார்கள். கூலி என்று என்னவோ பெறுகின்றார் கள். இதில் ஏதாவது அர்த்தம் உண்டா, நியாயம் உண்டா? அதேநேரத்தில், வசதிகள் வளங்கள் இனிமைகள் அனைத் தையும் சுலபமாக, இஷ்டம்போல் அனுபவிக்கக்கூடிய ஒரு நிலையில் இருக்கின்ற ஒருசிலரது தன்மைகளையும் வாழ்க்கை யையும் எண்ணுகின்ற போதெல்லாம் என் உள்ளம் கொதிக்கத் தான் செய்கிறது!...'

'ஜில்னு கிரேப் ஜூஸ் சாப்பிடுறதுதானே!' என்று கிண்டலாகக் கூச்சலிட்டான் கைலாசம்.

'ஃப்ரூட் ஸாலட் சாப்பிடும் வேய். வயிறும் ரொம்பும், குளிர்ச்சியும் ஏற்படும், இனிமையாகவும் இருக்கும்' என்று நடராஜன் கிண்டை பண்ணினான்.

பாஸ்கரனுக்கு 'சப்பென்றாகி' விட்டது. 'இதுதான் உங்களிடம். எதையுமே ஸீரியஸாத் திங்க் பண்ணுவதே

இல்லே. திங்க் பண்ணுகிறவனேயும் காலேவாரிவிட்டு விடுறது! என்று சீறினன்.

'திங்க்காத திங்க்கெல்லாம் திங்க்கி திங்க்கி...' என்று இழுத்தான் கைலாசம். 'எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி என்ற பாட்டின் மறு உருவம் இது' என்று விளக்கமும் செய்து மகிழ்ந்தான்.

'பிரதர், நீர் ஒரு பிரசங்கியாக மாறலாம். அல்லது, நடிகர் ஆகிவிடுமய்யா. வசதிகளேச் சுலபமாய்த் தேடிக்கொள்ள முடியும். பெயர் வந்து விட்டால், வசதிகளே உம்மைத் தேடி வரும்' என்று சபாபதி கத்தினன்.

'சட்! உங்களோடு இதுதான்! என் மூடே கெட்டுப் போச்சு இப்போ' என்று எரிந்து விழுந்துவிட்டு அந்த இடத்திலிருந்து நகர்ந்தான் பாஸ்கரன்.

மற்றவர்கள் விசிலடித்ததும், கைதட்டியும், 'லாரலப்பா—லாரலப்பா—லாரப்பல்லா' என்று பாட்டுப்பாடியும் அவனே வழி அனுப்பி வைத்தார்கள்.

# 3

பாஸ்கரன் உணர்ச்சிவசப்படுகிறவன். கூர்ந்து நோக்கும் இயல்பினன். விசாலப்பார்வையால் உலகையும் மனிதர்களையுமே விழுங்கிக்கொண்டிருந்த, அவனது உள்ளம் சதா விழிப்புற்றிருந்தது. எனவே பார்வை மூலம் மனசில் பதிந்த ஒவ்வொன்றும் அவனில் உணர்வுச் சலனங்களையும் சிந்தனைச் சுழிப்புகளையும் உண்டாக்கி வந்தது.

அவன் முரட்டுத் துணிச்சல் உடையவனாகவும் இருந்தான். அதனால் சில சமயங்களில் உணர்ச்சி வேகத்தின் உந்துதலால் அவன் விசித்திரமான—விபரீதமான—ஆனால், தனக்கு மிகவும் சரியானது என்று தோன்றிய—செயல்களை உடனடியாகச் செய்து முடிக்கக் கூசுவதில்லை. தனது மனித உள்ளம் தூண்டுகிற மனிதநேயமான காரியங்களே அவை; அவற்றை அப்படி அவன் செய்வதில் தவறு எதுவுமே இருக்கமுடியாது என்று வாதிடும் இயல்பும் அவனிடம் இருந்தது.

அவனுடைய இந்தப் போக்கு அவனை ஆபத்தில் மாட்டி வைத்து விடும்; அவன் நிதானமாக நடத்து கொள்ள வேண்டியது அவசியம் என்று பாஸ்கரனை நன்கு அறிந்தவர்கள் அவனுக்கு எடுத்துக் கூறத் தவறியதில்லை.

அப்போதெல்லாம் அவன் வாய்விட்டு உரக்கச் சிரிப்பது வழக்கம். கண்ணாடிக் கிண்ணங்களை உராய்ந்து ஒலி எழுப்புவது போன்ற ஒரு தொனியில் சிரிப்பது பாஸ்கரனுக்குப் பிடித்த விஷயங்களில் ஒன்று. களங்கமற்றுக் குதித்துப் புரண்டோடும் சிற்றோடை மாதிரி எந்நேரமும் உருண்டோடிச் சிதறத் தயாராக இருந்தது அந்தச் சிரிப்பு.

தனக்குச் சரி என்று பட்டதை வெற்றிகரமாகச் செய்து முடித்ததும் அவன் கலகலத்துச் சிரித்து மகிழ்வான். பார்க்கிறவர்களுக்கு அது சிறுபிள்ளைத்தனமாகவோ, வெறித்தனமாகவோதான் படும். அவர்கள் எண்ணத்தை அறிந்ததும் அவன் மேலும் பலமாகச் சிரித்துக் களிப்பான்,

'சந்தோஷமாக இருக்க வேண்டும். அதுதான் வாழ்க்கையின் நோக்கமாக அமைய வேண்டும். உள்ளத்தில் சந்தோஷம் ஊற்றெடுக்கிறபோது, தானகவே சிரிப்பு பொங்கித்தெறிக்கும். வாய்விட்டு பொன் நாணயங்களைக் குலுக்கி விசிறுவதுபோல், சிரிப்பதற்குக்கூடவா தயக்கம்? அல்லது பயம்? கலகலவெனச் சிரிப்பதற்குக்கூடக் கூசுகிறவர்கள், வெட்கப்படுகிறவர்கள் வேறு எதைத் துணிந்து செய்து விடுவார்கள்?' என்றும் அவனது தோரணையில் நீட்டி முழக்குவதும் பாஸ்கரன் சுபாவம் தான்.

— ஒரு முறை பாஸ்கரன் தெருவழியே போய்க் கொண்டிருந்தபோது, சோனியான சிறுவன் ஒருவனை ஒரு தடியன் வம்பு பண்ணி, அடி கொடுப்பதைக் காண நேரிட்டது. இவன் தன் வழியே போகாமல், 'ஏன்யா அவனை அடிக்கிறே?' என்று குறுக்கிட்டான். 'அது என் இஷ்டம். உனக்கென்ன?' என்று திமிராகப் பதிலளித்தான் தடியன். பொடிப்பயலை தடிமாடாட்டம் இருக்கிறவன் அடிக்கிறதாவது என்று அவன் மனம் சீறியது. உடனேயே பாஸ்கரன் தடியன் முதுகில் ஓங்கி இரண்டு அறை கொடுத்தான். 'ஏய் என்ன நீ' என்று முறைத்தபடி திரும்பிய தடியனுக்கு மேலும் குத்துகள் விடத் தயாராய் நின்றபடி பாஸ்கரன் சிரித்தான். 'இது என் இஷ்டம். பொடியனை தடியன் அடிப்பது எனக்குப் பிடிக்கலே. அதுதான்!' என்று சொன்னன். இன்னும் பலக்கச் சிரித்தான். கைகளைத் தேய்த்தபடி முன்னே நடந்தான். இவன் போக்கையும் சிரிப்பையும் கண்டு திகைத்து நின்று விட்டான் தடியன்.

— சைக்கிள்வாலா ஒருவன் சுமை தூக்கிச் சென்ற சாதாரண நபர் ஒருவன்மீது இடித்துவிட்டான். அவன் சரியாகப் பார்த்து நடக்கவில்லை என்று வேறு சண்டை போட்டான். பேச்சு வளர்ந்தது. கூட்டமும் கூடியது. அங்கே நடைமேடை மீது நின்று பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரனுக்கு 'எல்லாமே அசிங்கமான காரியம்!' ஆகத் தோன்றியது. மிடுக்காகப்போய், சைக்கிள் சக்கரங்களின் காற்றைத் திறந்து விட்டுவிட்டு, 'செய்கிறதையும் செய்துபோட்டு, வம்புச் சண்டை வேறு வலிக்கிறியே! அதுக்காகத்தான் இந்தத் தண்டனை!' என்ருன். சிரித்தான். கூடி நின்றவர்களில் பலரும் அவன்கூடச் சேர்ந்து சிரித்தார்கள். 'பின்னே என்ன! நடக்கிறவங்க மட்டும்தான் பார்த்து நடக்கணும்; சைக்கிள், கார், மோட்டார் பைக் இதுகளிலே போறவங்க இஷ்டம்போல் கண்ணை மூடிக்கொண்டு போகலாம்னு நினைக்கிருங்க. இது என்ன நியாயம்?' என்று கேட்டான் பாஸ்கரன்.

—ஒரு டாக்சி ட்ரைவர் அப்பாவியான பயணியோடு வாதாடிக் கொண்டிருந்தான். பிரயாணிக்காகப் பரிந்து பேச முன்வந்தான் பாஸ்கரன். டாக்சியில் ஏறி உட்கார்ந்துகொண்டு

'விடு போலீஸ் ஸ்டேஷனுக்கு; அங்கே போய் முடிவு பண்ணிக்கு வோம்' என்ருன். வீண் வம்பு என்னத்துக்கு என்று டிரைவரும் பயணியும் சமரசமாய்ப் போனுர்கள். இவன் ரசித்துத் தனது சிரிப்பைக் கலகலவெனப் புரளவிட்டான்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்! பஸ்ஸில் பிறருக்காகப் பரிந்து இவன் கண்டக்டரோடு எத்தனையோ முறை சண்டைக் குப் போயிருக்கிருன். தெருவில் இரவு வேளைகளில், குடித்து விட்டு வந்து கூச்சலிட்டுக் குழப்பம் செய்து பிறர் தூக்கத்தைக் கெடுப்பவர்களோடு சண்டையிட்டு அவர்களை அப்புறப்படுத்திய —அல்லது, அமைதியாய்—படுக்கவைத்த — முறைகள்தான் எத்தனை! அமைதியைக் கெடுத்து அநாகரிகமான முறையில் நடந்துகொள்கிருர்கள் என்று, அக்கம் பக்கத்து வீடுகளில் ஏசிப்பேசிக் சண்டையிடும் புருஷன் பெண்டாட்டி விவகாரங் களில் கூட இவன் தலையிட்டிருக்கிருன் ..

ஏன் இவன் இப்படி எல்லாம் நடந்துகொள்கிருன் என்று மற்றவர்கள் திகைப்பது போலவே, அவனும் வியப்படைந் திருக்கிருன் ஏன் தான் இந்த ஜனங்கள்இப்படி எல்லாம் நடந்து கொள்கிருர்களோ என்று.

'இவர்கள் அறிவு விழிப்பு பெருததுதான் காரணம். மனி தத் தன்மையோடு வாழக் கற்றுக்கொள்ளாததுதான் காரணம். மனிதராக வாழ விரும்பி, முயற்சி செய்யாததுதான் காரணம். ஏன் வாழ்க்கை இப்படி எல்லாம் அமைந்து கிடக்கிறதும்' என்று அவனுள் எண்ணங்கள் அலைமோதும்.

'நாடு போற்றும் நல்லதம்பி'களாக வெளிச்சம் போட முயலும் திரைப்பட ஹீரோக்கள் சிலரை இவனும் பின்பற்ற முயல்கிருன் போலும் என்று எவரும் பாஸ்கரனை ஐயுற முடி யாது. அவனது சுபாவங்களை அறிந்தவர்கள், அவனுள் குறு குறுக்கும் தர்ம நியாயத்தின் சீற்றமே இத்தகைய செயல் களாக மலர்கின்றன என்பதை எளிதில் உணர்ந்துகொள் வார்கள்.

அவனது பேச்சுக்களில் ஒரு ஆவேசம் இருந்தது. அவன் உணர்ச்சிகளில், தனி வேகம் தெரிந்தது. அவன் செயல்களில் ஒரு நியாய உண்மை வெளிப்பட்டது. அனைத்தினும் மேலாக, அவன் முகத்தில் ஒரு கவர்ச்சியும், கண்களில் தனி அறிவொளி யும் சுடரிட்டன. இவை எல்லாம், அவன் எதிர்நின்ற அந்த நேரத்துக்கேனும், மற்றவர்களை அவன்பால் வசீகரித்தன. அவனை வியக்கவும் பாராட்டவும் வகைசெய்தன.

அவனே தன் இயல்பின்படி செயல்புரிந்தான். தனது மனசின் குரல்தான் தர்மத்தின், நியாயத்தின், சத்தியத்தின் குரல் என்ற நம்பிக்கையும் அவனுள் ஒலித்துக்கொண்டிருந்தது.

4

நாகரிகப் பெருநகரம் பல்வேறு கலாச்சாரங்களின் அவியல் ஆகத் திகழ்வது போலவே, பலப்பல முரண்பாடுகளின் கூட்டு ஆகவும் விளங்குகிறது.

வசதிகள் மிகுந்த, பெரிய வீடுகள், சுற்றிலும் குளுமையும் இனிமையும் பசுமையும் கொலுவிருக்கும் தோட்டங்கள், நெரிசலும் போக்குவரத்து நெருக்கடியும் இல்லாத வீதிகள் கொண்ட பகுதிகள்—நாகரிகமும் வளமும் குடியிருக்கும் தனிப்பகுதிகள் அநேகம் இருக்கின்றன.

அதற்கு மாற்றுபோல், நெருக்கடி மண்டும் குறுகலான தெருக்கள், ஒரு குடும்பமே வசதியாக வாழ்வதற்குப் போதுமானபடி கட்டப்பட்டிராத ஒவ்வொரு வீட்டின் ஒவ்வொரு அறையிலும் 'குடித்தனம் பண்ணுகிற' ஒட்டுக்குடிக் குடும்பங்கள்; ஒவ்வொரு குடும்பத்திலும் ஏகப்பட்ட பேர்கள்—இப்படிக் காட்சி தரும் பகுதிகளும் மிக அதிகமே.

தெரு எதுவும் இருக்க முடியாது என்று எண்ணச் செய்யும் இடைஞ்சலான இடத்திற்கு அப்பாலும் நெளிந்து வளைந்து, மடங்கித் திரும்பி வளர்ந்து கொண்டேபோகிற சந்துகள். அங்கெல்லாம் பொந்துகள் போன்ற மனிதக்குடியிருப்புகள்! நிமிர்தபடி உள்ளே புகமுடியாதவாறு அமைக்கப்பட்ட வாசலும், குனிந்து உட்புகுந்த பின்னும் தாராளமாக நின்று நடந்து, கைநீட்டிக் கைவீசிப் பழகுவதற்கு வசதி செய்து தராத—தாராளமாகக் கால் நீட்டிப் படுக்கவும் இடவசதி இல்லாத—ஒடுங்கிய குடிசைகள், அதனுள்ளும் எப்படியோ ஜீவித்து, கல்யாணம் பண்ணி, இனவிருத்தி செய்து காலம் கழிக்கிற ஆண்கள் பெண்கள்!

இந்தவிதமான குடிசைகூட இல்லாமல், சாக்கடை ஓரத்து நெடுஞ்சுவர் அருகே தட்டியும் கோணியும், பழந்தகரமும் மூங்கிலும், சினிமா பேனர்களும், பெரிய சுவரொட்டிகளும்—எது

எதையோ மறைப்புகளாகவும் தடுப்புகளாகவும்—கொண்டு, 'வீடு' என்று கருதிக்கொண்டு சகலவிதமான காரியங்களையும் அந்த 'அமைப்பு' அல்லது 'மறைப்பு' களினுள்ளேயே செய்து கொண்டு உயிர் வாழ்கிற மனிதப் பிறவிகள் எண்ண முடியாத அளவில் பார்வையில் படுகிறார்கள்.

மேலே 'கூரை' என ஒன்றும், கீழே, பண்படுத்தப்பட்ட 'தரை' என ஒன்றும், சுற்றிலும் சுவர்கள்' சன்னல்கள், கதவு கள், மறைப்புகள் திறப்புகள் என்றும் எதுவுமே தேவைப் படாமல், நடைமேடைகள் மீதும், ரோடு ஓரங்களிலும் தங்கி யிருந்து— சோறு சமைத்துப் படுத்துத் தூங்கின— குடும்பம் நடத்தி பிள்ளைபெற்று வளர்த்து இப்படி ஒரு வாழ்க்கை முறையையும் சர்வசகஜமானதாக ஏற்றுக் கொண்டுவிட்ட மனித ஜன்மங்கள்......

ரோடை அடைத்துக்கொண்டு, கப்பல் மாதிரிப் பெரிய கார் வழுக்கி ஓடுவது, ஒரு வீடுபோன்ற அதனுள் தன்னந் தனி யனாய் ஒருவன் நிம்மதியாய், தானும் தன் யோசனைகளுமாய், புற உலகப் பிரக்ஞை சிறிதும் இல்லாதபடி காட்சி தருவது....

அதேசமயம், முட்டிமோதி இடித்து நெருக்கிக் கொண்டு ஒரு பஸ்ஸில் உள்ளே தொங்கியும், வெளிப்புறம் தொத்திக் கொண்டும், எப்படியாவது குறித்த நேரத்துக்குள் குறிப்பிட்ட இடம் போய்ச்சேர வேண்டுமே என்ற பரபரப்பில் ஏகப்பட்ட பேர் சிரமப்பட்டுப் பயணம் செய்வதும் சகஜமான காட்சியாக இருக்கிறது.

பெரிய பெரிய கட்டிடங்களில், எடுப்பான வெளிச்சங் களின் மத்தியில், கண்ணாடி அலமாரிகளில், கவர்ச்சிகரமான வர்ணங்களிலும் வடிவங்களிலும், வசதி உள்ளவர்களால் சுவைத்துத் தின்று ஜீரணிக்கப்படுவதற்காகக் காத்திருக்கும் தின்பண்ட தினுசுகள் அளவுக்கு அதிகமாகவே தென்படு கின்றன.

அதேபொழுதில், ரோடு ஓரங்களிலும், குப்பைகள் அருகி லும் ஈ மொய்த்தபடி காட்சி அளிக்கும் மலிவான கிழங்கு வகை யராக்களும், காண்பதற்கே அருவருப்பு உண்டாக்குகிற உண வுப் பொருள்களும் ஏழைகளால், தரித்திரங்களால், ஆவலுடன் தின்னப்படுவதையும் காணமுடிகிறது. குப்பைத் தொட்டி களில் விழுகிற எச்சில் இலைகளை அவசரம் அவசரமாக எடுத்து, பசி வெறியோடு பிரித்து, அவற்றில் ஒட்டிக்கொண்டிருக்கும் மிச்சசொச்சங்களை வழிக்கிற, நக்குகிற, மனிதப் பிராணிகள்

இப்படி எத்தனையோ— எத்தனையோ.

வர் சுற்றுவதையே பெரும்பாலான நேரங்களிலும் பொழுதுபோக்கு ஆகக்கொண்டிருந்த பாஸ்கரன் இவற்றை எல்லாம கவனித்தான். கண்டன அனைத்தும் அவனுள் பாதிப்புகளை ஏற்படுத்தின.

— இவை எல்லாம் மாறவேண்டும்; மாற்றப்பட வேண்டும். அதற்கு வழி எப்போது பிறக்கும்?

இதுவே அவனது இதயக் குமுறல் ஆக இருந்தது. அவன் நண்பர்களிடையே பேசுகிறபோதும் இத்தகைய விஷயங்களை, அவை சம்பந்தமான தன் எண்ணங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி வந்தான்.

வேலை இல்லாமல், வருமானம் எதுவும் இல்லாமல், 'வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்ட நிலையிலே' இருப்பதாகச் சொல்லிக் கொண்ட, இளைஞர்களும் பிறர் துயரங்களை— வாழ்வின் கொடுமைகளை— கருத்தில் கொண்டவர்களாய், மனிதாபிமானம் உடையவர்கள்போல்தான் பேசினார்கள்.

அப்புறம் தங்கள் சித்தம்போல் செயல் புரிந்தார்கள். தாங்கள் வசதிகளை அனுபவித்து நன்றாக வாழமுடியாமல் இருப்பதற்குத் தங்கள் பெற்றோர்களே காரணமாவர் என்று குறை கூறினார்கள். தங்கள் செலவுகளுக்குப் போதுமான அளவு பணத்தைத் தங்களுடைய தந்தைமார் தருவதில்லை என்று புலம்பினார்கள். கடன் வாங்கியும். நண்பர்களைச் சார்ந்தும், தங்கள் உல்லாசத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் இன்பம் கண்டார்கள்.

பாஸ்கரனின் நண்பர்களும் விதிவிலக்குகள் அல்லர்.

# 5

கைலாசத்துக்குக் கற்பனை கொஞ்சம் அதிகம். அவன் கதாசிரியன் ஆக முயன்று கொண்டிருந்தான். சில கதைகள் எழுதியிருந்தான்.

தான் எழுதியவற்றை ஒவ்வொரு பத்திரிகைக்கும் அனுப்பி வைப்பது அவனது தொழில். ஒரு பத்திரிகைக்குப் போய் ஒரு கதை அங்கிருந்து திரும்பி வந்ததும், அதை வேறொரு பத்திரிகைக்கு அனுப்ப வேண்டியது. இப்படி ஒரே கதை எல்லாப் பத்திரிகைகளுக்கும் போய் வந்துவிடும். இதில் கைலாசத்துக்குத் திருப்தி—அவன் எழுதுகிற ஒவ்வொன்றையும் எல்லாப் பத்திரிகைகளின் உதவி ஆசிரியர்களும் படித்துவிடுகிருர்கள் என்று.

அவன் பெரிதாக ஒரு நாவல் எழுதத் திட்டம் தீட்டி வந்தான். சதா அதே நினைப்புத்தான் அவனுக்கு. இதில் வருகிற நாயகன் எப்படி இருக்க வேண்டும்; நாயகி எவ்வாறு இருப்பாள், நடந்து கொள்வாள் என்று கற்பனை செய்வதில் அவனுக்கு விசேஷ சுவாரஸ்யம்.

தெருக்களில் திரிகிறபோதும், பஸ்ஸுக்காகக் காத்து நிற்கிறபோதும்—எங்கும், எப்போதுமே, பார்வையில் படுகிற நவயுவதிகளைக் கூர்ந்து கவனிப்பது அவன் இயல்பாயிற்று.

அழகான பெண்களை மட்டுமல்லாது, அலங்காரமாகவும், நாகரிகமாகவும் ஸ்டைலாகவும் டிரஸ் செய்து கொண்டு சஞ்சரிக்கிற சகல பெண்களையும் பார்ப்பது இதம்தரும் காரியம் என்பது அவன் எண்ணம். அதில் ஒரு இன்பம இருக்கிறது. அதனால்தான் பெண்களைப் பார்க்க விரும்புகிறேன் என்று அவன் சொல்லமாட்டான். என் நாவலில் வருகிற பாத்திரங்களை உருவாக்குவதற்காகவே நான் சகலவிதமான பெண்களையும் ஸ்டடி பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்றுதான் சொல்வான.

அவனுக்கு உறவினர் ஒருவரின் முயற்சியின் மீது நாகரிக ஜவுளிக்கடை ஒன்றில் ஒரு வேலை கிடைத்தது. பில் போடுகிற வேலை. அது அவனுக்குப் பிடித்துமிருந்தது. முக்கியமாக அந்தச் சூழ்நிலை கைலாசத்திற்கு ரொம்பவும் உவப்பானதாக இருந்தது.

'பூங்கொடிகளும் மலர்க்கொத்துகளும் பெண்களாக உலாவுகின்றன. பல பெண்களுக்குப் பூக்கடையையும் பழக் கடையையுமே உவமிக்க வேண்டியிருக்கும்' என்று அவன் சொல்வது உண்டு.

ஜவுளிக்கடையில் உட்கார்ந்து கொண்டு தனது மகத்தான நாவலின் அற்புதமான கதாநாயகியைச் சித்திரிப்பதற்குத் துணை புரியக்கூடிய லட்சியப் பெண்ணை என்றாவது கண்டு கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு.

வந்து நிற்கிற, அசைகிற, ஜவுளிகள் வாங்கிப்போகிற பெண்களை ரசித்து வியந்து, மனசில் இஷ்டம்போல் கற்பனை களை வளர்ப்பது அவனது முக்கிய வேலையாகவும், கணக்குப் பார்த்து பில் எழுதுவது ரசமில்லாத உப வேலையாகவும் அமைந்துவிட்டது.

இதனால் கணக்கில் அடிக்கடி தவறுகள் ஏற்பட்டன. முதலாளி கண்டிக்கத் தொடங்கினார். சக தொழிலாளிகள் குறைகூறியும், கேலி பேசியும் அவனது வெறுப்பைச் சம்பாதிக்கலானார்கள்.

ஒருநாள் 'கோமளத் திங்களின் கிடா' போன்ற சிங்காரி ஒருத்தி தன் தோழியுடன் வந்து சேர்ந்தாள். அழகான இளம் நிலவு என்பதைக் குறிக்கும் அந்தச் சொற்றொடர் மலையாளத் திரைப்படம் எதிலோ பாடலில் வருவதாக எப்பவோ அவன் நண்பர் ஒருவர் சொல்லியிருந்தார். அவனது மனசுக்குப் பிடித் திருந்த அப்பிரயோகம் அடிக்கடி அவன் நினைப்பில் எழுந்து தெறிக்கும். கவர்ச்சிகரமான பெண் எதிர்ப்படுகிற போதெல் லாம்தான்! இப்போதும் அது வாலடித்தது.

இந்த ரசனையில் ஈடுபட்டிருந்த கைலாசத்துக்குக் கணக்கில் சிந்தைசெல்லவில்லை. அந்நேரத்தில் ஒரு பில்போட நேரிட்டது.

அதைச் சரிபார்த்தவர் தப்புகளைக் கண்டார். கதைக்குரிய நாயகியைக் கற்பனை செய்துகொண்டு, கண்ணெதிரே இனிய கவிதையாக விளங்கிய சுந்தரியை ரசித்தவாறே கிறங்கியிருந்த இலக்கியப் பித்தனுக்குத் துணி நீளக் கணக்கும் குறித்த விலை நிர்ணய விவரமும் சுவையற்ற அல்ப விஷயங்களாகப்பட்டன. சுரத் இல்லாமலே கணக்குப் பண்ணியதில் தவறு புகுந்துவிட்ட

தில் வியப்பே இல்லை. அவனது ரசனையும் ஈடுபாடும் பணத்திலே குறியாக உள்ள வியாபாரிகளுக்கு என்ன புரியும்! எப்படி விளங்கும்? அவர் எரிந்து விழுந்தார். பில் புத்தகத்தை அவன் மூஞ்சியிலே விட்டெறியாத குறையாகத் தூக்கி வீசினர்.

கைலாசத்தின் முகம் 'செத்துவிட்டது.' இதர சிப்பந்திகள் முன் தான் அவமானப்பட நேர்ந்ததுகூடப் பெரிசாகப்பட வில்லை அவனுக்கு. அந்தச் சுந்தரியின் முன்னே கடைக்காரர் இப்படிப் பண்ணிவிட்டாரே என்ற கொதிப்புதான் அதிகமாயிற்று. ஒரு கலைஞனின், இலக்கியவாதியின் நுண் உணர்வுகளைக் கௌரவிக்கத் தெரியாத—ஏற்று மதிக்க அறியாத—மடச் சாம்பிராணிகள் மத்தியில் தான் இருந்து பணிபுரிய வந்ததே பெரும் தவறு என்று அவன் உள்ளம் குமுறியது.

'கேவலம் சில்லறை விஷயம்! அல்பக் காசுகளை இப்படிப் பெரிது பண்ணி, என்னை அவமதித்து விட்டீரே! உம்ம கடைக்கும் எனக்கும் ஒத்துவராது' என்று சொல்லிக் கும்பிடுபோட்டு விட்டு, சிங்காரியை ஸ்டைலாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, மார்பை நிமிர்த்தி தலையை உயர்த்திக்கொண்டு வெளியேறினன் கைலாசம். அதுநாள் வரை வேலைபார்த்ததற்கு உரிய சம்பளத்தைக் கணக்குப் பண்ணி வாங்கிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எழவேயில்லை

'ஏன்தான் இந்த மனுஷங்க பணத்துக்கு இப்படிப் பறவாப் பறக்கிருங்க என்பது எனக்குப் புரியவே மாட்டேன்குது!' என்று அவனது கலை-கற்பனை-படைப்பு உள்ளம் குறைபட்டுக் கொண்டது. தனது தன்மைகளை உணரத் தவறி விடுகிறவர்களை வெகுவாகக் கண்டித்துக் குறைகூறித்திரியலானன் அவன்.

நண்பன் நடராஜன் வேறு தன்மைகள் கொண்டிருந்தான். சதா சிகரெட் பிடிப்பது, வெற்றிலை போடுவது, நினைத்த போதெல்லாம் ருசிகரமாக டிபன் சாப்பிடுவது, அடிக்கடி சினிமாப் பார்ப்பது என்று பொழுதுபோக்கிவந்தான் அவன்.

புதிது புதிதாக வருகிற திரைப்படங்களைத் தவருது பார்த்துவிடும் அவன் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு நடிகை மீது மோகம் கொள்வது வழக்கமாக இருந்தது. அவளது அழகு, சிரிப்பு, வசீகரத் தன்மைகள் பற்றி நண்பர்களிடம் கதைப்பது அவனுக்கு மகிழ்வு தரும். போன மாதம் 'ஆகா, ஓகோ' என்று புகழ்ந்து மெச்சிய நடிகையை இந்த மாதமும் அவன் பாராட்டி வியப்பான் என்று எதிர்பார்க்க முடியாது. அதே நடிகை நடித்த புதுப்படம் அவனுக்குத் திருப்தி அளிக்காமல்போவதும், அவன் அவளைக் குறைகூறி மட்டமாகப் பேசுவதும் சகஜமாகிவிடும். வேருெரு நடிகை பேரில் அவன்

மோகம் கொண்டு விட்டதே இதற்குக் காரணம் ஆகும். அடுத்த மாதமோ— அடுத்த வாரமோ— இந்த நடிகை காரசாரமாக விமர்சிக்கப்படுவாள். அவன் மனம் இன்னொருத்திக்குப் புகழாரம் சூடி மகிழும். அவள் நலன்களை எண்ணி வியந்து சொக்கிப் போவான் அவன்.

அவன் கையில் பணம் கிடைத்துவிட்டால் தாராளமாய்ச் செலவு செய்வான். அவ்வேளையில் உடன் இருக்கிற நண்பர்களையும் சினிமா பார்க்க அழைத்துச் செல்வான். தன்னிடம் பணம் இல்லாதபோது நண்பர்கள், தெரிந்தவர்களிடம் எல்லாம், அஞ்சு— பத்து— மூணு— ரெண்டு என்று கேட்டு வாங்கிச் செலவு செய்வதும் அவன் சுபாவமாக இருந்தது.

இவ்விதம் பொறுப்பில்லாமலும் திட்டமின்றியும் செலவு செய்து கொண்டிருந்ததனால், அவனிடம் பணம் இருக்கிற நாட்களைவிட இல்லாத நாட்களே அதிகம் இருந்தன. அதனால் அவன் எப்பவும் எவரிடமாவது கடன் கேட்டு வாங்க வேண்டிய நிலைமையே வளர்ந்தது.

இப்படி ஒரு நிலை இருப்பதற்கு நடராஜன் மற்றவர்களையே குறைகூறிக்கொண்டிருந்தான். 'பணம் என்பது செலவு செய்து சந்தோஷங்களைப் பெறுவதற்காகத்தான். இருக்கிறவர்கள் இல்லாதவர்களுக்குச் செலவு செய்ய வேண்டும். தேவை அறிந்து தேவைப்படுகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்த மனோபாவம் நம்மவர்களிடம் எங்கே இருக்கிறது?' என்பான் அவன்.

அடிக்கடி தலையெடுக்கிற சிறு சிறு பொருளாதார மாந்தத்துக்கு ஒரு விளக்கெண்ணெய் சிகிச்சை கண்டுபிடித்துவிட்டதாகப் பெருமைப்பட்டான் கணேசன். ஹைஸ்கூல் மாணவர்களுக்கு 'பிரைவேட் ட்யூஷன்' கற்றுக் கொடுக்கலாம் என்று திட்டமிட்டான். ஒரு பையனுக்குக் கணக்கு, வேறொருவனுக்கு இங்கிலீஷ், இன்னொருவனுக்குத் தமிழ் என்று—கற்றுக் கொள்ள மூன்று பேர் கிடைத்தார்கள்.

ஆரம்பத்தில் இவன் உற்சாகமாய்ப்போய் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தான். போகப்போக அலுப்புத் தட்டியது. இவனது சுதந்திர இயல்புகளுக்குப் பல விஷயங்கள் குறுக்கே நிற்பதாக உணரலானான். ஒரு மணி நேரம் பாடம் கற்றுக் கொடுப்பதும் சிரமமாக, 'கட்டிப் போட்டதுபோல்' தோன்றியது. ஒரு இடத்தில் வீட்டுப் பெரியவர் மரியாதை இல்லாமல் நடந்து கொள்கிறார்; 'நீ, வா-போ' என்ற ரீதியில் பேசுகிறார்; ஏன் நேற்று வரலே; ஏன் இன்னிக்கு லேட்; ஏன் அதுக்குள்ளாற ட்யூஷனை முடித்து விட்டே என்றெல்லாம் கேட்கிறார்

கண்டிப்பாக இருக்கிறார்; இந்த இடம் நமக்குச் சரிப்படாது என்று விட்டு விட்டான். இவனே கணக்கில் 'வீக்'; இவனிடம் கணக்குக் கற்றுக்கொள்ள வந்த மாணவன் இன்னும் மோசமாக இருந்தான். 'எவ்வளவு கற்றுக் கொடுத்தாலும் அவனுக்கு விளங்காது' என்று சொல்லி, அந்தப் பையனையும் கைகழுவி விட்டான். சோம்பலாலும், ஊர் சுற்றும் ஆசையினாலும், ட்யூஷனுக்குப் போகவேண்டிய நேரத்துக்குப் பாஸ்கரன் வந்தான், அல்லது நடராஜன் சினிமாவுக்குக் கூப்பிட்டான் என்பது போன்ற காரணங்கள் குறுக்கிட்டதாலும், அடிக்கடி போகாமலே இருப்பதை வழக்கமாக்கினான். அதனால் அந்த வீட்டுக்காரரே 'இவனிடம் கற்று நம்ம பையன் உருப்பட்டாற் போல்தான்!' என்று கருதி இவனை வரவேண்டாம் என ஒதுக்கி விட்டார்.

இதற்காகவெல்லாம் கணேசன் கவலைப்படவுமில்லை. 'விட்டு விடுதலையாகி நிற்கும் சின்னஞ்சிறு சிட்டுக் குருவியைப் போல வாழ வேண்டும். சும்மா பொறுப்புகள், கடமைகள், வேலைகள் என்று இழுத்துப் போட்டுக்கொள்வதில் அர்த்தமே கிடையாது' என்று பேசுவதில் ஆனந்தம் கண்டான் அவன்.

அவனும் அவனைப்போன்றவர்களும் எவர் அறையிலாவது கூடுவார்கள். வம்புப் பேச்சுப் பேசி, கூச்சலிட்டு மகிழ்ந்தார்கள், சீட்டாடினார்கள், சங்கீதம் என்று வாய்ப்பாட்டும் இசைக் கருவி ஒலிகளும் முழக்கிக் களித்தார்கள். போதைப் பொருள்களை உபயோகித்தார்கள். தலை முடியை, தாடியை, மீசையை விதம்விதமாக வளர்ப்பதும், பின் மழிப்பதும் மீண்டும் வளர விடுவதுமாகக் காலம் கழித்தார்கள்.

பாஸ்கரனும் இவர்களில் ஒருவனாகத்தான் இருந்தான்.

## 6

'நகர்ப்புறச் சிற்றூர் ஒன்றில் அருணாசலம் மனைவியுடன் வசித்து வந்தான். பாஸ்கரனின் நண்பர்களில் அவனும் ஒருவன். பாஸ்கரனது நட்பு தனக்குக் கிடைத்திருப்பதை ஒரு பெருமையாக மதித்துச் சந்தோஷப்படும் இயல்பினன். உழைத்துப் பிழைக்கும் தொழிலாளி. கிடைத்ததைக் கொண்டு திருப்தியோடு வாழக் கற்றுக்கொண்டிருந்தான்.

பாஸ்கரன் சில நாட்களுக்கு ஒருமுறை அவன் வீட்டுக்கு வருவான். அங்கேயே சாப்பிட்டு, அருணாசலத்தோடு பேசிப்

பொழுதுபோக்குவான். போவான். சில சமயங்களில் இரவு நேரத்தை அங்கே கழிப்பதும் உண்டு.

பாஸ்கரனுக்குத் திட்டமான வேலை என்று எதுவும் இல்லையாதலாலும், வீட்டிலேயே இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இராததாலும்—வீட்டில் இருந்தால் அம்மாவும் மற்றவர்களும், அவன் பொறுப்பில்லாமல் திரிவதைக் குறிப்பிட்டு தொண தொணத்து உபதேசங்கள் புரிவார்கள் ஆதலாலும்—பெரும்பகுதி நேரத்தை ஊர்சுற்றலிலும், நண்பர்களது அறைகள் வீடுகளிலும் போக்குவதில் உற்சாகம் கண்டுவந்தான்.

இவனைப்போன்ற அன்பர்கள் ஒவ்வொருவராக வந்து, வீண் கதைகள் பேசித் தனது காலத்தையும் பாழ்பண்ணி விடுகிறார்களே என்று வருத்தப்பட்டார் ஒரு பேரன்பர். ஆகவே, தன் படிப்பறையில் சில அறிவிப்புகளைத் தொங்கவிட்டார்.

'நீங்கள் செய்வது ஒன்றுமில்லை என்றால், அதை இங்கே செய்யவேண்டாம்!' 'காலம் பொன்னானது; அதை மண்ணாக்க வேண்டாம்!' 'வருக முக்கிய அலுவல் இருந்தால் அமர்ந்து பேசுக. இல்லையேல், வணக்கம்.' 'நான் கவனித்தாக வேண்டிய பணிகள் மிகப்பல. வம்பளந்து வீண்பொழுது போக்குவது அவற்றில் ஒன்று அல்ல' என்றெல்லாம் அவ்வறிக்கைகள் கூறின.

அவற்றைப் பார்ப்பதற்காகவும், பிறகு அவைகளையும் அவரையும் பற்றிக் கேலியாகப் பேசிச் சிரிப்பதற்காகவும் நண்பர்கள் அவரைத் தேடிப்போய்க் கொண்டுதானிருந்தார்கள்.

அதனால் அந்தப் பேரன்பர், வந்தவருடன் ஐந்து நிமிஷ நேரம் பேசிவிட்டு. 'நேரமாகிறது, போய் வாருங்கள்' என்று சொல்லி அனுப்பிவைப்பதை வழக்கமாக்கிக் கொண்டார்.

'என்னைக் காண வருகிறவர்கள் என்னைக் கௌரவிக்கிறார்கள்; என்னைக் காண வராதவர்களே என்னை மகிழ்விக்கிறார்கள்' என்று மற்றொரு அறிவிப்பும் எழுதித் தொங்கவிட்டார்.

அவர் போக்கு பாஸ்கரனுக்கும் அவன் நண்பர்களுக்கும் வேடிக்கையாகப் பட்டது. என்றாலும், அதிலும் ஒரு நியாயம் இருப்பதாகப் பாஸ்கரன் கருதினான்.

'இப்ப நான் வாறேன். ஒரு மணிநேரம் பேசிப்பொழுது போக்கிவிட்டுப் போறேன். எனக்குப் பிறகு இன்னொருவர் வருவார். அவர் போறதுக்குள்ளேயே வேறு ரெண்டுபேர். இப்படி ஆட்கள் வந்து வெறும் பேச்சுப்பேசிக் காலக்கொலை

பண்ணிக் கொண்டேயிருந்தால், பாவம் அவர்தான் என்ன செய்வார்? அவர் காரியங்களை எப்படிக் கவனிப்பார்? அமைதியாக உட்கார்ந்து எப்படி எழுதுவார், படிப்பார்?' என்று அவன் சொல்லி வைத்தான்.

'அவரு பெரிய இவரு! ரொம்பப் பிரமாத வேலைகள்தான் அவருக்குத் தெரியாதாக்கும். தான் என்கிற கர்வம் அவருக்கு ரொம்ப. பெரிய மேதை என்கிற நினைப்பு. காலத்தை வீணுக்காதவர் என்று காட்டிக்கொள்ள வெளிச்சம்போடும் வேலைதான் அவரது அறிவிப்புகள்' — இவ்வாறு ஆளுக்கு ஒன்று சொல்லி அவன் பேச்சை எடுபடாமல் செய்துவிட்டார்கள் மற்றவர்கள்.

இதை எல்லாம் அவன் அருணசலத்திடம் ரசித்துச் சொல்லுவான். சிரிப்பான்.

சாதாரணத் தொழிலாளியாகிய அருணசலத்துக்கு அவன் மேல் ஏற்பட்டுள்ள வியப்பும் அன்பும் அதிகரிக்கும். இவ்வளவு விஷயம் தெரிந்தவர், பலபேரிடம் பழகி அனுபவம் பெறுகிறவர் நம்மைப்போன்ற ஒரு சாதாரணப் பேர்வழியிடமும் நட்பும் நெருக்கமும் கொண்டு பழகுகிருரே என்று. அதனுல் அவனது உபசரிப்புகள் பலமாகும்.

பாஸ்கரன் அவனிடமும் 'செலவுக்கு ஏதாவது' என்று கேட்டு வாங்கிக்கொள்வான். 'எட்டணு வேணுமே!' 'ஒரு ரூபாய் இருந்தால் கொடுமையா' 'அர்ஜண்டா வேண்டியிருக்கு; ரெண்டு ரூபா இருக்குமா?' என்று உரிமையோடு கேட்பான். அவன் பழகுகிற ஒவ்வொருவரிடமும் இப்படி வசூலிக்கத் தயங்குவதே இல்லை.

'அர்ஜண்ட் - நெருக்கடி - அவசியம் தேவை' என்று கூறிப் பிறரிடமிருந்து பெறப்படுகிற காசுகள் சினிமாத் தியேட்டர், ஓட்டல் போன்ற இடங்களுக்குத்தான் போய்ச்சேரும்.

அருணசலத்திடம் காசுகள் இல்லாமல் இருந்து, அந்த உண்மையைச் சொல்வதற்கு அவன் மிகவும் கூசுவான். 'இவர் கேட்கிருர்; கொடுத்து உதவ முடியவில்லையே' என்று வேதனைப்படுவான். அடுத்த தடவை கையில் பணம் இருக்கிறபோது, பாஸ்கரன் கேட்பதற்கு முந்தியே ஒன்றுக்கு இரண்டாகக் கொடுத்து உபசரிப்பான்.

அவனும் தனக்குத் தரப்படவேண்டியது ஒரு கடமை என்று எண்ணுகிறவன்போல் அதை வாங்கிக் கொள்வான். எப்படியோ செலவு ஓடினுல் சரி. செலவு செய்யப் பணம் வேண்டும். அது யாரிடமிருந்து கிடைத்தால் என்ன; எப்படிக் கிடைத்தால் என்ன? இது அவன் எண்ணம்.

தற்சிறப்பு மோகம், தன்னகங்காரம், தன்னலம், தன்னம்பிக்கை ஆகிய சக்கரங்கள் மீது இயங்கிக் கொண்டிருந்தது அவனது வாழ்க்கை வண்டி.

# 7

வசந்தா எந்த நேரத்தில் எந்த இடத்தில் இருப்பாள் என்பது பாஸ்கரனுக்கு அத்துபடி. பத்து மணி டைப்ரைட்டிங் கிளாசுக்காக ஒன்பதரை-ஒன்பதே முக்கால் மணிக்குப் பெரிய தெருவில் நடந்துகொண்டிருப்பாள் அவள். மாலை நாலரை மணிக்குத் தையல் வகுப்பு முடிந்து வேறொரு தெருவில் நடை பயில்வாள்.

சில நாட்கள் பாஸ்கரன், அவள் டைப் கற்றுக் கொள்ளப் போகிறபோது, அவளோடு சேர்ந்துபோக வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வான். பல நாட்களில், அவள் டைப் அடித்து முடித்துவிட்டுத் திரும்புகிற நேரத்துக்காகப் பெரிய தெருவில் காத்திருந்து, பதினோரு மணிக்குமேலே இன்ஸ்டிடியூட்டை விட்டு வெளியே வந்ததுமே அவளை வரவேற்று, அவள்கூடப் பேசிக்கொண்டே நடந்துபோவான். சாயங்காலம் அவள் தையல் வகுப்பிலிருந்து திரும்புகிறபோது அநேக நாட்கள் அவன் அவளுடைய மாலைஉலாத் தோழனாகத் துணைவருவான்.

வசந்தாவும் அவனுடைய தோழமையை ஆவலுடன் எதிர்பார்த்து, ஆசையுடன் ஏற்று, ஆனந்த மிகுதியோடு அனுபவித்து, அவனுக்கும் உற்சாகம் அளித்து வந்தாள். பாஸ்கரன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் அவள் வசித்தாள். அவனுக்கு உறவுப் பெண்ணும்கூட.

அவள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறபோதே, அவர்களுடைய நட்பு அரும்பி, வளர்ந்து வந்தது. இப்போது நன்றாக மலர்ந்து ஒளிவீசும் கட்டம். அப்படி மலர்ந்து திகழும்படி பாஸ்கரன் தினசரி கவனித்து, வேண்டிய முயற்சிகள் எல்லாம் செய்து வந்தான்.

காதல் வளர்ச்சிக்கு அவளும் ஆதரவு அளித்து வந்தாள். ஆயினும் அதன் பலனை உடனடியாக அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருந்த அவனுக்கு அவள் இடம் கொடுக்காமலே விலகி நின்றாள். 'அதெல்லாம் நமக்குக் கல்யாணம் ஆன பிறகுதான் இப்போல்லாம் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ளணும். நீங்க ஆத்திரமும் அவசரமும் பட்டால் அப்புறம் நான் உங்களைச்

சந்தித்துப் பேசுவது, இப்படி உங்ககூட நடந்து வருவது இதை எல்லாம் நிறுத்தி விடுவேன்' என்று எச்சரித்தாள். இதில் உறுதியாகவும் கண்டிப்பாகவும் இருந்தாள்.

அவள் போக்கு அவனுக்கு எரிச்சலும் ஏமாற்றமும் அளித்த போதிலும், அவள் விதித்த விதிகளை ஏற்று அனுஷ்டிக்க அவன் மறுக்கவில்லை. அவனது சுயநல-சுயலாப நோக்கு, 'காத்திருப்பதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை. இவளை விரோதித்துக் கொண்டால் காரியம் கெட்டுப்போகும்' என்று அவனுக்கு அறிவுறுத்திக் கொண்டேயிருந்தது.

பாஸ்கரனும், அவனுடைய நண்பர்களைப்போல-பொதுவாக, சமூகத்தில் நல்ல நிலையில் வாழ்கிற பலரையும் போல— இனியபெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொண்டு வாழ்க்கையை அனுபவிக்கவே ஆசைப்பட்டான். பெரியவர்களின் போக்கு அவனுக்கு ஆதரவு தருவதாயில்லை.

'உருப்படாத பயல், வளையாக்கண்ணி, வேலை எதுவும் பார்க்கத் துப்பில்லாதவன், இவனை நம்பி யார் பெண்ணைக் கொடுப்பது ? அவளை வைத்துக் காப்பாற்ற இவனுக்கு வக்கு என்ன இருக்கு ? ' என்றெல்லாம் அவனது உறவுக்காரர்கள் குறைகூறிப் பழித்தார்கள். பெண்ணைப் பெற்றவர்கள் அவனைக் கல்யாணத்துக்குத் தகுதியான ஒரு நபராக அங்கீகரிக்க மறுத்தார்கள்.

அந்நிலையில்தான் வசந்தாவின் பார்வையும் மனசும் அவன் பக்கம் ஊசலிட்டன. அவற்றைப் பற்றி இழுத்து, தன் பக்கமே பதிவாக இருத்திக் கொள்வதற்குத் தேவையான உத்திகள்—செயல்கள் அனைத்தையும் பாஸ்கரன் துணிந்தும். திட்டமிட்டும் செயலாற்றினன்.

ஆசையைக் கொட்டி, அவள் ஆசையைக் கிளறிவிடும் கடிதங்கள் எழுதினன். அவள் வீட்டை விட்டு வெளியே கிளம்புவதற்காகக் காத்திருந்து, வழியில் சந்தித்து, நட்பையும் உறவையும் பலப்படுத்திக் கொண்டான். 'உங்களைத்தான் நான் கல்யாணம் செய்துகொள்வேன்' என்று அவள் வாக்குறுதி அளிக்கும் அளவுக்கு அவர்கள் உறவு வலுப்பெற்றிருந்தது.

அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்ய முயன்ற பெற்றோரிடம் அவள் தன் எண்ணத்தை வெளியிட்டாள். அவர்கள் எதிர்த்தார்கள். அவனைக் குறைகூறினர்கள்.

அவள் அசையவில்லை. 'கல்யாணம் செய்து கொண்டால், பாஸ்கர அத்தானையே கல்யாணம் செய்துகொள்வேன். இல்லாவிட்டால் எனக்குக் கல்யாணமே வேண்டாம்' என்று ஒரே அடியாகச் சொல்லிவிட்டாள்.

அதையும் பாஸ்கரன் அறிவான். ஆகவே, கனி பக்குவம் பெற்று உரிய காலத்தில் தானகவே கனிந்து தன் கைகளில் விழட்டுமே என்று காத்திருக்கத் தயார்படுத்திக் கொண்டான்.

## 8

பணமே முக்கியம், பணத்துக்கே மதிப்பு அதிகம் என்ற நிலை ஏற்பட்டுவிட்ட சமுதாய அமைப்பில், ஆசையும் அரிப்பும் பெற்றுள்ள அனைவரும் பணம் தேடுவதிலும், மேலும் மேலும் தேடிக் குவிப்பதிலும் தீவிர வேகம் காட்டுவது இயல்பாகி விட்டது.

பணம் இருந்தால் எதையும் செய்ய முடியும், இஷ்டம் போல் அனுபவித்து வாழ முடியும் என்று வாழ்க்கை கண் முன்னே வெளிச்சமிட்டு மினுக்குகிறபோது, துணிச்சல்பெற்ற வர்களும் தேவை மிகுந்தவர்களும் எப்படியும் பணம் பண்ணு வது என்று வெறிஉணர்வோடு மும்முரமாக முனைவதும் சகஜ மாகியுள்ளது கால ஓட்டத்திலே.

'பணம் இல்லாமல் இருப்பதுதான் பாவம், இன்றைய முதாயத்தில் பணம் பண்ணத் தெரியாமல் இருப்பதுதான் நற்றம். நானும் வாழவேண்டும், சுகமாக வசதியாக, வெற்றி கரமாக வாழ்கிற பலரையும்போல் வாழவகைசெய்ய வேண்டும்' என்று பாஸ்கரனும் ஆசைப்பட்டான்

அவன் வெறும் அல்நாஷர் அல்ல, சும்மா மனோராஜ்யத் துடன் மகிழ்ந்துபோக. செயலூக்கமும் துணிச்சலும் திறமை களும் உடையவன்தான்.

முதலில் அவனிடம் பேச்சுத் திறமை இருந்தது. இவன் வயல் விளைந்து சாப்பிடப் போவதில்லை ; வாய்விளைந்து சாப்பிடு கிறவன்' என்று சில பெரியவர்கள் அவனைப்பற்றிச் சொல்வது வழக்கம். அதுவும் முன்னேற்றத்துக்கு வழிசெய்யக்கூடிய தனித் தகுதியும் திறமையும் ஆகும் என்பதைப் பாஸ்கரன் உணர்ந்து கொண்டான். வாய்ப்பேச்சு வீசி வாழ்க்கை வசதி களை அறுவடை செய்வது என்று அவன் தீர்மானித்தான்.

காலமும் அவனுக்கு வாய்ப்புகளைக் கொண்டு சேர்த்தது.

நகராட்சித் தேர்தல் வந்தது. தேர்தலுக்கு நின்ற வேட் பாளர்களுக்கு விளம்பரம்செய்யப்பிரசாரகர்கள்தேவைப்பட்டது.

பேசத் தெரிந்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்தது, மேடை ஏறி முழக்கம் செய்தவர்களுக்கு டிபனும் காப்பியும், பிரியாணிச்சாப்பாடும், சிறுதொகை அன்பளிப்பும் கிடைத்தது.

வீரகர்ஜனை புரியும் ஆற்றல்பெற்றவர்களுக்கு, எதிப்பவர் களையும், மாற்றுக் கட்சியினரையும் தாக்கியும், 'மட்டம் தட்டி' யும், குத்தும் கிண்டல்களை அள்ளிவீசியும் பேசக்கூடிய திறமை சாலிகளுக்குக் கவனிப்பும் டிமாண்டும் அதிகரித்தன.

இவ்வித முக்கியஸ்தர்களில் பாஸ்கரனும் ஒருவன் ஆனான். ஒரே நாளில் மூன்று, நான்கு கூட்டங்களில் அவன் வீரமுழக்கம் செய்து பெயர் பெற்றான். அதனால் அவனது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை தீர்ந்தது மட்டுமல்ல, அவன் பையில் தாராளமாகப் பணம் புரண்டது. கைகளிலே கவலையில்லாமல் விளையாடியது.

இயல்பாகவே சிரித்துக் கலகலத்து சந்தோஷமாக இருந்து வந்த பாஸ்கரன் இப்போது ரொம்ப ஜாலியாகத் திரிந்தான். ஆரம்ப வெற்றியே அவனுள் அதிகமான துணிச்சலையும், அதிக மான தன்னம்பிக்கையையும், அதிகச் செயலூக்கத்தையும் வளர்த்து விட்டதாகத் தோன்றியது. தான் நினைக்கவேண்டியது தான் அது தடையில்லமால் நடந்தே தீரும் என்றொரு கர்வ நினைப்பும் அவனுள் தடித்து வந்தது.

அவன் முன்புபோல் வேலையற்ற நண்பர்களோடு வெறும் பேச்சுப் பேசிப் பொழுதுபோக்க நாட்டம் கொள்ளவில்லை. தன் பையில் பணம் இருப்பது தெரிந்ததும், அவர்கள் டிபன், சிகரெட், சினிமா, போதைப் பொருள்கள் என்று பிய்த்துப் பிடுங்கிச் சீக்கிரம் பணத்தை இருந்தஇடம் தெரியாமல் பண்ணி விடுவார்கள்; அது நமக்கு நல்லதல்ல என்ற அவனது விழிப்பு உணர்ச்சியே இதற்கு அடிப்படைக் காரணம் ஆகும்.

அதை அவன் வெளிக் காட்டிக்கொள்வானா? 'எங்கே பிரதர் நேரம் கிடைக்குது! இப்பல்லாம் ஐயாவாள் ரொம்ப ரொம்ப பிஸி. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளணும் பாரும். அதுதான்' என்று நண்பர்களிடம் அளந்தான்.

'உம்ம காட்டிலே இப்போ மழை பெய்யுதாக்கும்? பெய் யட்டும் பெய்யட்டும், நல்லாப் பெய்யட்டும்! தொடர்ந்து வறண்ட கோடை வரத்தானே செய்யும்? அப்போ நீரு எங் களைத் தேடி வரவேண்டியதுதானே!' என்று கைலாசம் சொல்லிவைத்தான்.

'அப்படி வந்தால் பார்த்துக்கொள்ளலாம்!' என்று முனகியது அவன் மனக்குரல்.

ஒருநாள் பாஸ்கரன் அருணாசலம் வீடு தேடிச் சென்றான். நல்ல வெயில் வேளை. அப்போது நண்பன் வீட்டில் இல்லை. அவனுக்கு ஏமாற்றமாகி விட்டது. 'அப்ப நான் வாறேன்' திரும்புவதற்கு ஆயத்தமானான்.

'நல்லாயிருக்குதே! வெயிலோடு வந்துவிட்டு இப்படி வெயிலோடு ஏன் திரும்பணும்? வீட்டுக்குள்ளே வந்து உட்காருங்க. கொஞ்சம் மோரு குடியுங்க' என்று அருணாசலம் மனைவி மீனாட்சி உபசரித்தாள்.

வெயிலில் வந்திருந்த அவனுக்கு நிழலின் குளுமையும் ஜில்லென்ற பானமும் தேவையாகத்தான் இருந்தன. அவளது அன்பான உபசாரமும் அவனுக்கு இதம் அளித்தது.

அவன் வீட்டினுள் வந்து பாயில் உட்கார்ந்தான். அவள் தந்த மோரைக் குடித்தான். சிறிது நேரம் ஒய்வாகப் படுத்துக் கிடந்தால் சுகமாக இருக்கும் என்று ஆசைப்பட்டது அவன் மனம். சட்டையைக் கழட்டிப் போட்டுவிட்டு, பாயில் சரிந்தான்.

மீனாட்சி 'இப்படி தலைக்கு உசரம் இல்லாமலா படுப்பது? இந்தாங்க தலாணி' என்று ஒரு தலையணையை எடுத்துவந்து அவன் தலைமாட்டில் வைத்தாள்.

அதை இழுத்துச் சரியாக வைத்துக் கொண்டு, 'எல்லாம் பழக்கம்தான். கட்டாயத் தேவை என்று எனக்கு எதுவும் இல்லை' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் பாஸ்கரன்.

'தலாணி இருக்குல்லா. இல்லேன்னு சொன்னா தேட வேண்டாம்தான். இருக்கிறதை அனுபவிக்க வேண்டியது தானே!' என்றாள் அவள்.

பாஸ்கரன் அவளிடம் பொழுது போக்காக எது எதையோ பேசினான். அவள் ரசித்துக் கேட்டுச் சிரித்தாள். அவ்வப்போது அடுப்பில் எதையோ கவனிப்பதிலும் ஈடுபட்டிருந்தாள். அவனுக்காகக் காப்பி தயாரிக்கிறாள் என்பதை அவன் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

'இப்போ எதுக்குக் காப்பி?' என்று இழுத்தான் அவன்.

'காப்பி குடிக்க இன்ன நேரம் இன்ன வேளை என்று ஒரு கணக்கு உண்டா என்ன?' என்றாள் மீனாட்சி.

'இல்லே. இப்பதான் மோர் குடித்தாச்சே. இந்த வெயில் வேளையிலே சுடச் சுடக் காப்பி என்னத்துக்கு யின்னேன்...'

அவள் சிரித்தாள்.

'ஏன் சிரிக்கிறே?' என்று அவள் முகத்தையே பார்த்தான் அவன்.

'இல்லே வந்து முன்னாடி ஒரு தடவை நீங்க என்ன சொன்னீங்க? காப்பி எப்பவும் இன்பம் தரக்கூடியது. குளிர்ந்த நேரத்துக்குக் கதகதப்பு ஊட்டும். வெயில் வேளையில் காப்பி ஒரு ஜிலு ஜிலுப்பு தரும்னீங்களே

—ஆமாம்; பெண்ணைப் போல என்று குசுகுசுத்தது பாஸ்கரனின் மனக்குறளி.

அவள் தலையை அசைத்து அசைத்து, ஏற்ற இறக்கங்களோடு இனிய குரலில் பேசியது அவனுள் கிளுகிளுப்புத் தந்தது. அவளது முகபாவங்களும் கண்ணோட்டங்களும் அவனுள் போதை ஏற்றிக் கொண்டிருந்தன.

அவள் காப்பியைக் கவனிக்க நகர்ந்தாள்.

அவன் மனம் குரங்குத்தனம் பண்ணி மகிழ்ந்தது. இவளுக்கு என்மேல் ஆசை. அதுதான் இவ்வளவு பிரியமாக எல்லாம் செய்கிறாள். அருணாசலம் சாயங்காலமா, இருட்டுற நேரத்திலேதான் வருவான் என்றாள். அது தெரிந்துதான், அந்த தைரியத்திலேதான், இவள் என்னை உள்ளே வரச் சொல்லி உபசாரமெல்லாம் பலமாகச் செய்கிறாள். புருஷன் வீட்டிலே இருக்கிறபோது சாதுப்பூனை மாதிரி, பதுங்கி மறைஞ்சு ஒதுங்கியிருப்பவ— அப்பகூட இவ முகத்தை, கண்களை, அடிக்கடி நான் கவனிச்சிருக்கேன். சுழல் விளக்குகளாகச் சுற்றிச்சுற்றி வந்து என்பக்கமே மோதும். தெரிஞ்சதுதானே...

மீனாட்சி காப்பி கொண்டு வந்து வைத்தாள். 'ஸ்ட்ராங்கா இருக்குதா? சர்க்கரை போதுமா?' என விசாரித்தபடி நின்றாள்.

'ஆகா. ஜோரா இருக்கு!' என்று சுவைத்து ரசித்தான் அவன். 'நீ குடிக்கலியா?'

'ஓ, எனக்கும் இருக்குதே' என்று உற்சாகமாகக் கூறி, சிறு பெண் மாதிரித் துள்ளலுடன் திரும்பி நடந்தாள் அவள்.

— இவள் பலே ஆளுதான் என்றது அவன் மனம்.

— இல்லாமை. அதுதான் வதங்கி மெலிந்து காணப்படுகிறாள். இருந்தாலும், முகத்திலே ஒரு கவர்ச்சி. கண்களில் தனி அழகு. மெலிந்த உடலிலும் ஒரு வசீகரம். கண்ணாடி வளைகள் இவள் கைக்கு அழகாகத்தானிருக்கு. பொன் வளையல் ரொம்ப எடுப்பாக இருக்கும். சத்தான உணவுகள்

இருந்து, வசதியான வாழ்க்கை வாழ்ந்து, நன்ருக டிரஸ் செய்து கொண்டிருந்தால், இவள் இன்னும் ஜீவனுள்ள உணர்ச்சிக் காவியமாக விளங்குவாள்

அவன் தன்னுள் அவளை வியந்து விமர்சித்துக்கொண் டிருந்தான்.

காப்பி குடித்துவிட்டுத் திரும்பிவந்த மீனுட்சி, 'என்ன, குறுகுறுன்னு உட்கார்ந்துட்டீங்க? சிகரெட் பிடிக்கலே?... சிகரெட் இல்லையோ?' என்று கேட்டாள்.

அவள் பார்வையைத் தன் கண்களால் தொட்டுச் சிரிப்பை உருளவிட்டான் பாஸ்கரன். 'இருக்கு. சிகரெட் இருக்கு' என்று இழுத்தான்.

'பின்னே? தீப்பெட்டி இல்லியாக்கும்? இதோ எடுத்தா றேன்' என்று போய், கொண்டுவந்து அவன் பக்கம் நீட்டி ஞள்.

மீனுட்சி எதிர்பார்க்கவில்லை. சட்டென்று அவள் கையைப்பற்றிக் கொண்டு, தீப் பெட்டியும் இருக்கு மீனு. சும்மா நீ இப்படி என் பக்கத்திலே உட்காரு' என்று, கொஞ்சம் பல மாக இழுத்தான்.

அவள் தள்ளாடி அவன்மேலே விழுந்துவிட்டாள். பாஸ் கரன் சிரித்துக் கொண்டே அவளைப் பிடித்து இறுக்கி அணைத்து 'மீனுக்குட்டிக்கு என்மேலே ஆசைதானே? ஊம் ங், ஆசை தானே?' என்று கொஞ்சுதலாகக் கூறி அவள் முகத்தில் முத்தினான். உதடுகளில் முத்தமிடுவதற்கு முயன்ருன்.

அவள் சமாளித்துவிட்டாள். வெறி கொண்டவளானுள். திமிறி, அவன் பிடியிலிருந்து விலகினுள். அம் முயற்சியில் ஈடுபட்டபோதே, அவன் மூஞ்சியில் துப்பினுள். கைவிரல்களால் பிருண்டினுள். அவளுக்கு இயன்ற வலுவுடன் ஒரு கையால் அவன் முகத்தில் ஓங்கிக் குத்தினுள்.

திகைப்புற்ற அவன் திணறினுன்.

'சீ...மிருகம்! ஓடு இன்னும் இங்கேயா இருக்கிறே?' என்று சீறி, மீனுட்சி தலையணையை எடுத்து, தொப் தொப் பென்று அவன் முதுகில், தலையில், மூஞ்சியில் தாறுமாருக அடித்தாள்.

பாஸ்கரன் மவுனமாக, தலைகுனிந்தபடி எழுந்து, சட்டையை எடுத்துக்கொண்டு அவசரமாக வெளியேறினுன்.

'தூ' என்று காறித்துப்பிய மீனுட்சி, 'நாய் ஜன்மம்!' என்று ஏசிவிட்டு, கதவைச் சாத்தித் தாழிட்டாள். சோர்ந்துபோய்

தரையில் படுத்து, குமுறிக் குமுறி அழுதாள். அழுதுகொண்டே கிடந்தாள்.

## 9

வசந்தாவுக்கு வேலை கிடைத்து விட்டது. ஒரு கம்பெனியில் டைப்பிஸ்ட் வேலை. மாதம் இருநூறு ரூபாய் சம்பளம்.

இதில் வசந்தாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவளைவிட அதிக சந்தோஷம் பாஸ்கரனுக்கு.

'இதைக் கொண்டாடணும். நீயும் நானும் ஓட்டலுக்குப் போவோம். அப்புறம் சினிமாவுக்கு. சரிதானே?' என்றான் அவன்.

'ஓட்டலுக்குப் போய் ஸ்வீட்டும் காரமும் சாப்பிடுவோம். சினிமாவுக்குப் போவதெல்லாம் இப்போ வேண்டாம். கல்யாணத்துக்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று அவள் மறுத்துவிட்டாள்.

பாஸ்கரனுக்கு வருத்தம்தான். என்றாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அன்றிலிருந்து, கல்யாணம் சீக்கிரம் நிகழ்ந்துவிட வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். அதற்காக அவளைத் தூண்டி வந்தான். நேரம் கிடைத்தபோதெல்லாம் அவளைச் சுற்றி வளையமிட்டான். இனிக்கப் பேசியும், ஆசைகளைக் கிளறியும், அவள் மனசை இளகச் செய்தான். 'உனக்கும் மாதச் சம்பளம் வருது. எனக்கும் தாராளமாகவே பணம் கிடைத்துக்கொண்டிருக்கு. நாம் இரண்டுபேரும் சேர்ந்து சந்தோஷமாக வாழமுடியும். அப்படியிருக்கையிலே காலத்தை வீணாக்குவானேன்?' என்றான்.

அவளுக்கும் அது சரி என்றே பட்டது. பெற்றோரிடம் சொல்லி, நடக்கவேண்டியதற்கு ஏற்பாடு பண்ணச் செய்தாள்.

உரிய முறைப்படி கல்யாணம் நடைபெற்றது. பாஸ்கரனும் வசந்தாவும் ஒரு சிறு வீட்டில் தனிக்குடித்தனம் நடத்தலானார்கள்.

ஆரம்ப மாதங்கள் வெகு இனிமையாக, மனோகரமாக, ஓடின. உல்லாசங்களுக்குக் குறைவில்லை.

பாஸ்கரனுக்குப் பிரசங்க உலகத்தில் நல்ல பேர். அதனுல் அவனுக்கு ஏகப்பட்ட கிராக்கி. உள்ளூரில் மட்டுமின்றி வெளியூர்களிலிருந்தும் அவனுக்கு அழைப்புகள் வந்து குவிந்தன. முன்பணமும் வந்தது.

போகும் இடங்களில்எல்லாம் இந்தச் 'சிறப்புப் பேச்சாளர்' பெரும் கவனிப்பை, உபசரிப்பு மரியாதைகளைப் பெறமுடிந்தது. அன்பளிப்பு என்று சங்கங்களும், ரசிக அன்பர்களும் அபிமானிகளும் பலவிதமான பொருள்களையும் அவனுக்கு உவந்தளித்தனர். அந்தந்த ஊரில் விசேஷமாக என்னென்ன கிடைக்குமோ அவை எல்லாம் அவனுக்கு 'அன்பளிப்பு'களாகவே கிடைத்தன.

நேர்த்தியான சமுக்காளம், அருமையான பாய், துண்டுகள், வேட்டிகள், பொம்மைகள், படங்கள்-எதைத்தான் மக்கள் அவனுக்கு மகிழ்ச்சியோடு 'காணிக்கை'யாகக் கொடுக்கவில்லை?

'பைத்தியக்காரங்க! இதை எல்லாம் எதுக்காகக் கொடுக்கிருங்களோ, எனக்குப் புரியலே. இப்படித்தான் ஜனங்கள் பலபேருக்கும் கொடுத்துக்கிட்டு இருக்கிருங்க. கேளுங்கள், கொடுக்கப்படும் என்று உபதேசிப்பார்கள். ஜனங்களோ, சில பேரிடம் ஏதோ மயக்கம் கொண்டு, அவர்கள் கேளாமல் இருக்கும்போதே கொடுக்கத் தயாராக இருக்கிருர்கள். நமக்கென்ன நஷ்டம், அல்லது கஷ்டம்? கொடுங்கள்-வாங்கிக் கொள்ளப்படும்!' என்று பாஸ்கரன் தன் மனசோடு பேசிக் களிப்பது வழக்கமாயிற்று.

நாளடைவில், 'கொடுத்தால்தான் வருவேன்' என்று பணத்தை உரிமையோடு கேட்டு வசூலிக்கும் அந்தஸ்தை அவன் எட்டிவிட்டான்.

சட்டசபைத் தேர்தல் ஸீசனில் வாய்ப்பேச்சு வீரர்களுக்கெல்லாம் நல்ல அறுவடை. பாஸ்கரன் முழுநேரப் பேச்சர் ஆக மாறிவிட்டதற்காக வருத்தப்பட நேரிட்டதே இல்லை. அவன் வெற்றிப் பாதையில் வேகமாக முன்னே முன்னே போய்க் கொண்டிருந்தான்.

## 10

சந்தர்ப்பங்களும் வசதிகளும் ஒத்துழைக்காத காரணத்தினுலேயே அனேகம்பேர் யோக்கியர்களாக நாளோட்டுகிருர்கள் என்று சொல்லப்படுவது உண்டு.

மனசிலே போதுமான துணிச்சல் இல்லாததனுல்தான்

ரொம்பப் பேர் வெளித்தோற்றத்தில் நல்லவர்களாக நடந்து கொள்கிறார்கள் என்றும் சிலர் சொல்வது வழக்கம்.

அதேபோல, 'இல்லாத' காரணத்தினாலேயே பலர் எளிய வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள் என்றும் சொல்லலாம். வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தும், எளிமையான வாழ்க்கை முறையைத் தேர்ந்து கைப்பிடிக்கும் கொள்கை வீரர்கள்— லட்சியவாதிகள்— அபூர்வமாகத்தான் காணப்படுகிறார்கள்.

தாங்கள் கஷ்டங்கள் அனுபவிக்கிறபோது, மற்றவர்களது துயர வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கிறவர்கள், பொதுவாக வறுமை நிலையையும் மனிதர்கள் படுகிற பாட்டையும் குறித்து எண்ணி வருத்தப்படுகிறவர்கள்கூட, தங்களுக்குச் சிறிதளவு வசதிகள் ஏற்பட்டவுடன்— தங்களுடைய வாழ்க்கைத்தரம் கொஞ்சம் உயர வழி பிறந்ததும்— தங்களுடைய முந்திய நிலையையும் மறந்துவிடுகிறார்கள்; மற்றவர்களுடைய துன்பதுயரங்களைக் கருத்தில் கொள்ளவும் விரும்புவதில்லை.

'இல்லாத காலத்தில்' மனிதநேயம் பேசுகிறவர்கள்கூட, தங்களுடைய கையில் கொஞ்சம் பணம் புரள வாய்ப்புகள் கிட்டியதுமே, தங்களது வசதிகளை அதிகரித்துக் கொள்வதில்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். பரோபகாரம், தேவையானவர்களுக்கு உதவுவது என்று முன்பு பேசியதைக்கூட, புதிய சூழ்நிலையில் கைவிட்டுவிடக் கூசுவதில்லை.

பாஸ்கரனும் அவன் நண்பர்களும் அவ்வாறுதான் இருந்தார்கள்.

கணேசனுக்கு நானூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அவன் 'ஆளே மாறிவிட்டான்'— புறத்தோற்றத்திலும் அக நிலைமையிலும்.

'சாதாரண ஜிப்பாவும், நாலு முழ வேட்டியுமே போதும்; நம் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும் பொருளாதார நிலைமைக்கும் ஏற்ற உடை இதுதான்' என்று அடிக்கடிப் பேசிவந்தவன் அவன். 'பேன்ட்ஸ்' அணிகிறவர்களைப்பற்றி கிண்டலாகப் பேசுவதும் அவன் வழக்கம். பெரிது பெரிதாக மோதிரங்கள் போட்டுத் திரிகிறவர்களைப் பழித்துக் குறைகூறுவான்.

இப்போதோ? டெரிலின் சட்டைகளும் டெரிகாட்டன் பேன்ட்சும் பல வாங்கிக்கொண்டான். 'டை' கட்டித் திரிவதிலேகூட உற்சாகம் கண்டான். விலை உயர்ந்த வாட்ச்சும், நாகரிக டிசைன் பெரிய அளவு மோதிரமும் அவன் கையில் குடியேறின.

'நடப்பது கௌரவக் குறைச்சல் என்று நம்மவர்கள்

எண்ணுகிருர்கள். சிறிது தூரம் போகவேண்டும் என்ருல்கூட, பஸ்சுக்காக மணிக்கணக்கில் காத்து நிற்கத் தயாராக இருக் கிருர்கள்; அப்புபுறம் கும்பலோடு முட்டிமோதி பஸ்ஸினுள் ஏறி, நெருக்கி அடித்துச் சிரமப்படுகிருர்கள். இப்படி நேரத் தையும் காசையும் வீணுக்குவதைவிட, கொஞ்சதூரம்தானே, நடந்து விடலாமே என்று நாகரிக நகரவாசிகளுக்குத் தோன் றவே மாட்டேன்குதே!' என்று அனுதாபப்படுவான் அவன். பல இடங்களுக்கும் நடந்தே போவான்.

இப்போது அவனும் பஸ்சுக்காகக் காத்துக்கிடக்க முற்பட் டான். சிறிது தூரத்துக்கும் பஸ் சவாரிதான் அவனுக்குத் தேவைப்பட்டது. கொஞ்சம் அதிகமான தூரம் போகவேண்டும் என்ருல், அலட்சியமாக 'டாக்சி'யை அழைப்பது அவன் பழக்க மாயிற்று.

அத்துடன் நில்லாது, நடந்து போகிறவர்களையும் கேலி பண்ணும் சுபாவம் அவனிடம் தலைதூக்கியது.

ஆகவே, முன்பு அவன் ஜம்பமாகப் பேசியது பூராவும், தனக்குக் கிட்டாதபோது 'சீச்சீ, இது புளிக்கும்!' என்று கரித் துக்கொட்டிய நரித்தனமேதான் என்பது அவனை அறிந்தவர் களுக்கு வெட்டவெளிச்சமாயிற்று.

ஒருசமயம் பாஸ்கரன், அருணசலம் வீட்டில் பேசிக் கொண்டிருந்தபோது, குறிப்பிட்டான்—

'உங்க ரெண்டுபேருக்கும் இந்தக் குடிசை பற்ருது. இன்னும் கொஞ்சம் பெரிய இடம் தேவை. என்ன செய்வது? இந்தப் பெரிய நகரத்தில் எவ்வளவோ பேர் எப்படி எப்படியோ பொந்துகளிலும் எலி வங்குகளிலும் வாழக் கற்றுக்கொண் டிருக்கிருர்கள். பெரும்பாலோர் குடியிருக்கிற இடத்தைவிட இது பரவால்லே. என்ருலும் இது முறையில்லை. மனசைக் குமைய வைக்கும் குட்டிச் சிறுகுடில் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா! இதேவேளையில் பென்னம் பெரிய மாளிகை போன்ற கட்டிடங்களில் குறைவான எண்ணிக்கை உடைய நபர்கள் வசிக்கிருர்களே, அது என்ன நியாயம்? சோஷலிச ஏற்பாடு நல்லது, மிக உயர்ந்தது என்பதில் சந்தேகமேயில்லை. அங்கே பெரிய பதவி, பெரியவர், அந்தஸ்து உயர்வு, அதிக வருமானம் என்பதற்காக எவரும் பெரிய பெரிய இடங்களை வளைத்துப்போட்டுக் கொண்டு, குடியிருக்கும் வீடு என்று பேர் பண்ணமுடியாது. இரண்டு பேர் குடியிருப்பதுக்கு இவ்வளவு இடம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தில் நபர்கள் அதிகரிக்க, அதிகரிக்க விசாலமான இடம் அக்குடும்பத்துக்கு அளிக்கப்படும். அஞ்சாறு பேர் உள்ள ஒரு தொழிலாளியின்

குடும்பம் பெரியஇடத்தில் குடியிருப்பதும், இரண்டே நபர்களைக் கொண்ட பெரிய பதவிக்காரர் குடும்பம் சிறிய இடத்தில் வசிப்பதும் அங்கே நடைமுறையில் உள்ளது. இங்கோ? ஒரே அறையில், அஞ்சாறு பேர் உள்ள குடும்பம் முடங்கிக் கிடப்பதும், பணம்-சொத்து-பதவி-பெரிய இடம் என்று ஏதேதோ தகுதிகள் பேசி இரண்டு மூன்று பேர் பலப்பல அறைகள் கொண்ட பெரிய கட்டிடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதும் சகஜமாக இருக்கிறது. இதெல்லாம் மாறவேண்டும்.'

இந்த எண்ணத்தை அவன் பின்னர் தன் நண்பர்கள் அனைவரிடமும் சொல்லிவந்தான்.

பாஸ்கரனும் வசந்தாவும் குடியிருந்த வீடு இரண்டுபேருக்குப் போதுமானதுதான். ஐம்பது ரூபாய் வாடகை. ஒட்டுக் குடித்தனத் தொல்லைகள் எதுவும் இல்லாது தனித்திருந்த சிறு வீடு. பல வீடுகளைக் கொண்ட காம்பவுண்டில் அதுவும் ஒன்றாக இருந்தது.

பாஸ்கரனுக்கு வருமானம் அதிகமாக ஆக, அந்த வீடு அவனுக்கும் அவன் மனைவிக்கும் போதுமான இடமாகத் தோன்றவில்லை. தனித்தனி அறைகளும் மாடியும் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. இடம் இன்னும் நிறைய இருந்தால், கிடைத்துள்ள பரிசுப் பொருள்களை எடுப்பாக வைக்கலாம்; அழகு அழகான படங்கள் வாங்கி மாட்டலாம்; அருமையான சுவர்க்கடியாரம் மையமான இடத்தில் அணி செய்யவேண்டும்! ரேடியோ வாங்கி வைக்கணும்; இரும்புக் கட்டில், ஸீலிங் ஃபேன், தனியாக டேபிள் ஃபேன் ஒன்று—இவை எல்லாம் ஆடம்பரப் பொருள்கள் அல்ல; அவசியத் தேவைதான் என்று இரண்டுபேரும் தீர்மானித்தார்கள்.

தீர்மானத்தை விரைவிலேயே செயலாக்கவும் செய்தார்கள் நூற்றைப்பது ரூபாய் வாடகையில் வசதியான சிறு வீடு ஒன்று 'பங்களா மாதிரியானது'—அவர்களுக்குக் கிடைத்தது.

பாஸ்கரனுக்கும் வசந்தாவுக்கும் சந்தோஷமாவது சந்தோஷம்! பொங்கிப் பொங்கி வழிந்தது அது.

## 11

'இந்த நாட்டில் ஒருவன் வெற்றிகரமாக முன்னேற வேண்டும் என்றால், அவன் தேர்ந்தெடுத்து உழைக்கிற துறை

யில் மட்டும் ஆர்வமும் ஆற்றலும் இருந்தால் போதாது. அவன் பேச்சுத் திறமை பெற்றவனாகவும் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது' என்றான் கைலாசம், நண்பன் நடராஜனிடம்

'ஆமோ ஆமா. அதில் சந்தேகமே கிடையாது. வேறு எத்திறமைகள் இருந்தாலும் இல்லாது போனாலும், பெரும் பேச்சு ஆற்றல் உம்மிடம் இருக்குமானால், நீர் நிச்சயமாக முன்னேறிவிடலாம். இப்போ நம்ம பாஸ்கரனே நல்ல உதாரணமாக விளங்குகிறானே!' என்று நடராஜன் சொன்னான்.

'அவனைப் பற்றித் தான் நானும் நினைத்துக்கொண்டிருந்தேன். அவன் ரொம்பப் பெரியமனுஷன் ஆகிவிட்டான். முன்னயப்போல இல்லே இப்போ!'

'ஆமா. ஆளே மாறிப்போனான்,'

'மாறுதல் வளர்ச்சியின் அறிகுறி' என்று சொல்லிச் சிரித்தான் கைலாசம்.

'எப்படியாப்பட்ட மாறுதல்! என்னவிதமான வளர்ச்சி!' என்று கோமாளித்தனமாக வாயைச் சுளித்தான் நடராஜன்.

பாஸ்கரனின் பேச்சுத் திறமை அவனுக்கு அரங்கங்களைப் பெற்றுக்கொடுத்துக் கொண்டே இருந்தது. அவனது பேச்சை, அதன் வேகத்தை, அவனுடைய சண்டமாருதத் தாக்குதல்களை, கோடை இடி முழக்கத்தை மக்கள் ரசித்துப் பாராட்டினார்கள். அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள ஒவ்வொரு கட்சியும் காத்திருந்தது போலவே பட்டது.

பாஸ்கரன் எந்தக் கட்சிக்கும், எந்தக் கொள்கைக்கும், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், தான் கேட்கிற பணத்தை எந்தக் கட்சியினர் தருகிறார்களோ— தனது தேவைகளை எக்கட்சிக்காரர்கள் பூர்த்திசெய்ய முன்வருகிறார்களோ— அவர்களது விருப்பம்போல், அவர்களுடைய கட்சி மேடையில் ஏறி, அவர்கள் கட்சிக்குச் சாதகமாகவும் எதிர்க் கட்சிகளைச் சாடியும் தன்னுடையபேச்சாற்றலை உபயோகிக்க அவன் எப்பவும் சித்தமாக இருந்தான்.

'நாகரிகப் பெருநகரத்திலே ஜனங்கள் அதிகம் இருக்கிறார்கள். எந்தக் கூட்டம் நடைபெற்றாலும் திரள்திரளாக வந்து கூடுகிறார்கள். அவர்களுக்குப் பொழுது போகவேண்டும். வேடிக்கை பார்ப்பது மாதிரித்தான் அவர்கள் பிரசங்கம் கேட்கவும் வருகிறார்கள்; அவர்களுக்குத் தேவைப்படுகிற வேடிக்கையை நானும் என்னைப் போன்றவர்களும் கொடுத்து வருகிறோம்' என்று ஒரு தடவை பாஸ்கரன் தன் நண்பர்கள் மத்தியில் தெரிவித்தான்.

'அவர்கள் விழித்துக்கொண்டால்?' என்று ஒருவன் கேட்டான்.

'ப்சா! அப்போ படவேண்டிய கவலே இது. இப்போது நாட்டு மக்கள் தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுகின்ற பராபரங் களாகத்தான் இருக்கிருர்கள்' என்ருன் பாஸ்கரன்.

அவன் விருப்பங்கள் திருப்திகரமாக நிறைவேறிக் கொண் டிருந்தன. 'ரயிலில் முதல்வகுப்பில் நெடும்தூரம் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. ஆனல் அதுக்கெல்லாம் நம்மிடம் பணம் ஏது?' என்று அவன் முன்பு குறிப்பிடுவது வழக்கம். இப்போதெல்லாம், எந்த இடத்துக்கு ரயிலில் போக நேரிட்டாலும், முதல் வகுப்புப் பிரயாணமே அவனுக்குச் சித்தித்தது.

தன்னேச் 'சிறப்புச் சொற்பொழிவு' நிகழ்த்த அழைக்கிற வர்களிடம் அவன் கண்டிப்பாகவும் கருராகவும் பேசிவிடுவான். 'போகவர முதல் வகுப்பு டிக்கட், அங்கே தங்குவதற்கு நல்ல லாட்ஜிங் வசதி, பேச்சுக்கு நூறு ரூபாய். இஷ்டமாஞல் ஏற்பாடு செய்யுங்க. கஷ்டம் என்ருல் விட்டுவிடுங்கள்!' என்பான். தனது வழக்கமான சிரிப்பைப் புரளவிடுவான்.

சிலர் 'பார்க்கலாம்' என்ருே, 'யோசித்து எழுதுகிருேம்' என்ருே சொல்லி நழுவிவிடுவார்கள். பலர் உரிய ஏற்பாடுகளேச் செய்வார்கள். எப்படியும் அவன் வண்டி ஓடிக்கொண்டேதான் இருந்தது.

பாஸ்கரன் குடிப்பழக்கத்தை வளர்த்திருந்தான். குடிப்ப தற்கும் அவனுக்கு நிறையவே கிடைத்து வந்தது. தரமான, அயல்நாட்டுச் சரக்குகள்கூடக் கிடைத்தன. உள்ளூர்த் தயாரிப்புகளும் கிடைத்தன. இவ்விஷயத்தில் 'வேண்டுதல் வேண்டாமை இலான்' ஆக நடந்து கொண்டான் அவன். எந்தப் போதைப் பொருள்களும் அவனுக்கு உகந்தவைதான்.

பிரசங்க உலகில் முன்னுக்கு வந்து கொண்டிருந்த செல்வி நிர்மலா, பாஸ்கரனின் பேச்சாற்றலால், அவனுக்கிருந்த விளம்பரப் புகழால், வசீகரிக்கப்பட்டு, அவன் தோழமையை நாடினுள். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து, நெருங்கிவந்து, அவன் தோழியாளுள்; துணேவியுமாளுள்.

பிறகு, இரண்டு பேரும் சேர்ந்தே மேடைகளில் தோன்ற லாயினர். அநேகமாக, அவன் போகிற ஒவ்வொரு ஊருக்கும் அவளும் போளுள்.

வசந்தாவுக்குப் பாஸ்கரனேப்பற்றிய சேதிகள் சிறிது சிறிதாகக் கிடைத்துக் கொண்டுதான் இருந்தன. அவள்

அவனிடம் குறைகூறி, முணுமுணுத்து, கண்டித்து, சண்டை பிடித்துக் கண்ணீர் வடிக்க முற்படவும் அவன் எரிந்து விழுந்தான்.

'நான் சந்தோஷமாக வாழலாம் என்றுதான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேனே தவிர, இப்படிப்பட்ட நாடகங்களைப் பார்த்து ரசிக்கவேண்டும் என்பதற்காக இல்லை!' என்று கிண்டலாகவும் குத்தலாகவும் பேசினான்.

ஒரு நாள் அவன் நிர்மலாவை வீட்டுக்கு அழைத்து வந்தான். 'இவள் என் சிநேகிதி. சந்தோஷமாக வாழத்தெரிந்தவள், உன்னைப்போல் அழுமூஞ்சி இல்லை' என்று வசந்தாவிடம் கூறினான்.

அன்று முதல் நிர்மலா அடிக்கடி பாஸ்கரனோடு அந்த வீட்டுக்கு வரலானாள். அவன் வெளியூர் போகாத நாட்களில் அவனைத் தேடி அவளாகவே வரவும் துணிந்தாள்.

நிர்மலா பழைய பாஸ்கரனை நினைத்து மனசில் புழுங்கினாள்; உள்ளம் குமைந்து கண்ணீர் சிந்தினாள்.

பாஸ்கரன், யாருக்காகவும் மனமிரங்கி, தனது சந்தோஷங்களை இழந்துவிடவோ குறைத்துக்கொள்ளவோ தயாராக இல்லை.

## 12

வாழ்க்கைப் பாதையில் துணிந்து அடி எடுத்து வைத்து வெற்றி கண்டவனே அடுத்துஅடுத்து வெற்றிகளைச் சந்திக்கமுடிகிறது. முதல் வெற்றி மேலும் பல வெற்றிகளைக் கொண்டு சேர்க்கிறது. அதனாலேயே, 'வெற்றிபோல் எதுவும் வெற்றி பெறுவதில்லை' என்ற ஆங்கில வசனம் ஏற்பட்டுள்ளது.

பாஸ்கரனது வாழ்க்கை வெற்றிகள் அவனை மேலும் வெற்றி அடையச் செய்துகொண்டிருந்தன.

அவனது திறமைகளினால் வசீகரிக்கப்பட்ட ஒரு படாதிபதி தனது புதிய தயாரிப்புக்கான படத்துக்குத் 'திரைக் கதை வசனம்' எழுதும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார். அதில் அவனுக்குக் கணிசமான தொகை கிடைத்தது.

பாஸ்கரன் சொந்தமாக ஒரு வீடு வாங்கினான். அதில் நிர்மலாவைக் குடிவைத்தான். அந்த வீட்டிலும் தேவையான

வசதிகளைச் செய்துமுடித்து மகிழ்ந்தான்.

வசந்தா வரட்டைக வீட்டிலேயே இருந்தாள். பாஸ்கரன் அவளை வெறுத்து ஒதுக்கிவிடவுமில்லை.

நெருங்கிய நண்பர்கள் அவனிடம் அவனது தாம்பத்திய வாழ்வுபற்றிப் பேச்செடுத்தால், அவன் வழக்கமான சிரிப்பை உதிர்த்தான். 'வசந்தா என் ஒய்ஃப். நிர்மலா என் லைஃப். அவள் அவள்பாட்டுக்கு இருக்கிரு. இவள் இவள்பாட்டுக்கு இருக்கிரு. அவ்வளவுதான்!' என்ருன்.

'பணம் மனிதனை எப்படி எல்லாம் மாற்றிவிடுகிறது பார்த்தீரா!' என்று அவனை அறிந்தவர்கள் பேசிக்கொண் டார்கள்.

கைலாசமும் நடராஜனும் ஒரு உதவிநாடி பாஸ்கரனை அவன் வீட்டில் சந்திக்கச் சென்ருர்கள். அவன் எங்கோ செல்வதற்காக ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தான்.

'எனக்கு உங்களோடு பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. என்ன விஷயம் சீக்கிரம் சொல்லுங்க' என்று அவன் அவசரப் படுத்திஞன்.

கைலாசம் சொன்ஞன்: 'ஒரு பிரசில் ஒரு வேலை இருக்கு. அதன் முதலாளி உமக்கு ரொம்பத் தெரிஞ்சவரு. நீரு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தால் உதவியாக இருக்கும்...'

பாஸ்கரன் சிரித்தான். 'அவன் அவன் அவனவனையே தான் நம்பவேண்டும். நீரே முயற்சிசெய்து பார்க்கவேண்டி யதுதான். நான் யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்ய விரும்பு வதே இல்லை. என்ன சிபாரிசு! என்ன வேலை! எதிலுமே அர்த்தம் இல்லை!' என்ருன்.

அறையில் அங்குமிங்கும் நடந்தான். எதையோ தேடுவது போல் பரபரத்தான்.

'என்ன வேணும்? எதைத் தேடுறீங்க?' என்று நடராஜன் கேட்டான்.

'பர்ஸ். என் பர்ஸைக் காணேம். இங்கேதான் வச்சேன். மேஜை மேலே. வெளியே போறதுக்காக ரூபாய் நிறைய எடுத்து வச்சு, இதோ இங்கேதான்...' என்று பாஸ்கரன் அமைதியிழந்து படபடத்தான்.

கைலாசத்தின் பார்வை தற்செயலாகப் புத்தக அலமாரி மீது பாய்ந்தது. அங்கே ஒரு தட்டில் பர்ஸ் இருந்தது.

'பர்ஸ் அதோ புக் ஷெல்பில், புத்தகங்களுக்குப் பக்கத்தில் இருக்குதே!' என்றான்.

அவசரமாகப் பாய்ந்து அதை எடுத்த பாஸ்கரன், பர்சை பேண்ட் பாக்கெட்டினுள் பத்திரப்படுத்தியபடியே பேசினான் : 'நல்லவேளை பர்ஸ் அகப்படாமல் மறைஞ்சிருந்தா, நான் மேஜை மேலேதான் வச்சேன், கைலாசம்தான் எடுத்திருப் பான்னு எனக்கு நிச்சயமாப் பட்டிருக்கும். மனம் மாத்திரம் காரணம் இல்லே இதுக்கு. சூழ்நிலை, சந்தர்ப்பமும் அப்படி. இல்லாதவன், தேவை உள்ளபோது, திருடன் ஆகிவிடுகிறான். என்ன பிரதர், நான் சொல்றது! போய் வாறீங்களா? டாட்டா, சீரியோ, குட்பை!'என்று தமாஷ் பண்ணுவதுபோல் நண்பர்களை அனுப்பி வைத்தான்.

வெளியே வந்ததும் இரண்டு பேரும் அவனைப்பற்றி மனக் கசப்புடன் பேசிக் கொண்டார்கள்.

'நண்பர்களை நடத்துகிற லட்சணம் நன்றாகத்தான் இருக்கு. ஒரு காப்பி அல்லது டீ உபசாரம்கூடக் கிடையாது. ஏண்டா பார்க்க வந்தாங்க, சீக்கிரம் போய்ச் சேரமாட்டாங்களா என்று நினைத்து ' என நடராஜன் முணமுணத்தான்.

'உதவி கேட்டு வந்த நண்பன் அவனிடமே திருடுவான் என்று எண்ணி, என்னைச் சந்தேகிக்கிறமாதிரிப் பேசிப் போட்டானே. சே, என்னாலே தாங்கமுடியலே ஐயா. மனசு ரொம்பவும் வேதனைப்படுது' என்று கைலாசம் புலம்பினான்.

அவன் தனது வாழ்க்கைச் சிரமங்களைப் பிரலாபித்தபடியே நடந்தான்.

'இப்படியே இருந்தால் என்ன செய்றதுன்னே எனக்குப் புரியலே. ஒரே குழப்பமாயிருக்கு .'

'மனம் தளராதேயும் ஐயா. அந்த அச்சாபீஸ்காரரைப் போய்ப் பாரும். நீரே தைரியமாய் போமய்யா' என்று நடரா ஜன் அவனுக்கு உற்சாகமூட்டினான்.

அப்போது எதிரே ஒரு ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. போராட்டக் கோஷங்களைக் கூவியவாறு நகர்ந்த அந்த உழைப் பாளிகளின் ஊர்வலத்தின் முன்னே, இரண்டு கால்களையும் இழந்து விட்ட ஒருவன், சக்கரங்களைப் பயன்படுத்தி, மகிழ்ச்சி யோடு சென்று கொண்டிருந்தான். அவன் உற்சாகத்தோடு காணப்பட்டான். 'வாழ்வோம். வாழவேண்டும்' என்ற நம் பிக்கையோடு அவனும் அந்த இயக்கத்தில் ஈடுபட்டு, கையை உயர்த்தி உயர்த்தி கோஷமிட்டுக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் கவலையின் ரேகைகூட இல்லை.

அவனையே கவனித்தபடி நின்ற கைலாசம் சொன்னான் : ‘இவனைப் பாரேன். இரண்டு கால்களும் இல்லை. அதற்காக வருத்தப்பட்டு முடங்கிக் கிடக்கவோ, பிச்சை எடுத்துப் பிழைக்கவோ அவன் எண்ணவில்லை. உழைத்து உயிர்வாழத் தயாராக இருக்கிறான். இவனைப் பார்க்கையில் என் உள்ளத்திலும் நம்பிக்கை உண்டாகிறது. கால்களும் கைகளும் உடல்நிலையும் நன்றாக உள்ள நான் ஏன் மனச்சோர்வடைய வேண்டும்? வாழமுடியும் என்ற நம்பிக்கையோடு, போராட வேண்டியது தான்.’

‘ஆமாம். வாழ்க்கையே ஒரு போராட்டம்தான். அதில் மனிதனுக்குத் தன்னம்பிக்கையும் உழைக்கும் ஊக்கமும்உற்சாகமும் இன்றியமையாத் தேவைகள்’ என்று நடராஜன் கூறினான். ‘சுயநலம் மிகுந்த பொய்த் தேவதைகளும் போலிப் பூசாரிகளும் பெருத்து வருகிறார்கள். அவர்களைக்கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது!’ என்று சொன்னான்.

அதே ஊர்வலம் பாஸ்கரன் பார்வையிலும் பட்டது.

ஒரு டாக்சியில் நிர்மலாவோடு அமர்ந்து அவன் போய்க் கொண்டிருந்தான்.

நகர்ந்து செல்லும் ஊர்வலமும், அதன் முன்னால் போகும் இரண்டு கால்களை இழந்துவிட்டவனும் அவர்கள் கவனத்தைக் கவரத் தவறவில்லை.

‘அவனைப் பாருங்களேன்! அவன்கூட ஆவேசமாகக் கத்துறானே!’ என்றாள் நிர்மலா.

பாஸ்கரன் சிரித்தான்.

‘அவனுக்கும் பிழைப்பு நடக்கணும் அல்லவா!’ என்றான்.

‘முன்னொரு காலத்தில்’ உள்ளத்தில் ஊற்றெடுத்த ஈவு இரக்கம் மனிதாபிமானம் போன்ற உணர்ச்சிகளை எல்லாம் இழந்துவிட்டவன், பணத்தின் கலகலப்பு போன்ற சிரிப்பை மீண்டும் கொட்டினான். அவளும் சேர்ந்து சிரித்தாள்.

(முடிந்தது)

# நிழல்மேல் மோகம்

பாக்கியம் பிள்ளை இன்னும் விழித்தெழவில்லை.

அவர் தூங்கவும் இல்லை.

'தூங்காமல் தூங்கிச் சுகம் பெற' முயலும்நிலை என்று சொல்லலாம். பாய்மீது—நைந்து பழசாகிக் கிழிந்துபோய்க் கொண்டிருந்ததுதான் — நீட்டி நிமிர்ந்துகிடந்த அவருடைய கண்கள் மூடியிருந்தன. முகம் உணர்விழந்து காணப்பட்டது. ஆனாலும் மனம் 'காப்பி ஜெபம்' பண்ணிக்கொண்டிருந்தது.

'சவத்து மூண்டை என்ன பண்ணிக்கிட்டிருக்கா? காப்பி கொண்டுவரலாமே? ஈழு ஈழுயின்னு, என்ன எழவையாவது செஞ்சு, நேரத்தை இழுத்துக் கடத்தி....சே,வரவர ரொம்பவும் சீண்ட்ரம் புடிச்ச எழவாப்போச்சு இவளோடே ..'

நன்றாக விடிந்துவிட்டது. வீடுகளும் தெருவும் நன்கு விழிப்புற்றுவிட்டதன் விளக்கமாகப் பலதரப்பட்ட ஓசைகளும், பலரகமானவர்களின் நடமாட்ட ஒலிகளும் கலகலத்துக் குழப்பிக்கொண்டிருந்தன. எல்லாம் அவர் காதுகளில் உறைக்கத்தான் செய்தன.

'ஏன் இன்னும் காப்பி வரலே? மணி ஏழு, ஏழரை இருக்கும் போலிருக்கே!' என்று மனம் முடுக்க, அவர் ஓங்கிக் குரல் கொடுத்தார் :

'ஏய் ஏ பர்வதம்!'

திரும்பத் திரும்பக் கூப்பிட்ட பிறகுதான், அலுத்துச் சலித்த தொனியில் பதில் வந்தது, 'என்ன கூப்பிட்டேளா?' என்று.

அவர் எதிர்பார்த்த காப்பி வரவில்லை. ஏதோ பெரிதாக வஞ்சிக்கப்பட்டுவிட்டது போன்ற ஆத்திரத்துடன் எழுந்து உட்கார்ந்தார், 'ஏ சவமே, உன் அறிவு எங்கே போச்சு?

மனுசன் எவ்வளவு நேரம்தான் காப்பிக்குக் காத்துக் கிடப்பது? ஒரு நாப்போல ஒருநாள், இப்ப தினம் சத்தம் போட்ட பிறகு தான் கொண்டு வரதுன்னு வழக்கமாகியிருக்கே ' என்று கத்தினர்.

அவருடைய அன்புச் 'சவம்'— 'சவத்து முண்டை'— ஆன பர்வதம் பதட்டம் இல்லாமல் வந்தாள். அவள் கையில் ஆவி பறக்கும் காப்பி நிறைந்த தம்ளர் இல்லாததைக் காணவும் அவருக்குச் சூடு அதிகரித்தது.

அவர் கொதிப்புக்கு மேலும் சூடேற்ற முயல்வதுபோல் அவள் பேசினள்: 'இன்னிலேயிருந்து புது வழக்கம்தான், இனிமே காப்பி கிடையாது ..'

'காப்பி கிடையாதா ? ஏன் கிடையாது ?'

'அதிகாரத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே. கருப்பட்டி காப்பித்தூளு வாங்கியாந்து போடுதீக பாருங்க ஒழுங்கா!' என்று மனைவி குத்தலாகச் சொன்னள்.

'தடியன் வாங்கியாந்து தரலியா நேத்து ?'

குறிப்பிட்டவன் மூத்த மகன் செல்லையா. அவன் தடியன் ஆக வளர்ந்திருக்கவுமில்லை. அப்படி வளரும்படி குடும்ப நிலைமையோ, வாழ்க்கை வசதிகளோ அவனுக்குத் துணை புரியவுமில்லை. என்ருலும், தந்தை அவனை அப்படித்தான் குறிப்பிடுவார்.

பர்வதம் நெடுமூச்செறிந்தாள். 'கடன் கிடைக்கலே கடைக்காரனும் பாக்கி அதிகம் சுமந்து போச்சு ; பழைய பாக்கி பூராவையும் தீர்த்தால்தான் இன்னமே சாமான் தரமுடியும்னு கண்டிப்பாய்ச் சொல்லிட்டான்...'

'அதுக்காக?'

'நம்ம வீட்டிலே காப்பிச் செலவுதான் பெரும் செலவு; கருப்பட்டிக்கும் தூளுக்குமே கணிசமான ரூபா காலியாகுது ; பாலுக்கு வேறே. காப்பியை நிறுத்திவிட்டால், செலவு ரொம்பக் குறையும்னு செல்லையா சொன்னன். அப்படிச் செய்றதுதான் சரீன்னு நானும் நெனச்சேன்...'

அவர் எரிந்து விழுந்தார். 'அவன் சொன்னனும்! இவ நெனைச்சாளம்! ஏன், சாப்பாட்டை நிறுத்திவிட்டால் ரொம்ப ரொம்ப மிச்சப்படும்னு உன் பிள்ளையாண்டான் உபதேசிக்கலையா ?'

மிளகா விலை, புளி விலை, எண்ணெய் விலை எல்லாம் ஏறிக்கிட்டேயிருக்கு, நமக்குக் கடனும் ஏறுது. புதுக்கடன்

புரளவும்மாட்டேன்குது. அதனாலே, இனிமேல் அப்படியும் இப்படியுமா முறையைக் கழிக்க வேண்டியதுதான். சாம்பாரு, புளிக்குழம்பு, பொரிச்ச குழம்பு அதுஇதுயின்னு நாக்கு கேட்கும். அப்பா சண்டை போடுவாங்க. அதைப்பார்த்தா ஒண்ணும் நடக்காது. நீ எப்படியாவது ஒப்பேத்து. ஒருவேளை அரிசிச் சோறு கிடைச்சாலே பெரும் பாக்கியம்னு எண்ண வேண்டிய நிலை நம்மது. நீ தினசரி பருக்கையும் தண்ணியும் தானே சாப்பிடுறே! இனி எல்லோருக்குமே அதுதான்னு பண்ணு. பட்டினி கிடக்க நமக்குச் சுதந்திரம் இருக்கவே இருக்குதுன்னு அவன் சொல்லுதான்..'

கண்ணை மூடிக்கொண்டு, கால்மேல் கால்போட்டவாறு, அமர்ந்திருந்த பிள்ளை வள்ளென்று விழுந்தார் கடிநாய் போல. சொல்லிட்டானா? நீயும் அவனும் கிணத்திலே போய் விழுங்க. செலவுகளே இராது' என்றார். 'சம்பாதிக்கத் துப்பில்லேன்னா லும் இந்தச் சவுடாலுக்குக் குறைச்சல் இல்லை' என முணமுணத் தார்.

'அவன் சம்பாதிக்காமலா இருக்கான்? எவ்வளவு சம்பாத் தியம் வந்தாலும் இந்தக்காலத்திலே கட்டுப்படியாகலே, விலைவாசிதான் அநியாயமா ஏறிக்கிட்டே போகுதே. நீங்களும் கடையிலே கணக்கு எழுதிக்கிழுதி பணம் கொண்டு வந்தால், கொஞ்சம் உதவியாக இருக்கும்.'

'என்னது? என்ன சொன்னே?' என்று உறுமினார் பிள்ளை. ஐயாவாள் இன்னொருத்தன்கிட்டே கைகட்டிச் சேவகம் பண்றதா? ஹோ, யாரைப் பார்த்துடீ அப்படிச் சொல்லிப் போட்டே? கல்கத்தா கணபதியா பிள்ளை பேரன்—சிவபுரம் பெரிய வீட்டு சாமியாபிள்ளை மகன்—பாக்கியம் பிள்ளை கடைக் கணக்கனாக வேலை பார்க்கணுமோ? இந்தச் சென்மத்திலே நடக்காத காரியம், போடி போக்கத்தவளே! என்று உரத்தக் குரலில் பேசினார். தொடர்ந்து தொண்டையைச் செருமிக் காறித் துப்பினார்.

பார்வதம் அங்கே நிற்க விரும்பாதவளாய் அடுக்களைப் பக்கம் போய்விட்டாள்.

பிள்ளை தேவாங்கு மாதிரி தலையைத் தொங்கபோட்டவாறு உட்கார்ந்திருந்தார் சிறிது நேரம். நம்ம குடும்பம் இருந்த நிலைமை என்ன; நம்ம தாத்தா கல்கத்தாப் பிள்ளைன்னு பேரு எடுத்து என்னம்மா வாழ்ந்தாக! அவாள் மகன் எப்படி செயம் செயமின்னு போட்டு அடிச்சாரு! அவாள் பேரன்...... ஹோ, வேலைக்குப் போகணுமாமில்லே வேலைக்கு! எத்தனை பேருக்கு வேலை கொடுத்து, அதிகாரமிடுக்கோடு வாழ்ந்த பரம்பரை! யானை படுத்தாலும் குதிரை மட்டப்பாக. இன்னைக்கு

இளைச்சுப்போனேம். அதுக்காக எப்பவும் இப்படியேவா இருந்திடப்போறோம்? இன்னிக்கு ராத்திரியே ஒரு புதையல் கிடைக்குதுனு வையி ..... இல்லே, அதிர்ஷ்டப் பரிசுலே லட்ச ரூபா நமக்கு வந்து சேராமலா போகும்? ... ஐயாவாள் எதுக் காக பேட்டைப்புள்ளெ கடையிலேயும், பொஸ்தகக் கடை யிலேயும், அங்கெயும் இங்கெயும் கணக்கு எழுதப் போக ணும்கேன்? இல்லே, தெரியாமல்லா கேட்கேன் .....'

அவர் மனம்தான் கேட்டது. அதைச் செவிமடுக்க எதிரே யாரும் இல்லை காறை உதிர்ந்த சுவர்தான் நின்றது. அதையே உறுத்துப் பார்த்த பிள்ளையின் மனசிலும் குறுகுறுப்பு ஏற்பட்டது.

— தாத்தா பெரிய வீடாகக் கட்டிப் போட்டுட்டுப் போயிட்டாக. இப்ப பொங்கலுக்குப் பொங்கல் வெள்ளை அடிக்கக்கூட நம்மாலே ஏலலே. இப்படி நெடுகச் சுண்ணும்பு விழுது. அசிங்கமாத்தான் இருக்கு. என்ன செய்றது? ரிப்பேர் பண்றதுக்கு வக்கு இல்லியே ..இன்னிக்கு காப்பிக்கே வழி இல்லே. டீக்கடை, காப்பிக் கடை. ஒரு கடையிலும் கடன் கிடைக்காது. வீட்டிலும் இல்லேன்னு ஆயிப்போச்சு. கல்கத்தாப் பிள்ளை பேரனுக்கு காப்பிக்கே லாட்டரி? இப்படி ஆயிடுச்சா நம்மபாடு...முருகா நீயும் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கே? இரு இரு அப்பனே முருகா!

பாக்கியம் பிள்ளை எழுந்து, துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே நடந்தார். வயிற்றெரிச்சல் தீரணுமே. ஆற்றுப் பக்கம் போயி, ஆறஅமரக் குளிச்சிப்போட்டு, அப்பன் முருகனைச் சேவித்துவிட்டு வந்தால், ரெண்டு ரெண்டரை மணி நேரம் போன இடம் தெரியாமல் பறந்தோடிப் போயிராதா என்ன!

சிதைந்து கொண்டிருக்கும் சிவபுரம் காலவேகத்தோடு வளர்ச்சி அடைய முடியாமல் நலிந்து வருகிற கிராமங்களின் 'வகை மாதிரியான' ஒரு எடுத்துக்காட்டு என்றால், நாட்டுப் புறங்களில் அங்கங்கே போலியானதொரு வாழ்க்கை முறையை விடாது பற்றியவாறே நசிவடைந்துவரும் ஒரு வர்க்கத்தின் சரியான பிரதிநிதி பாக்கியம் பிள்ளை.

'அப்பன் பாட்டன் எப்படி எப்படியோ தேடிவைத்த சொத்தை' அனுபவித்து எவ்விதமான வேலையும் செய்யாமல் 'சுகஜீவனம்' என்று பெருமை பேசிவந்த நடுத்தரவர்க்கத்தின் மேல்தட்டினர் ஒவ்வொரு கிராமத்திலும் உண்டு. பின்வந்த தலைமுறையினர் அந்தப் பெருமையைப் பாதுகாப்பதற்கு, இருக் கிற நிலத்தை விற்றும், வீட்டை அடமானம் வைத்தும்,

கடனுக்குமேல் கடன்வாங்கியும் 'கோல்மால் வேலைகளை'ப் பண்ணவேண்டிய அவசியம் ஏற்பட்டபோதிலும், 'ஐயாவாள் எதுக்குங்கேன் இன்னொரு பயல்கிட்டே கைகட்டி, அவன் உத்திரவுக்குக் கீழ்ப்படிஞ்சு, வேலை பார்க்கணும்?' என்ற ஜம்ப நினைப்பைக் கைகழுவத் தயாராக இருப்பதில்லை குடும்பத் தலைவனின் இந்த மனப்பான்மையினால் விளைகிற சிறுமைகளையும் சிரமங்களையும் தாங்கவேண்டிய பொறுப்பு அவனுடைய பெண்டாட்டி பிள்ளைகளின் தலைகள்மீது படிய, அவர்களுக்கு குடும்ப வாழ்க்கை என்பதே கடுமையான தண்டனையாகி விடுகிறது.

பாக்கியா பிள்ளையின் குடும்ப விவகாரம் இந்த விதமானதுதான்.

'முன்னொரு காலத்திலே' சிவபுரம் கணபதியா பிள்ளை, எவனோ ஒருவன் அவரை நம்பிக்கொடுத்த நூறு ரூபாயை 'அமுக்கிக்கொண்டு' வடக்கே கம்பி நீட்டினார். இருபது வருடங்களுக்குப் பிறகு அவர் ஊர் திரும்பியபோது அவர் கையில் ரொக்கம் நிறையவே இருந்தது. கல்கத்தா போய், ஒரு கடையில் வேலைபார்த்து, அப்புறம் பார்ட்னர் ஆகி, பின்னர் கடை முதலாளியாகிச் சம்பாதித்ததாக அவர் சொன்னார். அவர் சொன்னதை எல்லாம் நம்பவேண்டிய நிலையில்தான் சிவபுரத்தினர் இருந்தனர். அப்போது அவருக்கு வயசு 41.

அதன்பிறகு அவர் கல்யாணம் செய்துகொண்டார். கல்கத்தாப்பிள்ளை' என்ற மதிப்பும் ஏகப்பட்ட பணமும் பெற்றிருந்த அவருக்குப் பெண் தருவதற்கு 'நான்-நீ என்று அடித்துக்கொண்டு' முன்வந்த பெரிய வீட்டுக்காரர்கள் அவருடைய சமூகத்தில் அநேகர் இருந்தார்கள்.

அவர் கல்யாணம் செய்து வம்சவிருத்தி பண்ணி, பெரிய வீடு கட்டி ஊரில் பெரிய புள்ளியாக வாழ்ந்து, 76-வது வயசில் மண்டையைப் போட்டார். அவர் அதிக வயசான பிறகே கல்யாண பாக்கியம் அடைய முடிந்தது என்றாலும், தனது புத்திர பாக்கியங்களுக்கு இளம் வயசிலேயே அந்த ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். அவருக்குச் சாமிநாதன் என்று ஒரு பையனும், நான்கு பெண்களும் உண்டு.

அந்தப் பையன்தான் பெரிய வீட்டுச் சாமியா பிள்ளை என்று பெயரெடுத்து, பணம் பண்ணுகிற வேலையை உள்ளூரிலேயே வெற்றிகரமாகச் செய்துவந்தான். நிலம் விற்பது வாங்குவது, கல்யாணத்துக்குப் பெண் முடிப்பது, பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை தேடிக்கொடுப்பது போன்ற விவகாரங்களைத் திருப்திகரமாக நிறைவேற்றினார் பெரிய வீட்டுப்பிள்ளை.

அவைகளுக்காக 'புரோக்கரெஜ்' 'கமிஷன்' என்று கணிசமான தொகை பெற்று வந்தார். அத்துடன், தொழில் முறை' உத்தியோகம், பிள்ளைகள் படிப்பு என்று பலவிதக் காரணங்களினால் தூரத்து ஊர்களிலும் நகரங்களிலும் குடியேறியிருந்த குடும்பங்களின் சொத்துக்களை 'மேல்பார்வை' என்று மேனேஜ் பண்ணும் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்வது வழக்கம். இதில் அவர் நிறையவே சுரண்ட முடிந்தது.

'சூடு அடிக்கிற மாட்டை வாயைக் கட்டிப்போட முடியுமா? அது வைக்கலே அவுக் அவுக்குனு தின்கத்தான் செய்யும்' என்றும், 'தேன் எடுக்கிறவன் கையை நக்காமல் இருப்பானா?' என்றும், 'சாணி போட்டால், அதிலே மண்ணு ஒட்டத்தானே செய்யும்?' என்றும் ஊர்க்காரர்கள், இவரைப் போன்ற 'பெரிய பிள்ளை'களின் திருவிளையாடல்களுக்குச் சமாதானம் கூறுவது சகஜமாக இருந்தது. அதனாலே சாமியா பிள்ளையின் செயல்கள் குற்றங்களாகவோ, பாபங்களாகவோ கருதப்பட்டதில்லை பிறரால். சிவபுரத்திலேயே அவரைப்போல் இன்னும் மூன்று நான்குபேர் இருந்ததனால், இவை எல்லாம் இயல்பான தர்ம காரியங்களாகவே மதிக்கப்பட்டன.

அவர்கள் பாட்டை அவர்கள் வெற்றிகரமாகக் கொண்டு செலுத்தி மறைந்த பிறகு, அவர்களுக்கு அடுத்த தலைமுறையினர், அனைவராலும் அப்படி ஒரு வாழ்க்கையை அவ்வூரில் வாழமுடியாது என்று புரிந்துகொண்டார்கள். குடும்பச் சொத்து, கல்யாணங்கள் கல்வி கருமாதி இத்யாதி காரணங்களினாலே கரைந்துபோய், கடன்கள் பெருகி வந்ததனால், உள்ளூரிலே சும்மா இருப்பது சுகப்படாது என்று பலர் ஞானோதயம் பெற்றார்கள். வேலைகளைத் தேடி வெளியூர் போய் விட்டார்கள்.

ஆனபோதிலும், 'எங்க தாத்தா வேலையா பார்த்தாரு? எங்க அப்பாவுக்கு இருந்த மதிப்பு என்ன? நாம எதுக்காக வேலை பார்க்கணும்? என்ற எண்ணத்தைத் திடமாக வளர்த்தவர்கள், அநேகமாக ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவர் இருந்தார்கள். பிள்ளையாய்ப் பிறந்தவர்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்காவிட்டால் கேவலம்; நாம இருந்த பேரும் வாழ்ந்த பேரும் கெட்டுப்போகும் என்ற எண்ணம் குடும்பப் பெரியவர்கள் உள்ளத்தில் கரும்பாறையாய் நிலைத்திருப்பதால், சின்ன வயசிலேயே பிள்ளையாண்டான்களுக்குத் திருமணம் ஆவதும், அதன் விளைவாகப் 'பொல பொலென, கலகலெனப் பிள்ளைகள் பிறப்பதும், இவற்றின் பயனாகவெல்லாம் மூன்றாவது தலைமுறையினரின் பிரச்சினைகளும் குழப்பங்களும்

அதிகரிப்பதும் 'வழுவல்' கால வகையினுனே' என்று வளர்ந்து வருவது சிவபுரத்தின் நியதியாய் அமைந்துள்ளது.

இந்த நியதியின்படி வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் பாக்கியம் பிள்ளை.

தாத்தா போல 'எப்படியோ ஏகப்பட்ட பணம்' சம்பாதிக்கும் திறமை இவரிடம் இல்லை. தகப்பனைப்போல 'வாயடியும் கையடியும் கொண்டு, ஊரை அடிச்சு உலையிலே போட்டு' தன் பாட்டைப் பார்க்கும் சாமர்த்தியமும் கிடையாது. எனினும், அவர்களைப்போல 'வீட்டோடு இருந்து சாப்பிடுவோம்' என்ற எண்ணம்மட்டும் சின்ன வயசு முதலே ஊறிப்போய் விட்டது அவர் உள்ளத்திலே.

அவருடைய மகன் செல்லையா புதிய வார்ப்பு. குடும்ப நிலைமையும், ஊரின் நிலையும், வாழ்க்கையும், கால ஓட்டமும் அவனைச் சிறுபிராயம் முதலே வெகுவாகச் சோதித்து உருவாக்கி விட்டன. எஸ். எஸ்.எல்.ஸி. யில் பாஸ் பண்ணுத அவனுக்கு எளிதில் வேலை கிடைக்கவில்லை. வேலை இல்லாமல் வீட்டில் இருந்த ஒரு வருடமும், பெற்ருேர்களிடம் அவன் வாங்கிக் கட்டிய ஏச்சும் பேச்சும், ஊராரின் குறைகூறல்களும், வீட்டு நிலைமையும் பிறவும் அவனை ஒரு நவீன புத்தன் ஆக்கி, அனுபவஞானேதயம் பெறும்படிச் செய்துவிட்டன.

இந்த மனநிலை பெறுகிறவர்கள் எவரிடமும் சொல்லாமல் 'பட்டாளத்தில் சேர்ந்து விடுவது' அந்நாளைய வழக்கமாக இருந்தது. பையன் அப்படிச் செய்யவில்லை. ஒருவரிடமும் தன் எண்ணத்தை வெளியிடாமல், டவுனுக்குப் போய், பெரிய ஒட்டல் ஒன்றில் சௌர்வர் ஆகச் சேர்ந்து விட்டான். இதனுல் அவனுடைய சாப்பாட்டுப் பிரச்னையும் தீர்ந்தது. சம்பளம் என்று ஏதோ கொஞ்சம் பணம் கிடைக்கவும் வழி பிறந்தது.

நாலைந்து நாட்களுக்குப் பிறகுதான் இந்த விஷயம் பாக்கியம் பிள்ளைக்குத் தெரிய வந்தது. டவுன் போய் வந்த சிவபுரத்து அண்ணுச்சி ஒருவர் அவரிடம் 'வத்தி வைத்து' விட்டார். பிள்ளை குதியாய்க் குதித்தார். கல்கத்தாப் பிள்ளை குடும்பத்திலே இப்படி ஒரு காவோலைப் பயல் பிறக்கணுமா? பெரிய வீட்டுப் பிள்ளை சேர்த்து வைத்திருந்த மதிப்பு என்ன ஆவது? இப்படி அவருக்கு உரிய பாட்டுகளைப் புலம்பித் தீர்த்தார். டவுனுக்குப் போய் அந்தப் பயல் மூஞ்சியில் முழிக்க விருப்பமில்லை என்று ஊரிலேயே புகைந்து பொறுமிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் வீட்டுக்கு வந்த செல்லையாவிடம் கத்தினுர். அவன் பொறுமையோடு பேசினுன். 'உழைப்பது கேவலம் இல்லை. உண்மையாகவும் நேர்மையாகவும் உழைக்கத் துணை

புரிகிற எந்தத் தொழிலும் கௌரவமானதுதான். உழைக்காமலே இருந்து தின்ன ஆசைப்படுவதுதான் பெரும் குற்றம். நீங்கள் வீண் பெருமையும் போலிக்கௌரவமும் பாராட்டாமல் நாணயமான தொழில் ஏதாவது செய்திருந்தால் - சிறுகடை ஏதேனும் நடத்தியிருந்தால் - நம்ம நிலைமை இப்போ இவ்வளவுக்கு வந்திராது ..'

'பெரிய தகப்பன்சாமி ஆயிட்டியோ நீ? நீ எல்லாம் எங்கெலே உருப்படப் போறே' என்று காறித் துப்புவதோடு, அவன் எக்கேடும் கெடட்டும் என்று விட்டுவிட்டார் பிள்ளை.

செல்லையா தன் போக்கில் உழைக்கலானான். 'பெரிய வீட்டுப் பையன் என்று பெருமை பேசிக்கிட்டிருந்தால் பட்டினி கிடக்க வேண்டியதுதான். ஒவ்வொருவனும் ஏதாவது தொழில் செய்து பிழைக்கவேண்டிய காலம் இது' என்று அவனைப் பற்றி விசாரிப்பவர்களிடம் அவன் சொல்வது வழக்கம்.

அவன் ஓட்டல் தொழிலாளியாகவே இருந்துவிடவில்லை. ஓட்டலுக்கு வருகிறவர்களிடம் நன்கு பழகி, பேச்சுக் கொடுத்து, யார் யாரையோ தயவு பிடித்து, ஒரு மோட்டார் தொழிற்சாலையில் வேலை தேடிக்கொண்டான். இதற்குத் தினசரி சிவபுரத்திலிருந்து வந்துபோக வசதி இருந்ததனால், அவன் வீட்டோடு தங்க முடிந்தது. அவனது வருமானம் குடும்பத்துக்கு நன்கு உதவியது.

என்றாலும், வாழ்வின் தேவைகளும், விலைவாசி உயர்வுகளும் அக்குடும்பத்தின் கஷ்டங்களையும் வறுமையையும் வளர்த்தே வந்தன. பாக்கியம் பிள்ளை தனக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு என உணர்ந்ததாகவே தெரியவில்லை. தமது தேவைகள் நிறைவுற வேண்டும் என்று மட்டும் உரிமையோடு எதிர்பார்த்தார்.

'இன்றும் காப்பி இல்லை; இனி என்றும் காப்பி கிடைக்காது போலிருக்கு!' என்ற எண்ணம் அவரை ஆத்திரம் கொள்ள வைத்தது. ஆற்றுக் குளியலும் அப்பன் முருகன் தரிசனமும் அவர் உள்ளத்தின் எரிச்சலைத் தணிய வைத்துவிடவில்லை. ஒரே புகைச்சல். மனைவி மீதும், மக்கள் மேலும் சீறி விழுந்துகொண்டிருந்தார். மாலையில் மகன் வீடு திரும்பியதும் அவனைக் கடித்துக் குதற வேண்டும் என்று உறுமிக் கொதித்தவாறு இருந்தது அவர் உள்ளம்.

செல்லையா அவரது ஆங்காரத்தைக் கிளறிவிடக்கூடிய வேறு சில யோசனைகளோடு சந்திக்க முன்வருவான் என்று அவர் எண்ணியிருக்கவே இல்லை. ஆனால் அப்படித்தான் நடந்தது.

'' அப்பாவோ வரவுக்கு வழி எதுவும் செய்வதாயில்லை. வீட்டிலே எல்லோரும் சாப்பாட்டுக்கு இல்லாமல் கஷ்டப்பட வேண்டிய நிலைமையை எத்தனை காலத்துக்குச் சகித்துக்கொண் டிருக்க முடியும்? மோட்டார் கம்பெனி மானேஜர் வீட்டிலே கைக்குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டிருக்கவும், சிறு சிறு வேலைகள் செய்யவும் ஒரு சின்னப்புள்ளெ தேவைப் படுதாம். நம்ம வள்ளியை அங்கே அனுப்பி வைக்கலாம்னு நெனைக்கிறேன். அங்கே அவ நல்ல சாப்பாடு சாப்பிட முடி யும். துணிமணிகளும் கிடைக்கும். கொஞ்சம் சம்பளமும் தருவாங்க' என்று அம்மாவிடம் மகன் சொன்னது தந்தை யின் காதுகளிலும் தைத்தது.

'ஏலே ஏ வெறுவாய்க்கெட்ட மூதேவி! உனக்கு ஏமிலே இப்படி எல்லாம் புத்தி போகுது? பெரியவீட்டுப் பையனு லெட்சணமா நடக்கணும்னு உனக்கு ஏமிலே தோணமாட் டேன்து? கல்கத்தாப் பிள்ளைவாள் ..'

அவர் பேச்சில் பையன், 'தடிவெட்டிப் போட்டான்', 'திவ்யமா மூக்குமுட்டச் சாப்பிட்டாக. வயித்தைத் தடவிக் கிட்டுப் படுத்தாக. அவாளோட பேரனுக்குப் பொறந்ததுக கஞ்சிக்கு லோல்படுதுக. இது என்ன பெருமை வேண்டிக் கிடக்கு வீண் ஜம்பம்?' என்று பேசி.

பிள்ளை சீறினார். அவனை அடிக்கப் பாய்வதுபோல் தாவி னார். அவன் அமைதியாக நின்றான்.

'எங்க முன்னோர்கள் பாண்டிய ராசாக்களாக்கும்; பல்லாக் கிலும், குதிரைகள்மீதுதான் சவாரி போனுக்களாக்கும் என்று பேச்சுக்குப் பேச்சு சொல்லிக்கொண்டு, தன் பின்புறத்தைத் தடவிவிட்டுக்கொள்வானும் ஒரு சோமாறி. அப்படித்தா னிருக்கு உங்கள் போக்கும். பழம் பெருமை என்கிற நிழலைப் பிடிச்சுக்கிட்டு குருட்டாட்டம் ஆடுறீங்க. கண்ணைத் திறந்து நிகழ்காலத்தைப் பார்த்து, அதுக்குத் தக்கபடி நடந்து கொள் ளுங்க!' என்றும் சொன்னான்.

பிள்ளையின் ஆத்திரம் அறிவை மறைத்தது. கோபம் சீறு சீறென்று பொங்கி வந்தது. பேச்சு தொடர்பாக வர மறுத் தது. அவனைக் கண்டபடி ஏசத்தான் முடிந்தது அவரால்.

'இப்ப என்னை ஏசிப் பிரயோசனம் இல்லை. இதே ரீதியிலே போனல்' அம்மை பல வீடுகளுக்குத் தண்ணி எடுத்துக் கொடுத்தும், தோசைமா அரைத்துக் கொடுத்தும், சமையல் வேலை பண்ணியும் மகள்களையும் உங்களையும் காப்பாத்தவேண் டிய நிலைமை ஏற்பட்டுவிடும். அப்போமட்டும் உங்க பெருமை என்ன செய்யுமாம்? கடன்காரனுக இந்த வீட்டை ஏலத்துக்குக்

கொண்டு வாறத்துக்குமுந்தி, இதை வில்லுங்க. பத்தாயி ரத்துக்கு விலெ போகும். கடன் ஆருயிரம் ரூபாய்க்கு இருக்கும். மீதியை வைத்து ஏதாவது பிசினஸ் பண்ணுங்க. சிறு மளிகைக் கடை நடத்தலாம். அல்லது ..'

மகனின் ஆலோசனை தந்தையை வெறிகொள்ளச் செய்தது. 'போடா சவத்துப் பயலுக்குப் பொறந்த பயலே! புத்தி போற போக்கைப் பாரு. கல்கத்தாப் பிள்ளைவாள் பரம்பரையிலே இப்படி ஒரு அல்பப் பயல் வந்து பொறப்பான்னு நான் எண்ணவெ இல்லே என் முன்னே நிக்காதே. வெளியே போ. நீ இனி என் மூஞ்சியிலே முழிக்கப்படாது' என்று காட்டுக் கூப்பாடு போட்டார். அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர்.

அவர் உடல் பூராவும் படபடத்தது. கண்கள் சிவப்பேறிக் கனன்றன. 'முருகா, அப்பனே! எல்லாம் உனக்கே நல்லா இருந்தால் சரிதான்' என்று முனகியவாறு திண்ணையில் படுத் தார், கண்களை மூடிக்கொண்டார்.

(தாமரை—1970)

# ஒரு ஊரில் ஒரு நாள்

இன்னும் நன்ருக விடியவில்லை. மணி 5-30 இருக்கலாம்.

ஒலிபெருக்கியின் கரகரத்த குரல் பாட்டை மிதக்க விட்டது—

'கூவின பூங்குயில், கூவின கோழி;
குருகுகள் இயம்பின;
இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது;
விருப்பொடு நமக்குத்
தேவ நற்செறி கழல்
தாளிணைக் காட்டாய்!'

புண்ணியம் நாடிய முன்ஞேர் ஒருவர் ஏற்பாடு செய்து விட்டுப்போன திட்டத்தின்படி, அவ்வூர் 'திருவாசக மடம்' தன் கடமைகளில் ஒன்றைச் செய்து கொண்டிருந்தது.

மடத்தின் கணக்கு வழக்குகளையும் நிர்வாகப் பொறுப்புக் களையும் கவனித்துச் செயல்படுத்தும் பணியை ஏற்றுக் கொண் டிருக்கிற பாடலிங்கம் பிள்ளைக்கு எப்போது விழிப்புத் தட்டு கிறதோ, அப்போதே பூங்குயிலும் கோழியும் கூவும்! அவர் நாலரை மணிக்கு எழுந்தாலும் ஏழு மணிக்கு எழுந்தாலும், முதல் வேலையாக பிளேட்டைப் போடுவார்; பாட்டு அலறும். 'ஏனய்யா இப்படிச் செய்கிறீர்; தினந்தோறும் திட்டமாக ஏதாவது ஒரு மணிக்கு—ஆறு மணிக்கு என்று வச்சுக்கிடுமேன்! —காலம் தவருமல் பள்ளி எழுச்சிப் பாட்டை ஒலி பரப்பினுல் என்ன' என்று அவரை யாரும் கேட்பதில்லை. அவரைத் தட்டிக் கேட்கவும் முடியாது. எவராவது கேட்டு வைத்தால், அப்புறம் மாதக் கணக்கில் ஒலிபெருக்கியில் பூங்குயில் கூவாது;

குருகுகள் இயம்பா; தாளிணைக் காட்டும்படி தேவனை வேண்டித் 'திருப்பள்ளி எழுச்சி' ஒலிக்கவும் செய்யாது.

மேலும், 'போக்கத்துப் போயி ஒருத்தரு சொத்தை இப்படி அநாவசியமான செலவுகள் செய்யும்படி எழுதி வச்சிருக்காரு. அவரு எழுதிவச்ச தருமக் கட்டளைகள் எல்லாம் ஒழுங்கா நடக்காக்கும்— இது மட்டும் ஒழுங்கா லெட்சணமா நடைபெறலேயின்னு சொல்லதுக்கு !' என்று அந்த ஊர்க்காரர்களில் பலரும் பேசுவார்கள். அவர்கள் இயல்பு அது...

'ஏதோ நடந்தால் சரி' என்ற மனோபாவம். ''இதுவாவது நடக்குதில்லே !' எனும் நினைப்பு. 'எதுவுமே நடக்கலேன்னு வையி ; அதனாலே என்ன கெட்டுப்போகப் போகுதுங்கேன்!' என்றொரு மெத்தனம்.

ஆகவே அந்த ஊர் விழிப்புறாமல் தூங்கிக்கொண்டேயிருந்தது !

ஃ ஃ ஃ

தமிழ் நாட்டில்—

காலவேகத்தில் வெகுவேகமான வளர்ச்சியும் மலர்ச்சியும் பெற்று முன்னேறிவிட்ட கிராமங்கள் இருக்கின்றன.

காலச் சுழிப்பில் அரிப்புண்டு, கரைந்து தேய்ந்து, மெது மெதுவாய் நசித்துக்கொண்டிருக்கும் கிராமங்களும் இருக்கின்றன.

கால ஓட்டத்தினால் புறத்தே ஓரளவு பாதிக்கப்பட்டும், தன்மைகளிலும் போக்குகளிலும் இயல்புகளிலும் எவ்விதமான மாற்றங்களையும் பெறாது, தலைமுறை தலைமுறையாக ஒரே மாதிரி இருந்துவரும் கிராமங்களும் உள்ளன.

இந்த ரகத்தைச் சேர்ந்த சிற்றூர்தான் சிவபுரம்.

ஃ ஃ ஃ

பாலையாப்பிள்ளை அன்றைய சாப்பாடுபற்றித் திட்டமிட்டார்.

அவர் நல்ல ரசிகர். வாழ்க்கை நன்றாக உண்டு தின்று அனுபவிப்பதற்காகத்தான் என்பது அவரது தத்துவம். காலையில் எழுந்த உடனேயே, 'இன்னக்கி என்ன குழம்பு? துணைக்கறி என்ன? ராத்திரிக்கு என்ன பலகாரம் பண்ணலாம்? சாயங்கால டிபனுக்கு என்னென்ன?' என்பதுதான் அவர் மனசைக் குழப்பும் தீவிரப் பிரச்சினைகள் ஆகும்.

விருந்தோம்பும் குணத்திலும் அவர் சிறப்பானவர். தினசரி அவர் வீட்டில் நாலைந்து பேராவது அவரது உபசரிப்பில் சிக்கித் திக்குமுக்காடிக் கொண்டிருப்பார்கள்.

அன்றும் அவர் வீட்டில் மூன்று நான்குபேர் விருந்தாளிகள் தங்கியிருந்தார்கள்.

கண் விழித்ததுமே அனைவருக்கும் 'பஸ்ட் கிளாஸ் காஃபி' வழங்கப்பட்டது. காலைக் கடன்கள் முடித்து, நீராடிவிட்டு, குளுகுளு எனக் காட்சி அளித்தவர்களுக்குக் காலை ஆகாரம் இட்டிலி, உப்புமா, தேங்காய் மிக நிறையச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சட்னி, மிளகாய்ப்பொடி- எண்ணெய், இட்டிலி மேலே நெய், சாம்பார், வடை மிக்ஸ்சர், இரண்டு மலைப்பழம். 'வேண்டாம் வேண்டாம்' என்று அதிதிகள் மறுக்க மறுக்க, 'போடு சும்மா போடு இன்னொரு இட்டிலி போடு .. உப்புமா வை ஸார்வாளுக்கு வடை... அந்த இலைக்குச் சட்னி' என்று குடும்பத் தலைவர் உபசரிப்பு— டைரக்ஷன் பண்ண, பெண்கள் பரிமாறிக்கொண்டே இருப்பார்கள். பிறகு அருமையான காப்பி.

சில மணிநேரம் கழித்து, பழவகைகள் பிறகு, 'ஃப்ரூட் ஜூஸ்'. மத்தியானச் சாப்பாடு, பன்னிரண்டரைக்கு. சாம்பார், ரசம், தயிர், வகைக் கறிகள், அப்பளம், வத்தல் வகையராக்கள், துவையல், ஊறுகாய் எல்லாவற்றுடனும் கல்யாண வீட்டுச் சாப்பாடு கெட்டது போ!' என்று சொல்லும் விதத்தில் பிரமாதமாக இருக்கும். பாயசமும் உண்டு. மலைவாழைப்பழம் தவிர்க்கமுடியாத அயிட்டம்.

சாப்பிட்டு முடித்து இளைப்பாற உட்கார்ந்ததும், ஆரஞ்சு, திராட்சை வகையரா.

நாலு மணிக்கு டிபன். பஜ்ஜி, மிக்ஸ்சர், பக்கடா, ஓமப் பொடி, காரச்சேவு அல்லது காராபூந்தி; ஸ்வீட்டில் அல்வா, லட்டு, ஜிலேபி, பிஸ்கட் ரகங்கள், வறுவல் முதலியன 'பக்க மேளம்'. 'திக்' ஆகப் பால் ஊற்றப்பட்ட 'ஸ்ட்ராங்' காஃபி'.

ஏழரை மணிக்கு இரவுச் சாப்பாடு. தோசை, உப்புமா, சட்னி, சாம்பார், மிளகாய்ப் பொடி, பால் ஊற்றிய 'சுக்கு வெந்நி'.

ஒன்பதரை மணிக்குப் படுக்கப் போகும்பொழுது ஒரு தம்ளர் பால்.

திவ்யமான சாப்பாடு. திருப்திகரமான வாழ்க்கை. 'வசதிகள் இருக்கு, கந்தப்பன் கொடுக்கான். இருந்தப்பன் திங்கான். வந்தப்பனும் தின்னுட்டு சந்தோஷப்படட்டுமே!' வே, இறைச்ச கிணறுதான் ஊறும். அள்ளி அள்ளிச் செலவு பண்ணப் பண்ண, வளமும் வசதியும் வந்துக்கிட்டே இருக்கும்.

ஆமா!' —இப்படி வாய் மணக்கப் பேசுவதற்கு அவரிடம் அநேக வசனங்கள் இருந்தன.

சாப்பிடுவதும், சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பதும், களைப்புஏற்பட்டால் தூங்குவதும்தான் பாலையாப் பிள்ளையின் தினசரி அலுவல்கள். அவர் வீட்டுக்கு வருகிற விருந்தாளிகள் செய்யவேண்டிய வேலைகளும் அவைதான்.

அவரைப் போன்ற சுகவாசிகள் அவ்வூரில் பலர் இருந்தார்கள். பாலையாப் பிள்ளையைப்போல் அவ்வளவு தடபுடலாக வாழ்க்கையை ஓட்டமுடியாவிட்டாலும்கூட, 'செட்டி கப்பலுக்குச் செந்தூரான்துணை!' என்று சொல்லிக்கொண்டு காலக் கடலிலே தங்கள் வாழ்க்கைக் கப்பலை அதன் போக்கிற்கு விட்டு விட்டு வம்பளந்து பொழுதோட்டிச் சுகம் அனுபவித்து மகிழ்ந்தார்கள் அவர்கள்.

சொத்து இருந்தவர்கள், அதை விற்றும், அடமானம் வைத்தும், 'ஒத்திக்கு விட்டும்', கடன் பெற்றும், பணம் வாங்கிச் செலவு செய்துகொண்டு உல்லாச வாழ்வு வாழ்ந்தார்கள். ஆகவே, பாலையாப்பிள்ளை போன்ற 'பாக்கியவான்கள்' ஒன்றிருவரைத் தவிர மற்றவர்கள் தலைமுறைக்குத் தலைமுறை பொருளாதாரத்தில் தேய்ந்து போய்க்கொண்டிருந்தார்கள். பரஸ்பரம் பொருமைப்படுவதையும் புறம்பேசுவதையும் உபதொழிலாக வளர்த்துவந்த அவர்கள், 'அவனுக்கென்ன! கொடுத்து வைத்தவன்!' என்று கிண்டலாகப் பாலையாப்பிள்ளை பற்றிக் குறிப்பிட்டு மகிழ்வது வழக்கம்.

மேற்படி பிள்ளைவாளோ, தம்மை மறந்தவராய், மற்றவர்களை 'தெண்டச்சோத்துத் தடிராமன்கள்' என்று கூறிவிட்டுப் பெரும் சிரிப்புச் சிரிப்பார்.

ஃ ஃ ஃ

முருகன் உழைக்கக் கிளம்புவதற்கு முன்பு வெறும் நீராகாரத்தைக் குடித்தான்.

பாலையாப் பிள்ளைக்குச் சொந்தமான தோட்டத்தில் பாடு பட்டான். கடும் உழைப்புத்தான். ஒன்பது மணி சுமாருக்கு 'பருக்கையும் தண்ணியும்' (நீரில் கொஞ்சம் சோற்றுப் பருக்கைகள் மிதந்தன) வெங்காயத்தைக் கடித்துக்கொண்டே சாப்பிட்டு முடித்தான். பிறகும் உடல் உழைப்பு.

மத்தியானம் இரண்டு மணிக்கு, அவன் மனைவி கொண்டு தரும் கஞ்சி ஆகாரம். பிறகு, ஆச்சி வீட்டில் (பாலையாப் பிள்ளையின் மனைவியிடம்) கேட்டு வாங்கிக் குடிக்கும் 'நீத் தண்ணீர்'

(சோற்றுப் பானையில் உள்ள நீர்) கொஞ்சம் தெம்பு அளிக்கும். பொழுது சாயும்வரை அதையும் இதையும் செய்துவிட்டு, குடிசைக்குத் திரும்புவான். தண்ணீரால் மேல் கழுவிக் கொள்வான். மனைவி தயாரித்து வைத்திருக்கிற சாப்பாட்டை ('பக்கமேளங்கள்' ஆர்ப்பாட்டமாக இராத சோறும் கறியும்) தின்று தீர்ப்பான். திருப்தியாக வயிறு முட்டச் சாப்பிடுவதற்குக் கிடைத்திருந்தால், அன்று அக்குடும்பத்துக்கு அதிர்ஷ்டநாள்.

கடுமையாக, வெயிலிலும் மழையிலும், உடல் உழைப்பில் மும்முரமாக ஈடுபட்டிருப்பினும், தினசரி ஒருவேளை வயிறு நிறைந்த உணவுகூட உண்ணக்கிடைக்காமல், அதற்கு உரிய காரணத்தையும் புரிந்துகொள்ள இயலாமல், கடவுளையும் தங்கள் தலை எழுத்தையும் எண்ணிப் புலம்பிக்கொண்டும் திருப்திப்பட முயன்றவாறும் காலம் கழிக்கிற இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகள் சிவபுரத்திலும் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் முருகன்.

அன்று அவன் மகனுக்குப் பிறந்த நாள்.

அதைக் கொஞ்சம் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்.

மகனுக்குத் தலைவாரி முடித்து, பூ வைத்து, அழகுபடுத்தி, சோறும் சாம்பாரும் அவியலும் ஆக்கி, பாயசமும் தயாரித்து, சந்தோஷமாக உண்டு, சாமியைக் கும்பிடவேண்டும் என்று அவன் மனைவி விரும்பினாள்.

அதற்காக முதலாளியிடம் ஐந்து ரூபாய் கேட்டு வாங்க எண்ணினான். போனான்.

அப்போது அவர் அதிதிகளுடன் காலை உணவு உட்கொள்வதில் முனைந்திருந்தார்.

பிறகு போய், கைகளைத் தேய்த்தபடி நின்றான். 'என்ன முருகா?' என்றார் முதலாளி.

அவன் விஷயத்தைச் சொன்னான்.

அவர் பெரிதாகச் சிரித்தார். 'அடி சக்கை! முருகனுக்கும் அவன் பெண்டாட்டிக்கும் பாயசம் சாப்பிடணும்னு ஆசை வந்துட்டுதாக்கும். பேஷ்!' என்றார்.

அதில் ஏதோ அற்புத ஹாஸ்யத்தைக் கண்டுவிட்டவர்களாய், விருந்தாளிகளும் அமர்க்களமாய்ச் சிரித்தார்கள்.

'போடா பைத்தியாரா! இதுக்கெல்லாம் ஏண்டா வீணாச் செலவு பண்ணப்போறே? உனக்கு நல்லதுக்குத்தான் சொல்

றேன். இப்ப பாயசம், சர்க்கரைப் பொங்கல்னு பண்ணி, வாய்க்கு ருசியாத் தின்னுபோடுவீங்க. பொறகு இந்த ரூபாயை நான் சம்பளத்திலே புடிச்சுக்கிடுவேன். நீயும் உன் பெண்டாட்டியும் அப்புறம் செலவுக்குப் பணம் இல்லாம முழிப்பீங்க!' என்று கீதைக் கண்ணனின் தம்பி மாதிரி உபதேசம் வேறு புரிந்தார்.

'எப்படியும் போங்க!' என்று இரண்டு ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

அவன் முணுமுணுத்தபடி சென்ருன்.

'புத்திகெட்ட பயலுக. இவனுகளுக்கு நல்லதைச் சொன்ஞல் ஏறவே ஏருது' என்று திருவாய் மலர்ந்தார் பாலையாப்பிள்ளை.

திடீரென்று எதையோ எண்ணிக் கொண்டவராய், 'சிவகாமி... ஏ சிவகாமி!' என்று அழைத்தவாறே அடுப்பங் கரைப் பக்கம் போஞர்.

'இன்னிக்கி மத்தியானச் சாப்பாட்டுக்குப் பாயசம் போடுவியே, அதிலே பன்னீர்விட மறந்திராதே. பன்னீர் பாட்டில் அலமாரியிலே இருக்கு. பாயாசத்தோடு பலாச்சுளையும் பரிமாறணும். சுளைகளை எடுத்துவைக்கச் சொல்லியிருக்கேன்' என்ருர், பாலையாப் பிள்ளை

ஃ ஃ ஃ

'அப்பா...'

'என்னடா ?'

'பத்துப்பைசா கொடேன்'

'ஏனும் ?'

'ஸ்கூலுக்குப் போகையிலே பஸ்லே போயிடுறேன். சாயங்காலம் வரும்போது நடந்து வாறேன்,'

ஏன் துரைகளுக்கு இப்ப கால் நடக்கமாட்டேன்குதோ ?'

'ரெண்டு மைல் நடந்து போக வேண்டியிருக்கு. எட்டரை மணிக்கு வீட்டை விட்டு புறப்படுதேன். வெயில் வந்திருது. நடக்க நடக்க வேர்த்துக் கொட்டுது. ஸ்கூலுக்குப் போறதுக் குள்ளே...'

நடந்து போடா, கழுதை, நீ படிச்சுக் கிழிக்க லெட்சணத்துக்கு உனக்கு கார் சவாரி வேறே வேண்டிக்கிடக்குதாக்கும் ?

நல்லாப் படிச்சு, நல்ல மார்க் வாங்கினு, போகையிலும் வறையிலும் பஸ்ஸிலேயே பிரயாணம் பண்ணலாம். நீதான் அஞ்சும் பத்தும் கணக்கிலே ரெண்டுமின்னு மார்க்கு வாங்கி யிருக்கியே.. போப்போ !'

எட்டாவது வகுப்புப் படிக்கும் பெருமாள் பெருமூச்சு விட்டபடி போகிறுன்.

அவன் தந்தை சிவப்பிரகாசமும் பெருமூச்செறிந்தார். 'இல்லாத குறைதான். பத்துக் காசுதான் கேட்கான். அது கூட இல்லேயே, கடவுளே! மாசம் மூணு ரூபா. அவ்வளவு வராது, ஊடே ஊடே லீவுவருதே; ரெண்டரை, ரெண்டே முக்கால் ரூபா ஆகும். அதைச் செலவுபண்ண நம்ம பொருளா தாரம் இடம்தரலே. அம்மா லோகநாயகி, எனக்கு எப்ப தான் நல்லகாலம் வருமோ?'

ஃ ஃ ஃ

பள்ளிக்கூடம் கிளம்பிக் கொண்டிருந்த பத்தாம் வகுப்பு மாணவி சங்கரி, 'அம்மா, இருபது பைசா கொடேன்' என்று கொஞ்சலும் கெஞ்சலுமாகக் கேட்டாள்.

'ஏண்டி ?'

'பூ வாங்கி வச்சுக்கிடுவேன். எங்க கிளாஸ்லே படிக்கிற கர்ள்ஸ் எல்லாம் தினசரி பூ வச்சுக்கிட்டு வருதுக. நான் இன்னிக்கு ஒரு நாளாவது..'

'எடு வாரியலே! உன் மோறைக்கட்டைக்குப் பூ ஒண்ணு தான் குறைச்சல்! போடி போ வேலேயத்தவளே..! உன்னே ஸ்கூலுக்கு அனுப்பறதுனலே அநியாயச் செலவு ஆகுதுன்னு அப்பா சொல்லுதோ, அதுக்கு ஏத்தாப்ல நீயும் பூ வேணும், குடை வேணும், குதிங்கால் உசந்த செருப்பு வேணும், மண் ணங்கட்டி வேணும், தெருப்புழுதி வேணுமின்னு தொந்தரவு கொடுக்கிறே'

'போம்மா !'' என்று சிணுங்கிக் கொண்டு போகிறுள் சங் கரி. அவளேயே பார்த்தபடி இருக்கும் அம்மா பார்வதத்தின் உள்ளத்தில் இனம் புரியாத ஒரு சுமை அழுத்துகிறது. அதைக் கரைக்க முயல்பவள் போல் நெடியப் பெருமூச்சு உயிர்க்கிறுள்.

ஃ ஃ ஃ

'அக்கா, உன் சேலே ரொம்ப அழுக்காயிட்டுதே வண்ணத்தி வந்திருக்கா. வெளுக்கப் போட்டிரலாமா?'

‘ அதைப் போட்டுட்டு, நான் எதை உடுத்த?’

‘வேறே சேலை இல்லையா?’

‘ எங்கே இருக்கு?’

தங்கச்சி பெட்டியைத் துழாவுகிருள். கொடியைப் பார்க்கிருள். ‘ரெண்டு சீலைதான் நல்ல சீலை இருக்கு. அதைத்தான் மாத்தி மாத்திக் கட்டிக்கிடுதா அக்கா’ என்று முணுமுணுக்கிருள்.

‘ சீலை வாங்கணும். வீட்டுச் செலவுக்கே பணம் இல்லாத போது சீலை வாங்கதுக்குச் சொலையா எங்கே பணம் கிடைக்கி?’ என்று அலுத்துக்கொண்டாள் அக்காக்காரி.

இது கீழ் மத்தியதரக் குடும்பம் ஒன்றில் நிகழ்ந்த உரையாடல்.

ஃ ஃ ஃ

வேறொரு குடும்பத்தில்;

மகள் எங்கோ போய்விட்டு நேரம் கழித்து வீடு திரும்பிஞள். தாய் அவளை முறைத்துப் பார்த்தாள்.

‘ ஏட்டி, இருக்கிற ஒரே நல்ல சீலையை எடுத்துப் பெருமையாய்க் கட்டிக்கிட்டுப் போயிட்டியே, நான் ஓலைப்பாயைச் சுத்திக்கிட்டா அந்தப் பெரிய வீட்டுக்குப் போவேன்? நீ என்னதான் நெனச்சுக்கிட்டு இருக்கிறே உன் மனசிலே. நான் ஒரு முக்கிய காரியமாப் போகணும்னு சொன்னேனு இல்லையா? .. ஏண்டி குத்துக்கல்லு மாதிரி நிக்கிறே? அந்தச் சீலையை அவுத்துச் சீக்கிரமாக்குடு. நான் அவசரமாப் போகணும்.

‘ அரக்கப் பரக்கப் பாடுபட்டும் உடுத்துறதுக்கு நல்ல சீலை இல்லே. வாங்கவும் முடியலே’ என்று தானுகவே புலம்பிக் கொள்கிருள் தாய்.

ஃ ஃ ஃ

பெரிய வீட்டுப் பாக்கியம் பிள்ளையின் புத்திர பாக்கியமான சுகுமார் கண்ணுடி முன் அரை மணி நேரம் நின்று தலை முடியைப் படாதபாடுபடுத்தி, அலங்கோலமான ஒரு ஸ்டைல் அலங்காரம் செய்துகொண்டு, முகத்துக்குப் பவுடர் பூசி, அருமையான டெரிலின் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு தன் அழகில் தானே சொக்கியவனுய், பர்ஸைத் திறந்து பார்த்

தான். அதில் பத்து ரூபாயும் சில்லறையும் இருந்தது. 'இது போதும்' என்று முனகியபடி கிளம்பினான்,

படிப்பு வரலே என்று கல்வியை எட்டாவது வகுப்புடன் நிறுத்திவிட்ட அவனுக்கு, அவனுடைய அம்மா 'ஸப்போர்ட்!' 'என் பையன் படிச்சு என்ன வேலை பார்க்கப் போறான்? இல்லே, அவன் எதுக்குங்கேன் வேலை பார்க்கணும்? அவனே எத்தனையோ பேருக்கு வேலை கொடுப்பானே. அவன் முன்னாலே கைகட்டிச் சேவகம் பண்ண நான் நீயின்னு ஆளுக அலைவாங்க. அப்படி இருக்கையிலே அவன் யார் கிட்டேயும் போயி அடங்கி ஒடுங்கி வேலை செய்ய வேண்டிய தேவையே கிடையாது' என்று சொல்லி விட்டாள் அந்த அருமை அம்மா.

பையன் ஜாலியாய் செலவு பண்ணிக் கொண்டு வீணாய் வளர்கிறான்.

'எங்கே ராசா கிளம்பிட்டே?' என்று கேட்டாள் தாய்.

'இங்கே உக்காந்து உக்காந்து போரடிக்குது. சும்மா இப்படி டவுன்வரை போயிட்டு வாறேன்...'

'ராத்திரிக்குள்ள வந்திருவேயில்லா?'

'ஆமா ஆமா.'

'போதுமானபடி ரூபா எடுத்துக் கிட்டுப் போறியா ஐயா?'

'இருக்கு இருக்கு!'

'எதுக்கும் கையிலே இருந்தால் நல்லது. இந்தா அஞ்சு ரூபா வச்சுக்கோ. மிச்சம் இருந்தால் கொண்டாந்திரலாம். அயலூரிலே போயி, செலவுக்குப் பணம் பத்தலேன்னு சொன்னா முழிச்சுக்கிட்டா நிப்பே? இந்தா' என்று ஐந்து ரூபாய் கொடுத்து அனுப்புகிறாள்.

சுகுமார் உற்சாகமாய்ச் சீட்டி அடித்தவாறே வெளியே போனான்.

ஃ ஃ ஃ

இசக்கியா பிள்ளை மகன் பிச்சையாவுக்கு வேலை கிடைத்து விடும்போலிருந்தது.

ஆனால், வேலை வாங்கித் தருகிறவர் கையில் இருநூறு ரூபாய் கொடுக்கவேண்டும், அந்தப் பணம் இருந்தால் வேலையும் நிச்சயம் என்ற நம்பிக்கையோடு அவர் ரூபாய்க்காக ஓடி ஆடிக்கொண்டிருந்தார். பணம் புரளவில்லை. பண்ணையார் ஆறுமுகம் பிள்ளையிடம் கேட்டுப் பார்க்கலாமே என்று போனார்.

ஆறுமுகம் பிள்ளை காபி சாப்பிட்டுவிட்டு, ஈஸிச்சேரில் சாய்ந்தபடி ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தார். ஏதோ பக்திப் பாட்டு.

இசக்கியா பிள்ளை வந்ததும் தலையை ஆட்டி வரவேற்றார். பாட்டு முடிந்ததும், 'என்ன? என்ன விசேஷம்?' என்றார்.

அவர் விஷயத்தைச் சொன்னார். 'இருநூறு ரூபா கொடுங்க. மாசா மாசம் கொஞ்சம் கொஞ்சமாத் தந்துடுவேன். இல்லேன்னா, அறுப்பு அறுத்ததும் நெல்லாக் கொண்டுவந்து தாரேன்' என்றார்.

ஆறுமுகம் பிள்ளை வேலையைப் பற்றி, சம்பளம், எந்த ஆபீஸ், யார் சிபாரிசு என்பது பற்றி எல்லாம் விசாரித்தார். 'அந்த ஆளிடமே மாசம் தோறும் இவ்வளவு தர்றேன்னு பேசிக் காரியத்தை முடிக்கதுதாலே!' என்றார்.

ரொக்கமா இருநூறும், முந்நூறும் தர ஆளுக தயாரா இருக்காங்க. நான் கொடுக்கலேன்னு சொன்னா, அந்த வேலை இன்னொருத்தனுக்குக் கிடைச்சிரும். நீங்க உதவி செய்தா, ஒரு வீட்டிலே விளக்கேத்தி வச்ச புண்ணியம் உண்டு ..' என்று கெஞ்சினார் இ.பி.

'புண்ணியம் இருக்கட்டும் வேய். முதல்லே பணம்லா வேணும்! என் கிட்டே இப்போ ஏது ரூபாய்? வயலுகளுக்கே ஏகப்பட்ட செலவு ஆயிட்டுது. கிஸ்தி வேறே. குடும்பச் செலவுக்கே எவ்வளவு ரூபா ஆகுதுங்கேரு ..' இந்த ரீதியில் இழுத்து 'இல்லைப் பாட்டு' பாடினார் பண்ணையார்.

இ.பி. எவ்வளவு கெஞ்சியும் உறுதி கூறியும் அவர் மனம் இளகவில்லை. இத்தனைக்கும் இருவரும் நெருங்கிய உறவினர்தான். இ.பி. அழாத குறையாய் புலம்பிக் கொண்டே வெளியேறினார்.

'சவத்துப் பய, சாகமாட்டாம அலையிதான். ரேடியோ விலே நல்ல பக்திப் பாட்டு. கேட்கவிடாமக் கெடுத்துப்போட் டான்!' என்று முணமுணத்தபடி ஆறுமுகம் பிள்ளை நிறுத்தி வைத்திருந்த ரேடியோவை மீண்டும் அலறும்படி செய்தார்.

இசையில் மயங்கி, கண்களை மூடியவாறே சொக்கியிருந்த பிள்ளை திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார நேர்ந்தது, ரேடியோ ஒலிப்பது சட்டென்று தடைப்பட்டதால்.

'சும்மா சும்மா ரேடியோவை வைத்ததும் நிறுத்ததும், திரும்ப வைக்கிறதும்தான் வேலையாப் போச்சு! இந்த அழு குணிப்பாட்டுகளைக் கேட்காமல் இருந்தால்தான் என்னவாம்' என்று மருமகள் பவானி முணுமுணுத்தபடி போய்க்கொண் டிருந்தாள். அவள்தான் பாட்டைப் பாதியிலே நிறுத்தியது.

அவளுக்கும் மாமனாருக்கும் எப்பவுமே மனபேதம்தான். பெரிய இடத்திலிருந்து இந்த வீட்டுக்கு வந்த திருமகள் அவள். ராங்கிக்காரி. விலை உயர்ந்த ரேடியோவும் அவள் கொண்டுவந்த சீதனத்தில் ஒன்று. அதனால்தான் அவள்

இந்தப் போக்குப் போருள் என்று பிள்ளையின் மனம் உறுமியது வெறிகொண்டது.

'ஓகோ! நான் என்றால் இவ்வளவு அலட்சியமா?' என்று கறுவியது அவர் உள்ளம்.

'இனிமேல் எனக்கு இந்த ரேடியோ வேண்டாம். நான் எனக்கென்று தனி ரேடியோ வாங்கிக் கொள்வேன். இப்பவே போறேன்' என்று வெகுண்டு எழுந்தார். தாட்பூட் எனக் கத்தினார். அதையும் இதையும் இழுத்துப்போட்டார். அறைக்குள் போய், ஒழுக்கறைப் பெட்டியைத் திறந்து நோட்டுக் கட்டுகளை எடுத்தார். இந்த ரேடியோ அறுநூறோ, அறுநூற்றைம்பதோ விலை சொன்னாங்க; இதே மாதிரித்தான் வாங்கணும் என்று எண்ணியபடி எழுநூறு ரூபாய் எண்ணி எடுத்துக் கொண்டு, மீதியை வைத்துப் பூட்டினார். 'நான் ரேடியோ வாங்கப் போறேன்'' என்று சவாலிடுவதுபோல் கூவிவிட்டு, 'ஏ, மூக்கா, வண்டியைப் போடு. டவுனுக்குப் போகணும்' என்று உத்திரவிட்டார்.

சதங்கைகள் ஜல்ஜல் என ஒலிக்க, மயிலைக் காளைகள் பூட்டிய வண்டியில் பெருமையோடு பயணம்போன ஆறுமுகம் பிள்ளை, அடக்க முடியாத சந்தோஷத்தோடும் மினுமினுக்கும் புதிய ரேடியோவுடனும் வந்து சேர்ந்தார்—ஐந்து மணி நேரத்துக்குப் பிறகு, வீட்டில் இருந்ததே போன்ற விலை உயர்ந்த ரேடியோ, அறுநூற்றைம்பது ரூபாய் மதிப்புள்ளதுதான்.

'பழசைத் தூக்கி அடுப்படியிலே வையி. அல்லது உன் அறைக்குள்ள கொண்டு வச்சுக்க போ. இங்கே அது இருக்கப் படாது' என்று மருமகளுக்குக் கண்டிப்பாக உத்திரவு போட்டு விட்டுப் புதிய ரேடியோவை எடுப்பான இடத்தில் வைத்தார் பண்ணையார்.

சிறிது நேரத்தில் புதிய ரேடியோ ஒலிசெய்தது. கால் மேலே கால் போட்டபடி ஈஸிச்சேரில் ஜம்மென்று சாய்ந்துகொண்டு ரேடியோவைக் கேட்டு ஆனந்த அனுபவம் பெறுவதில் ஈடுபட்டார் ஆறுமுகம் பிள்ளை.

ஃ ஃ ஃ

அந்த ஊரில் மையமான ஒரு இடத்தில் விஸ்தாரமான நிலப் பரப்பில் பெரும் சுவர் வளைந்து கல் கட்டிடம் கட்டிக்கொண்டு கம்மென்று வீற்றிருக்கும் கோபுர வீட்டுக்காரர் ஸ்ரீபூமிநாதர் (அலயஸ் சிவபெருமான்) பத்னி லோகநாயகி (அலயஸ் பார்வதிதேவி) திருமுன்னர் சில தினங்களாகக் கோடி அர்ச்சனை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் அர்ச்சகர்கள் வந்து குழுமியிருந்தனர். கூலிக்கு அர்ச்சனை செய்துகொண்டி

ருந்தார்கள். ஒருவர் இரண்டாயிரம் அர்ச்சனை சொன்னால், அதே சமயம் கூடவே பத்துப்பேர் கோரஸ் ஒலிப்பார்கள். ஆகவே, இருபதாயிரம் தடவை அர்ச்சிக்கப்பட்டதாகக் கணக்கிடுவார்கள். அத்துடன் முதலில் ஒப்புவிப்பவனின் இரண்டாயிரத்தையும் கூட்டிக் கொள்ளவேண்டும். சில நாட்களில் அதிகப்படியான நபர்கள் அர்ச்சனை கோஷத்தில் கலந்து கொண்டார்கள். எல்லாம் கணக்கு வைத்து ஒழுங்காகக் கூட்டப்பட்டு வந்தது.

தினந்தோறும் காலை 6 முதல் 12 வரையிலும், மாலை 6 மணிக்கு ஆரம்பித்து இரவு 12 அல்லது 1 மணி மட்டிலும், இயந்திர ரீதியாக இந்த அர்ச்சனை கோஷிக்கப்பட்டது. அது ஒலி பெருக்கிமூலம் சிவபுரம் நெடுகிலும் ஒலிக்கும்படி வசதி செய்யப்பட்டிருந்தது.

தினசரி அம்பிகைக்கு அலங்காரம் தடபுடலாக இருந்தது. முக ஒப்பனையும் நகைபுஷ்ப அலங்காரமும், நாளுக்கு ஒரு நிறத்தில் அருமையான பட்டும் கட்டி, பூக்களால் நன்கு சோடிக்கப்பட்ட சூழ்நிலையில், குளுகுளு விளக்கொளியில் அவள் புதுப் பெண் போல் காட்சி அளித்து நின்றாள்.

ஏகப்பட்ட செலவுதான். சிவபுரம் வாசிகளிடமும், அக்கம் பக்கத்து ஊர்களிலும், டவுண் பிரமுகர்களிடமும் கோடி அர்ச்சனைக் குழுவினர் நிதி வசூல் செய்திருந்தார்கள். அர்ச்சனைக்குப் பத்து ரூபாய் என்று ரேட் குறிப்பிடப்பட்டிருந்தது. புரோக்கர்கள் மூலம் புண்ணியம் தேடிவிட முடியும் என்ற நம்பிக்கை உடைய பக்தர்கள் பணம்செலுத்தி, அர்ச்சனையில் தங்கள் பெயரும் ஒலிக்கும்படி செய்து தேவியின் திருவருள் பெற்று விட்டதாக அகம் மகிழ்ந்தார்கள். பெரிய வீட்டுக்காரர்கள் சிலர் தன் பெயரில், மனைவி மக்கள் பெயரில் எல்லாம் அர்ச்சனை சொல்ல வேண்டும் என்று இருபதும் முப்பதும் ஐம்பதும் கட்டிச் சீட்டுப் பெற்றுக் கொண்டார்கள்.

வறட்டுத் தவளைகளின் ஓயாத கூச்சல் போல் இடையறாது ஒலித்துக் கொண்டிருந்த அர்ச்சனை கோஷிப்பில், முறைப்படி அவர்களுக்காகவும் அர்ச்சிக்கப்பட்டது.

அன்றுதான் இறுதிநாள். மற்ற நாட்களைவிடச் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் எல்லோருக்குமே அக்கறை.

பாலையாப்பிள்ளை டவுனுக்கு ஆள் அனுப்பி நூறு ரூபாய்க்கு புஷ்ப வகைகள் வாங்கிவரச் செய்திருந்தார். இன்னொரு பிரமுகர் அம்மனுக்கு அழகாகவும் எடுப்பாகவும் இருக்கும் என்று ஆகாய நீல வர்ணத்தில், எழுபத்தைந்து ரூபாய் விலையில் ஒரு பட்டு எடுத்திருந்தார். இப்படி ஒவ்வொருவரும்

பக்திப் பணிவிடையில் தங்கள் பண்ப்பெருமையை விளம்பரப் படுத்துவதில் ஆர்வம் காட்டினார்கள்.

கருவறை மலர்களால் வசீகரமாக அழகுபடுத்தப்பட்டிருந்தது. அம்பாளைச் சுற்றி மலர்ப்பின்னணி அற்புதமாக இருந்தது. தேவியே பதினெட்டுப் வயசுப் பெண் மாதிரி, புதுப்பட்டிலும் சிரத்தையான முக ஒப்பனையிலும் சிங்காரிப்புகளிலும், வாய் திறந்து பேசிவிடுவாளோ என்று எண்ணச் செய்யும்படியான துடிப்போடு நின்று கொண்டிருந்தாள். இனிய வாசனைகளும் மலர் அலங்காரங்களும் குளுமையான ஒலியும் நிறைந்த அச்சூழ்நிலையில் அவளுடைய சிங்காரத் தோற்றம் பண வசதிமிக்க சீமான் வீட்டுத் திருமணத்தின் முதல் இரவு அறையை நினைவுக்கு இழுப்பதாய் இலங்கியது.
அன்று கூட்டமும் மிக அதிகம்,

'ஆகா ஆகா!' என்று வியந்து, கன்னத்தில் போட்டுக் கொண்டு, கை கூப்பாத பக்திமான்கள் இல்லை என்றே சொல்லலாம்.

சாதாரண நாட்களில்—அதாவது, வருஷத்தில் பெரும் பகுதி—அழுது வழியும் அந்தச் சன்னதி அன்று திருவிழாக் கோலம் ஏற்று ஜே ஜே என்றிருந்தது.

பர்வதத்தின் மகள் மாணவி சங்கிரி 'ஏயம்மா! அம்மனுக்கு எவ்வளவு பூ பாரேன்! ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, எல்லாப் பூவும் நிறைய நிறையக் குமிஞ்சு கிடக்குதே!' என்று பொறுமைக் குரலில் வியப்பு உதிர்த்தாள்.

இறுதிக் கட்ட அர்ச்சனை வறட்டுக் குரல்களில் ஒலித்துக் கொண்டிருந்தது.

'இது முடிந்ததும், தீபாராதனை, அப்புறம் புஷ்பாஞ்சலி நடைபெறும். எல்லாம் முடிவதற்கு ராத்திரி மூணு மூன்றரை மணி ஆகிவிடும்' என்று தர்மகர்த்தா மகிழ்வோடும் பெருமையோடும் பக்தர் ஒருவரிடம் தெரிவித்தார்.

அவ்வளவு நேரம் ஆகுமா? அதுவரை ஆட்கள் எல்லாம் காத்திருப்பார்களா?' என்றார் பக்தர்.

'அம்பாள் அருள் வேணும்னு விரும்புகிறவங்க காத்திருக்கத் தான் வேண்டும். தினமுமா கண் முழிக்கப் போறாங்க. என்னைக்கோ ஒருநாள்தானே!' என்று அறிவித்தார் முதல்வர்.

(தாமரை—1972)

# குலப் பெருமை

பர்வதத்தாச்சிக்குப் பெருமையாவது பெருமை! தன் வீட்டைப் பற்றி, குடும்பத்தைப்பற்றி, தான் பிறந்த ஊரைப்பற்றி, வாழ வந்த இடத்தைப் பற்றி எல்லாம்.

செயலான குடும்பத்திலே பிறந்து 'செயம் செயம்' என்று போட்டு அடிச்சவோ' குடும்பத்திலே புகுந்தவள் அவள். பெரிய வீட்டு ஐயா இரண்டு கையாலும் அள்ளிக் கொண்டு வந்தார். வீட்டை மேலும் பெரியதாகக் கட்டினார். நிலம் நீச்சு, சொத்து சுகம் எல்லாம் ராஜவாழ்வு தான். பின்னே பெருமை இருக்காதா குடும்பத் தலைவிக்கு?

'தாலி அறுத்தால் தாசில் உத்தியோகம் வந்தது மாதிரி' என்று ஆச்சி பிறந்துவளர்ந்த வட்டாரத்தில் சொல்வது உண்டு. இதையும் அவளேதான் பெருமையாகச் சொல்லிக் கொள்வாள்.

பெண்களுக்கு இப்போது மாதிரி சுதந்திரம் இல்லாத காலம் அது. மந்திரி பதவி, எம். எல். ஏ., எம்.பி. போன்ற விஷயங்கள் எல்லாம் தலை தூக்கியிராத காலமும்கூட. அந்த வட்டாரத்துப் பிள்ளைகளுக்குத் தாசில் உத்தியோகம்தான் ரொம்பப் பெரிதாக— அதிகார வசதிகளும் வாய்ப்புகளும் அதிகம் உடையதாகத் தோன்றியதில் வியப்பே கிடையாது.

பர்வதத்தாச்சியும் அப்படிப்பட்ட அந்தஸ்தான நிலையில் இருந்தாள். அவள் பெயரில் சொத்தும் கையில் ரொக்கமும் மிகுதியாக இருந்ததினாலே, அவளை அண்டி வாழ்ந்தவர்கள் அவளை ஒரு ஜமீந்தாரிணியாகவும், ராணி போலவும் மதித்து வந்தார்கள், அவ்வப்போது பண உதவி பெறுவதற்காகவும் அவள் தயவைப் பெற்று, அவளுக்குப் பிறகு அவளுடைய சொத்தில் கணிசமான பங்குகளை அடைவதற்காகவும், அந்தப் பெரியம்மாளை அப்படி மதிப்பதாக அவர்கள் நடிக்கவாவது செய்தார்கள்.

ஆகவே, ஆச்சிக்கு அவள் குடும்பத்தினர் மீதும், குடும்ப கௌரவத்தின் மேலும் அதிகமான பெருமை உண்டு. எப்படிப்

பட்ட குடும்பம் ! பெரியவங்க சீமான்க பிறந்து வளர்ந்த குலம். இப்போதையிலே கொஞ்சம் காசு வந்ததும் தலைகால் தெரியாமல் அலையுதுகளே சில காவோலைகள், அதுமாதிரி இந்த வீட்டிலே வருமா ? நல்லவங்க பெரியவங்க வழியிலே வந்த பேரன் பேத்திகள் இல்லையா !' என்று அவள் அடிக்கடி சொல்லி மகிழ்வாள்.

அந்தப் பெரிய வீட்டுப் பேரன் பேத்திமார்கள், ஆச்சியின் பார்வையில் படாமலும், அவள் காதுகளுக்குச் செய்தி எட்டாத விதத்திலும் தங்களுடைய திருவிளையாடல்களை நடத்திக் கொண்டுதான் இருந்தார்கள். தனது சுயப்புரலோலத்தில் ஆழ்ந்து கிடந்த பர்வதத்தாச்சியின் அறிவும் அனுபவமும் மிகவும் குறுகலானதுதான்.

எனவேதான் அவளது அன்புக்கும் பிரியத்துக்கும் உரிய மகன் குட்டி அய்யா செய்த ஒரு காரியம் அவளுக்கு அதிர்ச்சி அதிகம் கொடுத்தது.

குட்டியாபிள்ளை உல்லாசப் பேர்வழி. வெளியிலே ஜாலி வாழ்வு வாழ்ந்தவருக்கு, மனைவி இறந்துவிட்டது வசதியாகவே இருந்தது. மறு கல்யாண யோசனையை அவர் தட்டிக் கழித்துவிட்டார். சில வருஷங்களுக்குப் பிறகு, தனக்கென்று வீட்டோடு ஒருத்தி இருந்தால் அதன் சுகமே தனிதான் என்ற மன அரிப்பு அவரைத் துணிச்சலான ஒரு காரியம் செய்யத் தூண்டியது. அதன் விளைவுதான் குமாரி ரஞ்சிதத்தின் பிரவேசம்.

ஏதோ ஒரு நாடகத்தில் அவளை அவர் பார்த்தார். மோகம் கொண்டார். பணம் பேசுகையில் எதுதான் சாத்தியமில்லை? சிறு நடிகை ரஞ்சிதம் குட்டியாபிள்ளையின் ஆசைநாயகி ஆகி விட்டாள் அவளைத்தான் அவர் வீட்டுக்கு அழைத்துவந்தார். 'அம்மா, இதோ உன் புதுமருமகள்' என்று வேறு அறிமுகம் செய்துவைத்தார்.

வந்து நின்றவளின் 'மூஞ்சியையும் மோறையையும், ஆடை அலங்காரத்தையும் சிங்காரிப்பையும்' கவனித்த ஆச்சிக்குப் பற்றிக்கொண்டு வந்தது. 'எடு வாரியலை!' என்று சீறக்கூடியவள்தான் அவள், என்றாலும் தன் அருமை மகன் மனசு புண்படுமே என்று தன்னை அடக்கிக் கொண்டாள்.

'எனக்கு மருமகள் வேணுமின்னு நான் ஒண்ணும் அழுதுக்கிட்டு இருக்கலே. உனக்குப் பெண்டாட்டி வேண்டியிருக்கு. அதுக்காக எங்கனெயோ கிடந்த எச்சிக்கலை முடியைப் புடிச்சு இழுத்தாந்திருக்கே. எக்கேடும் கெட்டுப்போ. ஆனா அந்தச் சின்னச் சவம் என் மூஞ்சியிலே முழிக்கப்படாது இனி மேலே!' என்று ஆச்சி கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

அவளது கண்டிப்பையும் கார்வாரையும் குட்டியாபிள்ளை என்றுமே பெரிதாக மதிப்பது கிடையாது. இப்போமட்டும் அஞ்சி ஒடுங்கிக் கிடந்து விடுவாரா என்ன?

அந்தப் பெரிய வீட்டில் 'பங்களா' என்று அழைக்கப்பட்ட சிறு பகுதி ஒன்று தனியாக இருந்தது. அதைத் தனது சொர்க்கமாகவும் ரஞ்சிதத்தின் ஜாகையாகவும் மாற்றிவிட்டார் அவர். குடும்பத்தினர், உறவினர், ஊரார் வகையராவின் அபிப்பிராயம் பற்றி அவர் கவலைப்படுவதே கிடையாது

என்றாலும் அவர்கள் அவர் விஷயத்தில் அதிக அக்கறை காட்டினார்கள். குமாரி ரஞ்சிதம் அவருடைய 'லைஃப்' ஆகக் குடிவந்த பிறகு அவர்களுடைய கவலையும் கவனமும் அதிகரித்தது.

'பணக்கொழுப்பய்யா! பயல் நாடகக்காரியை வீட்டோடு கொண்டு வந்து வைத்துக்கொண்டானே!' என்று பேசினார்கள். கடுமையான கண்டனச் சொற்களை உபயோகித்தார்கள். அந்தப் பெண்ணைப் பச்சை பச்சையாகத் திட்டினார்கள்.

அவருடைய மாமா பாண்டியன் பிள்ளை, அண்ணாச்சி தர்மராஜ பிள்ளை, சித்தப்பா ராமையாப்பிள்ளை, அவர் மகன் ராஜா முதலியவர்கள் எதிர்ப்பு அணியில் முதன்மையாக இருந்தார்கள். குட்டியாபிள்ளையின் தம்பி செல்லையா கூட அவரை ஏசிக்கொண்டு திரிந்தான்.

'அம்பது வயசு ஆகுது. இவருக்கு இது ஒண்ணுதான் குறைச்சல்! எவளோ ஒரு தேவடியாளை மதினியாக வீட்டுக்கு இட்டாந்திருக்காரே!' என்ற தன்மையில் அவன் பேச்சு இருந்தது.

வீட்டுக்கு வந்தவளுக்கு அந்த இடம் சுகசௌகரிய பவனமாக அமைந்துவிடவில்லை. பெரிய ஆச்சி அவளைக் குப்பையிலும் கேவலமாகக் கருதுகிறாள்; மற்ற பெரியவர்களும் அவளை மதிக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்ட வேலைக்காரர்கள்— சிறு பிள்ளைகள்கூட— ரஞ்சிதத்தை அலட்சியப் படுத்தினார்கள். தங்களுக்குள் அவளைப்பற்றி மோசமாகப் பேசினார்கள். யாரும் 'அந்த அம்மா' என்றுகூட அவளைக் குறிப்பிடுவதில்லை. கூத்தாடிச்சு, அந்தச் சிறுக்கி, பகட்டி தேவடியா, மினுக்கி என்றே குறிப்பிட்டார்கள். அவள் ஏதாவது வேலை சொன்னால், அவர்கள் செய்யாமலே ஒதுங்கிப் போனார்கள். எதிர்த்துப் பேசினார்கள், 'ஐயாவிடம் சொல்வேன்' என்று அவள் கூறினால், முணுமுணுத்துக் கொண்டே அரையும் குறையுமாகச் செய்தார்கள். அவள் ஏதேனும் வாங்கிவரச் சொன்னால், மிகவும் தாமதப்படுத்தினார்கள். விலையை அதிகமாகச் சொல்லி, காசுகளைச் 'சுங்கம்

வைத்தார்கள்'. மூட்டைப் பூச்சிகளையும் கொசுக்களையும்போல சிறுசிறு தொல்லைகளும் உபத்திரவங்களும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

இதை எல்லாம் அவள் பொறுமையோடு சகித்து வந்தாள். ஐயாவிடம் சொன்னால், அவர் சிரித்துக்கொண்டே, 'எல்லாம் சரியாயிடும், ரஞ்சு. நீ பாரேன், நீ அவங்ககிட்டே எரிஞ்சு விழாதே. அதட்டாதே, சிரிச்சுப் பேசு. அப்பப்போ தாராளமாச் சில்லறைகள் கொடு. தாங்களாகவே, உன்னைவிட்டால் கிடையாதுன்னு புகழ்ந்து பேசி, உன்னைச் சுத்திவருவாங்க' என்று சொல்லி வந்தார்.

அப்படிச் செய்வது தவிர அவளுக்கும் வேறே வழி இல்லை. புது வாழ்வுக்கு ஆசைப்பட்டு வந்தாச்சு. பழைய கூத்தாடிப் பிழைப்பையும், அந்தச் சூழ்நிலையையும்விட இது எவ்வளவோ மேல்தான். குட்டியா பிள்ளை அவளை 'ராசாத்தி கணக்கா' நடத்தினர். ஆடை அணிகளும், தீனி வகைகளும், அலங்காரப் பொருள்களும் ஏகமாக வாங்கிக் கொண்டுவந்து அவளுக்கு அர்ப்பணித்தார். 'அவளைத் தலையிலே தூக்கிவைத்துக்கொண்டு ஆடாத குறைதான். மனிசன் இப்படியா மோகம் பிடிச்சுத் திரிவான்!' என்று அவரைச் சேர்ந்தவர்கள் பரிகசிக்கும் அளவுக்கு இருந்தன அவரது போக்குகள்.

'நம்ப குலப்பெருமை எப்படி, நம்ம குடும்ப கௌரவம் என்ன? அதை எல்லாம் நெனச்சுப் பார்க்கவேண்டாம்?' என்று மாமாவும் அண்ணச்சியும் தம்பியும் அவ்வப்போது சொல் உதிர்த்துக் கொண்டார்கள்.

ஒருநாள் பிற்பகல், பெரிய வீட்டில் எல்லோரும் 'உண்ட மயக்கத்தில்' கிறங்கிக் கிடந்தபோது, மாமா பாண்டியன் பிள்ளை பங்களா பக்கம் தலைகாட்டினர். குட்டியாபிள்ளை வீட்டில் இல்லை என்று தெரிந்து கொண்டேதான் அவர் அங்கு வந்தார். அவள் எப்படி இருக்கிரு, பக்கத்திலே போய்ப் பார்க்கலாமே என்றொரு நப்பாசை. என்ன இருந்தாலும் நாடகக்காரிதானே என்று நினைப்பு. கனைத்துக்கொண்டு உள்ளே புகுந்தார்.

ரஞ்சிதத்தின் அழகும், வசீகரத் தோற்றமும் அவரைக் கிறுகிறுக்க வைத்தன. 'என்ன, ஐயாப்பிள்ளை இல்லையா?' என்று கூறி, அவசியம் இல்லாமல் சிரித்தார். 'நான் அவன் மாமா' என்று தன்னையே அறிமுகப்படுத்திக்கொண்டு, அப்படியும் இப்படியும் பார்த்தார். அவள் மிரண்டுபோய் நின்ருள். பெரியவர் என்ன சொல்வாரோ, எங்கே வந்தாரோ, ஏதோ என்ற பயம்.

அவர் சிரித்தார். 'ஏன் புள்ளெ பயப்படுதே? நான் என்ன புலியா, கடுவாயா? உன்னைக் கடிச்சா முழுங்கிடுவேன்? என்ருர்

அவள் அருகே நெருங்கி, புடிச்சாலும் புடிச்சான் பய மணி யான சரக்காத்தான் புடிச்சுக்கிட்டு வந்திருக்கான்! நீ இவ் வளவு அழகா இருப்பேன்னு நான் நினைக்கவே இல்லியே!' என்று சொல்லி அவள் கன்னத்தை ஆசையாய்த் தடவினார். 'உன் பேரென்ன? எத்தனை நேரம் இப்படி நிப்பே? சும்மா வா கட்டிலுக்கு' என்று அவள் கைகளைப் பிடித்து இழுத்தார்.

அவர் நோக்கமும், அவர் அங்கே வந்திருப்பதன் பொருளும் ரஞ்சிதத்துக்கு விளங்கிவிட்டன. ''சீ போ, கையைவிடு கிழக்குரங்கு உனக்கு இந்த ஆசையா!' என்று வெடு வெடுப் பாகக் கூறி, கைகளை விடுவித்துக் கொண்டு, பக்கத்து அறைக் குள் ஓடிக் கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டாள்.

பாண்டியன் பிள்ளை முகம் சிறுத்துவிட்டது. அவமானப் படுத்தப்பட்டதனால் ஆத்திரம் வந்தது. 'ஓகோ, தேவடியாச் சிறுக்கிக்கு இத்தனை திமிரா? இருக்கட்டும் சொல்றேன்' என்று கறுவியவாறே வெளியேறினார்.

அவர் போய் வெகுநேரம் ஆனபிறகே அறையைவிட்டு வெளியே வந்தாள் ரஞ்சிதம். பங்களாக் கதவை அடைத்துக் கொண்டு, நடுங்கியபடி இருந்தாள். குட்டியாபிள்ளை வந்ததும், விஷயத்தைச் சொன்னாள். அவரோ வெறுமனே தலையாட்டிவிட்டுச் சிரித்தார்.

இன்னொருநாள் சாயங்கால நேரம். அண்ணாச்சி தர்மராஜபிள்ளை பூனை மாதிரி வந்தார். ரஞ்சிதம் பெரிய கண்ணாடி முன் அமர்ந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். மறைந்து நின்று அவள் அழகை ரசித்த பிள்ளை, நைசாகச் சென்று அவள் கண்களைப் பொத்தினார். அவள் திடுக்கிட்டுப் பதறி எழ முயலவும், அவளை அமுக்கி உட்காரச் செய்து 'ஏன் இப்படிப் பயப் படுதே, குட்டி! சும்மா இரு' என்று கொஞ்சலாகப் பேசி, அவள் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டுபோனார். என் னைப்பத்தி உனக்குத் தெரிஞ்சிருக்காது. எனக்கு இஷ்டமா நடந்துக்கோ. உனக்கு வைரமும் வைடூரியமுமாக கொண்டு வந்து குமிக்கிறேன். என் பேரே தர்மராஜபிள்ளை. அள்ளிக் கொடுக்கிற வள்ளலாக்கும்' என்று பேசி, அவளை முத்தமிட முயன்றார்.

அவள் திமிறிக்கொண்டு எழுந்தாள். அவர் அவளைக் கட்டிப்பிடிக்க முனைகையில், 'சீ காண்டா மிருகம்!' என்று காறித் துப்பினாள். போராடி விடுதலைப் பெற்று விலகி ஓடினாள்.

அண்ணாச்சி எமதர்மராஜர் ஆனார். 'ஓகோ!' என்று உறுமிக் கொண்டே வெளியேறினார்.

இந்த விஷயத்தை ரஞ்சிதம் மூலம் கேள்விப்பட்டதும் குட்டியாபிள்ளை கோபிக்கவுமில்லை; கூத்தாடவும் இல்லை, 'எல்லாப் பிடாரிகளும் ஒரே மண்ணினுல் ஆனதுதான். இருந்து இருந்து பாரு இடி விழுவான் காரியத்தை என் பாக. இன்னும் எனக்கு என்ன நடக்கு பார்ப்போம். எதுக்கும், எந்நேரமும், நீ ஜாக்கிரதையா இருக்கணும்.'

ஒருநாள் முற்பகல் பத்தரை பதினுெரு மணி இருக்கும். ரஞ்சிதம் குளித்துவிட்டு ஆடை மாற்றிக்கொண்டு நெற்றிக்குப் பொட்டிட்டவாறு நின்ருள்; 'இப்பதான் குளிப்பு முடிஞ்சு தாக்கும்?' என்ற குரல் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினுள்.

வெற்றிலைக் காவி ஏறிய பல்லைக் காட்டிக்கொண்டு, சித்தப்பா ராமையாப்பிள்ளை அங்கே காட்சி அளித்தார். 'உன் ளைப்பார்க்க வரனுமின்னு ரொம்ப நாளா எண்ணம். அது இன்னிக்குத்தான் ஈடேறுச்சு. என்ன எப்படி இருக்கே. வசதி எல்லாம் எப்படி இருக்கு?' என்று வளவளத் தார். பேசிக்கொண்டே இருக்கும் டைப் அவர். 'என்ன, வீடு தேடிவந்த ஆளை வாங்கன்னு கூடக் கேட்கமாட்டியாக்கும்? அப்புறம் எங்கே காப்பி கொடுத்து உபசரிக்கப்போறே!' என்று பல்லைக் காட்டினுர். 'நீ இவ்வளவு அழகா இருப்பேன்னு நான் நெனைக்கவே இல்லை. நீ சூரியன் குஞ்சாக அல்லவா டாலடிக்கிறே!' என்ருர். 'உன் பேரு ரஞ்சிதம்னு கேள்விப் பட்டேன். மனுேரஞ்சிதம்தான். நீ என்ன பேசாமடந்தையா?' என்ருர். அவளை நெருங்கினுர்.

'அதெல்லாம் இங்கே வேண்டாம். வந்த வழியே திரும்பிப் போங்க. இல்லையோ, கத்திக் கூப்பாடு போர்டுவேன்' என்று படபடத்தாள் ரஞ்சிதம்.

'பெரிய பத்தினி இவ. ஹே!' என்று கனைத்தார் பிள்ளை. 'சரி இன்னைக்கு ராணிக்கு மூட் சரி இல்லை. இன்னெரு நாள் வாறேன் என்று கூறி வாபஸ் ஆனுர்.

இன்னெரு சமயம் தம்பி செல்லையா வந்துசேர்ந்தான். அவன் ஷோக் பேர்வழி, வாசனையும் மினுமினுப்புமாக வந்தான். அந்தி நேரம். அவள் கட்டிலில் சரிந்து கிடந்தாள். அவன் அவள் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்துவிட்டான். அவள்மீது கைபோடுவதற்குள் ரஞ்சிதம் துள்ளி எழுந்து விட்டாள். 'அந்தக் கிழட்டுப் பயகிட்டே நீ என்ன சுகத்தைக் காணமுடியும்? என்கூட வந்திரேன். டவுண்லே போய் ஜாலியாக இருக்கலாம்' என்ருன். அவனையும் ஏசிப்பேசி அடித்துவிரட்டாத குறையாய் வெளியே அனுப்பி வைத்தாள் அவள்.

மகன் ராஜாவும் இப்படியேதான் இருப்பான் என்று அவள் எதிர்பார்த்தது இல்லை. ஆனல் அவனும் ஒருநாள் முன்னிறவில் வந்தான். அவளோடு சிரித்து விளையாட முயன்ருன். காதல் பாஷை பேசலானன். மிஞ்சிப் போவதற்குள், குட்டியாபிள்ளை வந்துவிட்டார்.

'உனக்கு இங்கே என்னடா சோலி? வெளியே போடா நாயே!' என்று சீறினர்.

அவன் வாலை ஒடுக்கிக்கொண்டு பம்மி ஓடும் பிராணி மாதிரி வெளியேறி விட்டான்.

ரஞ்சிதம் அழுதாள். மனசினுள் பலகாலமாகப் பொங்கிக் குமைந்த துயர வேதனையால் பொருமிப் பொருமி அழுதாள். அவர் ஆதரவாக அவளை அணைத்துக்கொண்டு அன்பு மொழிகள் பேசினர்.

'இதென்ன பிழைப்பு! எல்லோரும் கேவலாய் மதிக்கும்படி நான் எதையாவது தின்னு செத்துப்போறேன்' என்று விசும்பினள் ரஞ்சிதம்.

'ரஞ்சு அழப்படாது, இப்படி இருக்கதுனலேதானே இவனுக கேவலமா நெனைச்சுக்கிருனுக. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிடுறேன். சட்டப்படி ரிஜிஸ்தர் மேரியேஜ் பண்ணிப்பிடுவோம். அப்போ உன் அந்தஸ்து உயர்ந்து விடும்' என்று பிள்ளை உறுதிகூறி அவளைத் தேற்றினர்.

அவர் முடிவைக் கேட்க பெரிய ஆச்சி 'ஐயோ இப்படியும் உண்டுமா? நம்ம குலப்பெருமை என்ன ஆகிறது? குடும்பக் கௌரவம் என்ன ஆகும்' என்று ஓலமிட்டாள். அண்ணச்சியும் சித்தப்பாவும், மாமாவும், தம்பியும் கண்டித்து உபதேசிக்க வந்தார்கள். 'இப்ப என்னவாழுது, அது சிரிப்பாய்தான் சிரிக்குது. இனி ஒண்ணும் கெட்டுப்போகாது?' என்று கூறினர் குட்டியாபிள்ளை.

கூட்டுறவே நாட்டுயர்வு!    வளர்க கூட்டுறவு வணிகம்!!

# சிந்தாமணி

## கூட்டுறவு சிறப்பு அங்காடி

கோயமுத்தூர்—2.

(தாயகம்: கோயமுத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு விநியோகம் மற்றும் விற்பனைச் சங்கம் லிட்)

ஆண்டு விற்பனை: ரூ. 11-00 கோடி

தலைமையகம் : மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்

கிளைகள் : காந்திபுரம், கடைவீதி, பழையசுங்கம், ஒண்டிப்புதூர், உடுமலைப்பேட்டை.

மகளிர் கிளை (மகளிர் மட்டும்) : ஏ.டி.டி. காலனி, கோயமுத்தூர்-18

சிந்தாமணி நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் மற்ற கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள்:
திருச்சிராப்பள்ளி
ஈரோடு
சென்னை (பூங்கா நகர்)

ஜி. வி. இராமசாமி
காரியதரிசி.

ஜி. ஆர். கோவிந்தராஜுலு
தலைவர்.

Regd. No. TN/MSN/47 APRIL - 1975



வல்லிக்கண்ணன்

சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் இலக்கியத்திற்குத் தொண்டாற்றி வரும் வல்லிக்கண்ணன், ஒரு சிறந்த மனிதர்.

பல இலக்கிய ஏடுகளின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், ''மணிக்கொடி'' சகாப்தத்தையொட்டி தமிழை வளப்படுத்தும் புதுமை எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்.

நாவல், சிறுகதை நாடகம், புதுக்கவிதை, இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு, மொழி பெயர்ப்பு முதலிய பல இலக்கியத்துறைகளில் இவரது சாதனைகளைக் காணலாம்.

முழுநேர எழுத்தாளரான இவர், பல இளம் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும் இடையறாது உதவுகிறார்.

அன்பு, அடக்கம், புதுமையில் நாட்டம், பரந்த இலக்கியப் பார்வை, நடுநிலை நோக்கு, தோழமை உணர்வு, கடுமையான உழைப்பு — இவையே வல்லிக்கண்ணனின் சொத்துக்கள்.

விலை ரூபாய் ஒன்று